501

உமா

ஆசிரியர். ஜி. உமாபதி



சரும வியாதிகளுக்கு
சிராய்ப்புகள், வெட்டுகள், படை, சொரி, கரப்பான், கட்டிகள், கடி, விஷக்கடி, சதைத் தடிப்பு, முகப்பரு போன்ற இதர சரும உபாதைகளுக்கு
எக்ஸிமா
கட்டிகள்
பருக்கள்
வெட்டுக்காயம். புண்கள்
OINTMENT
Germex
ஜெர்மெக்ஸ்
குளோரோபில் கலந்தது
லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பார்மசூடிகல்ஸ் லிட். மதராஸ்-1

OFFICE OF THE
1 - MAY 1957
MADRAS

For

QUALITY DIAMONDS

EXQUISITE JEWELLERY

ARTISTIC SILVER WARES



M|s. T. GOVINDARAJULU NAIDU

DIAMOND MERCHANTS & JEWELLERS

28, NETAJI ROAD :: MADRAS-1.

★

Phone: 4818 **T. G. N.** Grams: "ALANKAR"

சென்னை மிட்லண்ட், மஹாராணி, ராஜகுமாரி,

மஹாலக்ஷ்மி (பெரம்பூர்)

மற்றும் தமிழ் நாடெங்கும்.

உத்திரவாதத்துடன் பயிற்சியளிக்கப்படும் : ஸ்தாபிதம் : 19-1-49

மாணவர்கள் தேவை

'B' குரூப் ஆரம்ப தேதி: 15-5-'57

(1) பிரி-யுனிவர்ஸிடி, (2) சர்வீஸ் கமிஷன், (3) மெட்ரிகுலேஷன், (4) பனாரஸ் இன்டர், (5) பனாரஸ் மெட்ரிகுலேஷன், (6) S. S. L. C., (7) S. S. L. C., (Oct-'57) (8) தமிழ் வித்துவான் வகுப்புகள், (9) B. O. L., (10) Book-Keeping, (11) போஸ்டல் கிளார்க், (12) போஸ்ட்மேன், (13) E. S. L. C., (எட்டாம் வகுப்பு) (14) கைத்தறி நெசவு, (15) விவசாயம், (16) கிராம மணியம், (17) கிராமக் கர்ணம், (18) ஹிந்தி ('57 ஆகஸ்ட்), (19) ஹோமியோபதி (தமிழ்), (20) Homoeopathy (in English), (21) பேஸிக் ஆங்கிலம் (A, B, C, D ஆரம்ப ஆங்கிலப் பாடம் முதல் 5-ம் பாரத்திற்குறிய ஆங்கிலப் பாடங்கள் வரை) முதலிய 1957-58-ம் வருட சர்க்கார் பரீட்சைகளுக்குத் தபால் மூலம் இலவசமாக பயிற்சி பெறும் மாணவர்கள் தேவை.

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்த ஆண்-பெண் இருபாலரும், ஹைஸ்கூலிலும்-பள்ளியிலும் இடையே படிப்பை நிறுத்தியவர்களும், S. S. L. C. தேறியவர்கள் - உத்தியோகத்தில் இருப்பவர்களும், மேற்கண்ட வகுப்புகளில் சேரத் **தகுதியுடையவராவார்கள்.**

மாதம் மும்முறை (5, 15, 25 தேதிகளில்) தபால் மூலம் வகுப்புப் பாடங்கள் அனுப்பி பயிற்சியளிப்பதற்கும், பரீட்சையின் வெற்றிக்கும் உறுதிப் பத்திரம் (Guarantee Certificate) அளிக்கப்படும். போதிய அனுபவமும்-மிகத் திறமையும் வாய்ந்த M. A., B. A., L. T., B. A., வித்துவான், டாக்டர் முதலிய நமது ஆசிரியர்களால் எளிய நடையில்-மிகத் தெளிவான முறையில் பாடங்கள் தயார் செய்யப்படுகின்றன.

கவனியுங்கள் :— சொந்த அச்சகத்துடன் 19-1-'49 முதல் ஆரம்பமான நமது வித்யாலயத்தில் ஒவ்வோராண்டும் பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் பயிற்சி பெற்று சர்க்கார் தேர்வில் வெற்றியடைந்து வருகிறுர்கள் என்பது நாடு நன்கு அறியும். 20-2-57 முதல் ஆரம்பமான நமது 'A' குரூப் வகுப்பில் பல நூறு மாணவர்கள் சேர்ந்து பயிற்சி பெற்று வருகிறுர்கள்.

ஆகவே, 15-5-'57 முதல் ஆரம்பமாகும் 'B' குரூப் வகுப்புகளின் முழு விபரங்களுக்கு உடன் 2 ஆறு நயேபைஸே ஸ்டாம்புடன் (தங்கள் முழு விலாசத்தையும் குறித்து) விண்ணப்பித்து சேர்ந்துக் கொள்ளவும்.

போலிக் கல்வி ஸ்தாபனங்களுக்கு சவால் !
நம் தாயகத்தின் தனிப்பெரும் தபால் இலவசக் கல்வி ஸ்தாபனம் !!

பாரதமாதா ஹிந்தி வித்யாலயம்,

(Govt. Regd. No. 3072 : : A No. 5.)

ரிஷிவந்தியம் S. O., தென்ஞற்காடு ஜில்லா.

இப்பொழுது
தென்னாடெங்கும்
வெற்றிகரமாக
நடைபெறுகிறது
சரவணபவா & யூனிட்டியின்
வணங்காமுடி
டைரக்ஷன்
P. புல்லையா, B.A.
ஸ்டுடியோ: நெப்ட்யூன்

இந்தியன் பாங்க், லிமிடெட்

(ஸ்தாபிதம் :  1907)

தலைமை ஆபீஸ்: மதராஸ்.

தென் இந்தியா முழுவதிலும், பம்பாய், கல்கத்தா, புது டெல்லி, கொழும்பு, சிங்கப்பூர், F. M. S. முதலிய இடங்களில் கிளை ஆபீஸ்கள் இருக்கின்றன.

மூலதனம்

அங்கீகரிக்கப்பட்டது	...	ரூ.	1,00,00,000
வழங்கப்பட்டது	...	ரூ.	72,00,000
செலுத்தப்பட்டது	...	ரூ.	63,83,130
ரிசர்வ் & இதர நிதிகள்	...	ரூ.	90,50,000
டெபாஸிட்டுகள் (31-12-56-ல்)	...	ரூ.	32·56 கோடிகள்

சகலவிதமான பாங்கிங் அலுவல்களும் கவனிப்படும்

D. P. பார்த்தசாரதி, B. A. (Hons), B. L., செக்ரட்டரி.

குனேகா மரிக்கொழுந்து

மற்றும் 16 ரகம் குனேகா செண்டுகள்

4 ரக சாம்பிள்களுக்கு மணியார்டரில் மட்டும் ரூ. 1 – 8 – 0 அனுப்பி ரெஜிஸ்டரில் பெற்றுக் கொள்ளுங்கள். வெளிநாடுகளுக்கு 12 பாக்கட்டுகள் ரூ. 24|-க்கு வி. பி. பி. யில் அனுப்பப்படும். ஆயிரக் கணக்கானவர்கள் திருப்தி அடைந்து மகிழ்ச்சியுடன் பலமுறை வாங்கி உபயோகித்து வருகின்றார்கள்.

Cunega

Manufacturing Perfumers,
53. Lattice Bridge Road, Adyar,
MADRAS–20.

உமா

ஆசிரியர்: ஜி. உமாபதி

பொருளடக்கம்

செடி 5 மலர் 1	மே, 57	ஏவிளம்பி - ௵ வைகாசி - ௴

ஐந்தாம் ஆண்டு விழா (தலையங்கம்) 11
வாழ்த்த ஆரம்பித்திருக்கிறார்கள் 12
அழிவுப் பாதையில் உலகம் 13
தங்கைக்கு (கடிதம்) 14
உங்களுடன் ஒரு கணம் 17
எங்கள் இதயங்கள் பேசுகின்றன 18
போலீஸ்காரன் மகன் (புதிய தொடர்கதை) 19
முச்சந்தியில் அறிஞர்கள் 21
யூதக் கதை 22
மாபெரும் தியாகம் 30
இவர்கள் எழுதுகிறார்கள் 33
மெய் 35
பெண்ணே, நீ பெரும் புதிர்! 40
இரகசியம் 42
இரவே, நீவா! (கவிதை) 46
பெண் மனம் 47
பாசமும் பாசியும் 49
வாடா விளக்கு (தொடர்கதை) 51
நம்பிக்கையாம் நம்பிக்கை! 57
ஜாதி ரோஜா (தொடர்கதை) 58
இலக்கிப் பட்டி மண்டபம் 73
வளரும் தமிழ் இலக்கியம் (மதிப்புரை) 77
வணங்காமுடி (விமரிசனம்) 78

'உமா'வில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே. சம்பவங்களும் கற்பனையே.

துணை ஆசிரியர்
பூவை எஸ். ஆறுமுகம்

இப்பொழுது தென்னாடெங்கும் வெற்றிகரமாக நடைபெறுகிறது

விஜயாவின்

மாயா பஜார்

தமிழ்

டைரக்ஷன்:
K.V. ரெட்டி. B.Sc. (HONS)



தயாரிப்பு: நாகிரெட்டி & சக்ரபாணி

ஸ்டுடியோ: வாஹினி

Uma May—'57

197222

என் கடன் பணி செய்து கிடப்பதே!

அன்புத் தாய் தந்தையர்களே! அருமைச் சகோதர சகோதரிகளே! நான் பிறந்த இந்த நான்காண்டுகளாக உங்கள் அன்பின் ஆதரவால் என்னை வளர்த்து, தமிழ் பேசும் எல்லா இல்லங்களிலும் அன்புடன் வரவேற்று இருக்கிறீர்கள். ஒவ்வொரு ஆண்டும் வாழ்த்துக் கூறி, ஐந்தாம் ஆண்டுக்கு கால் வைக்கும் அளவுக்கு என்னை ஆளாக்கி விட்டிருக்கின்றீர்கள். ஆனாலும் உங்களில் ஒரு சிலர்தான் என் தமிழ்ப் பணியை உணர்ந்திருக்கிறார்கள். இல்லையெனில், ஏறு நடைபோட வேண்டிய நான் இன்றும் ஏன் தத்தித் தத்தி நடந்து கொண்டிருக்கிறேன்? இன்னும் என்னை அறியாத தமிழ் மனைகட்கும் என்னை அறிமுகப் படுத்த நீங்கள்தான் முயற்சி எடுக்கவேண்டும்! அங்கு சென்று தமிழகத்தின் சிறப்பே நமக்குப் பெருமை என நினைத்து, அன்பும், தெய்வீகப் பண்பும் கலந்த இலக்கியங்களையும், பழங்காலச் சிறப்பு நிறைந்த ஓவியங்களையும், பகுத்தறிவு நிறைந்த அறிவுரைகளையும், பொது அறிவுடன் கூடிய கட்டுரைகளையும், இயற்கைச் சம்பவங்களோடு படிப்பினை புகட்டும் பல சிறுகதைகளையும் சொல்லி வருவதோடு, இன்றைய விஞ்ஞானம் ஆக்க வேலையில் பயன்படும் அளவுக்கு அரிய பெரிய விஷயங்களை விளக்கவும் பாடுபடுவேன்.

ஆரம்ப எழுத்தாளர்களையும், இளம் ஓவியர்களையும், உயரிய சொற்பொழிவாளர்களையும், கலைஞர்களையும் வளர்ப்பேன். எல்லா வளம் படைத்த—ஆம்; நவரத்தினங்கள், நவதானியங்கள், நவலோகங்கள் கிடைக்கும் இந்தத் தமிழகத்திலே நீர்வளமும், நிலவளமும், மலைகளும், மாபெரும் காடுகளும் மிகுந்திருப்பதால், இவைகளைப் பயன்படுத்தி, பலவித தொழிற்சாலைகளை அமைத்து, அதன் மூலம் நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும், அரசாங்கத்திற்கு அறிவுறுத்தவும் அஞ்சாது பணிபுரிவேன். எனவே என்னுடைய வளர்ச்சிக்கு இன்னும் அதிகமான ஆதரவு காட்டவேண்டியது உங்கள் கடமை அல்லவா!

தமிழினத்தின் வாழ்விற்காக பொருள் நஷ்டமும் உழைப்பு நஷ்டமும் ஏற்பட்டாலும், அவற்றையெல்லாம் நான் பொருட்படுத்தவே மாட்டேன். ஆனால், உங்களுடைய அன்பு நிறைந்த ஆதரவும் வரவேற்பும் என்பால் இருந்தால் போதும். நான் மகிழ்ச்சியுடன் வளர்ந்து, என் குரலைத் தமிழகமெங்கும் பரப்புவேன்.

பத்திரிகை தர்மத்தை விட்டுப் பண்பு ஒழிக்கும் பாதையிலே சென்றால்தான் அதிகமான அளவிற்கு வளர முடியும் என்ற இன்றைய நிலைமை என்றும் இருக்கும் என்று நான் எண்ணவில்லை. பண்டையத் தமிழகத்தின் பெருமையை மீண்டும் மக்கள் உணர ஆரம்பித்திருக்கின்றார்கள். எனவே, உண்மையான அன்பிற்கும் பண்பிற்கும் வரவேற்பு கிடைக்கும் என்று நான் திடமாக நம்புகிறேன்.

நன்றி மறவா,

'உமா'.

சிலம்புக்குச் சிறப்பு!

சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள், கட்டபொம்மனின் வீர விழாவோடு வ. உ. சி. நினைவு விழாவையும் துவக்கிவைத்ததோடு நில்லாமல், கற்பரசியும் வீராங்கனையுமான கண்ணகியின் கலாச்சார காவியத்தை வடித்தெடுத்த—சிலம்பிசைத்த இளங்கோ அடிகளின் திருவிழாவையும் துவக்கி வைத்தார். அத்திருவிழா இன்று நாடு முழுவதும் நல்ல தமிழர் வாழும் இடங்களில் எல்லாம் நாடகமாகவும், காவியமாகவும், இயலாகவும் இசையாகவும் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இப்படி தமிழரசுக் கழகம் தமிழகத்தின் நல்வாழ்வுக்காகவே பாடுபட்டு வருவதைப் பாரிலுள்ளோர் அறிவார்கள்.

அது ஒன்றால்தான் தமிழ் இனம் தலை நிமிர்ந்து வாழ வழி வகை செய்ய முடியும். அதற்கு அடிப்படையாக தமிழகத்தில் இந்த விழாக்களைத் துவக்கி கடந்த காலத் தமிழினத்தின் வீரத்தையும், விவேகத்தையும் எடுத்துக் காட்டி அதன் மூலமாக தமிழினத்திற்கு எல்லாத் துறைகளிலும் முதல் சலுகைத் தர வேண்டும்; உத்தியோகப் பரீட்சைகளும், ஆட்சியும் தமிழில் இருக்கவேண்டும்; முக்கியமான பதவிகள் எல்லாம் தமிழருக்கே தரப்பட வேண்டும்; இப்படிக் கேட்க தகுதி படைத்தது தமிழகம்; எந்தத் துறையிலும் திறம்பட செயலாற்றும் சக்தி படைத்தது தமிழினம்—என்று கோரிக்கை விடுத்தது. இதை நிறைவேற்ற மத்திய ஆட்சி உறுதுணையாக நிற்காமல், மீண்டும் தமிழ் மக்கள் மீது கல்லைத் தூக்கிப் போட்டிருக்கிறது.

வேறு எந்த மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கானாலும் இங்கு அவர்கள் எவ்வளவு நாள் இருந்தார்கள் என்றோ, அவர்களுக்கு என்ன குறை இருக்கிறது என்றோ விசாரிக்காமல் வேலை தரவேண்டும் என்று வேதனை தரும் அறிக்கை ஒன்றை விடுத்திருக்கின்றார்கள். அவர்களைத் தட்டிக்கேட்க தைரியசாலிகள் தமிழகத்திலே இல்லை என்ற இறுமாப்பு இருக்கலாம். காலம் முடிவு சொல்லும்!

இலங்கைத் தமிழருக்கு...

இலங்கை வாழ் தமிழக மக்களே! உங்களை நோக்கி இந்தியாவின் பிரதமர் வரப்போகிறார். நீங்கள் அந்த மாபெரும் தலைவனை மகிழ்ச்சியுடன் சந்தியுங்கள். ''இந்தியாவின் ஏகத்தலைவனே! எங்கள் தமிழினம் சென்று வாழாத நாடே இடையாது. ஆம்! ஒரு காலத்தில் வளம் பெற்ற நாட்டிலே வியாபாரத்திற்குச் சென்று பண்பை பரப்பிப் பகுத்தறிவும் தந்தோம். வளம் குன்றிய நாட்டை எங்கள் உழைப்பால் வளம் பெறச் செய்தோம். அங்கு உள்ளவர்களை வாழ வைத்து வாழ்ந்தோம். இன்று அதே நாட்டில் கூலிகளாக பஞ்சைகளாக, பராரிகளாக, நாடோடிகளாக நலங்குன்றி, வீரமும் தீரமும் கொண்டு கம்பீரத்தோடு வாழ்ந்த சிங்கத் திருக்கூட்டமாகிய நாங்கள் இன்று கள்ளத் தோணியாகக் காட்சி யளிக்கின்றோம்—இந்த இலங்கையிலே.

''நேரு பெருமகனே! உம்மிடத்திலே மாசற்ற மரியாதை வைத்திருக்கும் நாங்கள் அரசுதா என்று கேட்கவில்லை. வாழ்வு தா என்று கேட்கின்றோம். அதுவும் எங்களுக்கு கிடைக்காவிடில், நாட்டைப் பிரிப்பது நல்லதல்ல என்று எங்களுக்கு தெரிந்திருப்பதால் தான் இணைந்து வாழ ஆசைப் படுகின்றோம். அப்படி எங்கள் நியாயமான முயற்சிக்கு உங்கள் துணை கிடைக்காவிடில் நாங்களும் எத்தனையோ போர்க்களங்களில் எங்கள் உயிரைப் பணயம் வைத்து மற்ற இனத்துக்கு விடுதலைத் தேடி தந்திருக்கின்றோம். அப்படி தியாகப் பரம்பரையில் உதித்த நாங்கள் எங்கள் வாழ்வின் உயர்விற்காக எங்கள் உயிரை விட தயங்க மாட்டோம் என்று தயை கூர்ந்து தெரிந்து கொள்ளுங்கள்'' என்று பாரதப் பெருமகனுக்குப் பணிவோடு எடுத்துச் சொல்லுங்கள்.

அழிவுப் பாதையில் உலகம்

'ஏன் இந்த அணுகுண்டு?' என்று இந்த உலகமே கேட்கிறது! நாம் கேட்கின்றோம், 'ஏன் இந்த ஐக்கிய நாடு சபை?' என்று. அது இருந்தும் ஒன்றுதான், இல்லாமல் இருப்பதும் ஒன்றுதான்! அப்படி அது ஏதாகிலும் செயல்பட முயற்சித்தால், பாதிக்கப்பட்ட நாட்டின் பாதி ஜனத்தொகை அழிந்து பல கட்டிடங்களும், கல்லூரிகளும் மருத்துவசாலைகளும், ஆலயங்கள் அத்தனையும் தரை மட்டம் ஆன பிறகுதான் தலையிடுகின்றது. ஆதலால் ஐ. நா. சபை இருந்தும் ஒன்றுதான், இல்லாமல் இருப்பதும் ஒன்றுதான் என்று கூறுகின்றோம். 'போர்க் கருவிகள் என்னிடம் எல்லாவித சக்திகளும் பெற்றிருக்கின்றன. உன்னிடம் இருப்பதற்கு எவ்வளவு சக்தி இருக்கிறது?' என்று ஆதிக்கவெறி பிடித்த நாடான அமெரிக்காவும் அதற்கு ஈடாக ரஷ்யாவும் மற்றுமுள்ள ஏகாதிபத்திய நாடுகளும் ஆசியாவின் மீது அணுகுண்டு பரிசோதனை நடத்தி வருகின்றன. அணுகுண்டின் கதிர்கள் நீரிலே கலந்து விஷமாக மாறி வேதனையைத் தந்து கொண்டிருக்கின்றன, மக்களுக்கு. இதை மாற்றி அமைக்க தமிழகத்தின் தனிப் பெரும் தலைவர் ராஜாஜியும் இந்தப் பயங்கரக் குண்டைக் கண்டு பிடித்த விஞ்ஞானிகளும் வேதனையோடு 'ஏன் இந்த பயங்கர பூதத்தை உருவாக்கினோம்?' என்று சிந்தித்துக் கொண்டும், 'இந்த சோதனையை அடியோடு நிறுத்துங்கள்' என்று கதறிக் கொண்டும் இருக்கிறார்கள்.

தமிழ்ப் புலவருக்குப் பாராட்டு!

ஆங்கில ஆட்சியிலே தமிழ் என்றால், தமிழர் என்றால், தமிழ்ப் புலவன் என்றால் எள்ளி நகையாடியவர்கள், இன்று மீண்டும் தமிழ் புலவனை, பண்பின் பாதுகாவலனை பாராட்ட முற்பட்டிருக்கின்றார்கள். எல்லாத் துறையிலும் தகுதி பெற்ற டாக்டர் சேதுப்பிள்ளை அவர்களைப் பாராட்டிப் பெருமை தந்தார்கள். தமிழரசு இயக்கத்தாரும், தமிழினத்தைச் சார்ந்தவர்களும் அவரைப் பெருமையுடன் வாழ்த்தினார்கள். இன்னும் பல ஆராய்ச்சி நூல்களும் அறிவு நூல்களும் வழங்கவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதுடன், அவர் நீடூழிவாழப் பிரார்த்திக்கின்றோம். தமிழகத்தில் மீண்டும் முதற் சங்கம், கடைச் சங்கம், இடைச் சங்கங்களுக்குப் பிறகு, இன்றைய சங்கமாக இயங்கப் போகும் திருநாளையும் எதிர் பார்த்துக் காத்திருக்கின்றோம்.

அறிவுச் செல்வம் தந்தவர்

யாம் கண்ட இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் கொடை வள்ளல் அழகப்பர் போன்று, அறிவுச் செல்வங்கள் வளர வாரி இறைத்த வள்ளல் பெரும் மகனைக் கண்டதில்லை. ஆனால் அந்த பெருந் தகையாரை இழந்து விட்டோம். அவர் தந்த செல்வங்களில் எல்லாமே நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்பட்டது. அந்த முன்னேற்றம் போதாது எனக் கருதி, மக்கள் இதயத்திலே புதைந்து கிடக்கும் அறிவுச் செல்வங்களைத் தோண்டி எடுக்க ஆக்க வேலைக்குப் பயன் படுவதற்கு மரணப் படுக்கையில் இருந்த போதும் மனம் தளராது உழைத்த உத்தமர் அமரர் அழகப்பனர். அவர் உருவாக்கிய கல்விப் பணிகள் அனைத்தும் பரிபூரணத்துவம் அடையப் பாடுபட எல்லாப் பெரிய மனிதர்களும் ஒன்றுகூடி ஒத்துழைத்து, அவர் விட்டுச் சென்ற காரியத்தைச் சாதித்தால்தான் இப்படிப் பலக் கொடைவள்ளல்களை நாட்டிலே உருவாக்க முடியும். அப்படி இல்லாமல் அனுதாபச்செய்தி மட்டும் அள்ளித் தந்து அவர் ஆன்மா சாந்தி அடைய எண்ணுபவர்கள், அவர் விட்டுச்சென்ற வேலையையாவது முடிக்க முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறோம்.

உங்களுடன் ஒரு கணம்..!

சங்ககாலத் தலைவியின் பாங்கிலே ஒய்யார எழிலுடன்—புள்ளிமானின் துணையுடன் அமர்ந்திருக்கும் இந்தப் பாவையின் முகத்தில் தான் எத்துணை மகிழ்ச்சி! ஆம்; அவளுடைய மனத்திரையிலே ஒளிவடிவமாகக் காட்சி தந்து கொண்டிருக்கும் அவளது அருமைக் காதலன் நித்தமும் பாடும் இப்பாட்டை அவளால் எப்படி மறக்க முடியும்?

'ஞானவொளி வீசுதடி,
நங்கை நின்றன் சோதிமுகம்,
ஊனமறு நல்லழகே,
ஊறுசுவையே, கண்ணம்மா!'

கவியரசர் பாரதியின் நான்கு வரிகள் ஓவிய மன்னர் திரு மாதவனின் தூரிகை மூலம் ஓர் அற்புதப் பெண்ணைப் படைத்து விட்டது.

தமிழ் எழுத்துலகிலே ஜாம்பவானாகத் திகழும் திரு பி. எஸ். ராமையா புதிய தொடர்கதையை ஆரம்பித்திருக்கிறார். 'பூவை'யின் 'ஜாதி ரோஜா' இவ்விதழில் நிறைவு பெறுகிறது. உயிரும் உணர்ச்சியும் கலந்த கதாபாத்திரங்கள் வாசகர்களைப் பெரிதும் கவர்ந்திருக்கின்றனவென்பதை அவர்களது கடிதங்கள் தெரிவிக்கின்றன. திரு மாயாவியின் 'வாடா விளக்கு' திருப்பம் ஒன்றை நாடிச் செல்கிறது.

கடந்த பிப்ரவரி அட்டைப் படப் போட்டிக்கு வந்த நானூற்று முப்பத்தொன்பது சிறுகதைகளில் கீழ்க்கண்டவர்களின் கதைகள் தேர்வு பெற்றிருக்கின்றன. **அருள் செல்வநாயகம், விஜயா ராமனுதன், இளம்பாரதி, வேதா, செ. மரியநாயகம், கு. நாவேந்தன், பூ. பைந்தமிழன், ர. தங்கவேலன், ஜே. லலிதா, இரா. பெரியசாமி, எல். வி. ஆர். கோமதி.**

ஆசிரியர்.



'பூவை' எழுதிய ''ஜாதி ரோஜா'' நாடக ஆரம்ப விழாவை சென்னை இசையமுது நாடக மன்றத்தினர் தமிழ்ப் புத்தாண்டன்று, ஆசிரியர் உமாபதி அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடினார்கள். திரைப்பட எழுத்தாளர்கள் பி. எக்ஸ். ரங்கசாமி, ச. அய்யாப் பிள்ளை முதலானோர் கலந்து கொண்டார்கள்.

பண்பு வேண்டும்

அன்பு சகோதரி,

அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்த உங்கள் குடும்பத்திற்கு இப்படி ஒரு அவல நிலைமை ஏற்பட்டு இருக்கவேண்டியதில்லை. என்ன செய்வது...? உன் கணவர் வேலை செய்து கொண்டிருந்த தொழிற்சாலை இப்படி திடீரென்று மூடப்படும் என்று யார் கண்டார்கள்? என்னதான் உன் அன்புக் கணவர் மற்றவர்களிடத்தில் வேலை செய்ய முயன்றாலும், அங்கு கிடைத்து வந்த ஊதியம் இங்கு கிடைக்கவில்லை. வேலை அதற்கு காரணம், அவர் முன்பு செய்து கொண்டிருந்த தொழிற்சாலையில் அவர் வேலையின் திறனை உணர்ந்த முதலாளியின் நன் மதிப்பைப் பெற்றார். அதற்குப் பின்னேயும் விடா முயற்சியினால் மேலும் மேலும் முயன்று அந்தத் தொழிலகத்திற்கே தலைமை அதிகாரியாக நியமனம் பெற்றார். ஆனால் என்ன பயன்? உனக்குத்தான் தெரியுமே; அந்த ஸ்தாபனத்தைத் தோற்றுவித்த முதலாளி திடீரென்று மாரடைப்பால் இறந்து போன பிறகு, அவரின் இரு குமாரர்களும் ஒருவரையொருவர் போட்டியிட்டுக் கொண்டும், ஊதாரித்தனமாகச் செலவு செய்தும் அந்தப் புகழ் பெற்ற உயர்ந்த ஸ்தாபனத்தை – உனது அன்புக் கணவர் எவ்வளவோ சொல்லியும் கேளாமல் – அழிவுப் பாதையில் இட்டுச் சென்று இன்று பகிரங்க ஏலத்திற்கும் உள்ளாக்கி விட்டார்கள். அதற்குப் பின்னேதான் அங்கு வேலை செய்து கொண்டிருந்தவர்களுக்கெல்லாம் இத்தகைய பயங்கர விளைவு ஏற்பட்டிருக்கிறது.

இது என்ன! யூனியன்கள் என்ற பெயரால் பல சங்கங்கள் உருவாகி, அவர்களின் சுய நலத்தால் அமைதியாக நடந்து கொண்டிருக்கும் தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்களைத் தூண்டி, பின்னே அந்தத் தொழிற்சாலையே மூடப்பட்டு விடுகிறது. இப்படி பல விதங்களில் துன்பங்களை அனுபவித்துள்ளனர்.

இன்றும் பலர் தொழில் நுணுக்கத்தை அறிந்து, சிறிய கைத்தொழிற் சாலைகளை ஆரம்பித்து அறிவும் ஆற்றலோடும் நடத்துபவர்களுக்கு அரசாங்கத்தின் பொருளாதாரச் சலுகை கிடைப்பதில்லை. அதற்குப் பதிலாக உயர்ந்தவர்களையே மேலும் உயர்த்திக் கொண்டு போவதால்தான் இந்நாட்டில் இப்படி வேலையில்லாத் திண்டாட்டங்கள் பெருகி, குடும்பங்களிலே துன்பம் உண்டாகிறது. இதை யார் கேட்கமுடியும்?

அன்புச் சகோதரி! இவை யாவும் உணரும் சக்தி படைத்திருந்தும் நீ முன் போலவே உயர்தர வாழ்க்கை நடத்த வேண்டுமென்று பிடிவாதப் படுத்துகிறாய். வசதியிருந்த பொழுது உனது அன்பிற்காக உன் கணவர் அதற்கு ஆவன செய்து கொடுக்கவில்லையா? அவைகளை நினைத்துப் பார்க்க வேண்டாமா நீ?

உண்ண உணவுக்கும், உடுக்க ஆடைக்கும், இருக்க இடத்திற்கும் இருப்பதே நமது பாக்கியமென நீ கருத வேண்டும். ஆனால் இவை யாவும் நம்மிடமுள்ள நகைகளையும் விற்றுச் செலவு செய்வதன் மூலம்தானே கிடைக்கின்றனவென்று என்று நீ சொல்லலாம். இதற்குத்தானே அம்மா, நம் போன்ற குடும்பங்களில் ஏதோ வருவாய் வரும் நேரத்தில் இப்படி நான்கு நகைகளைச் செய்து வைத்துக் கொண்டு, எதிர்பாராமல் ஏற்படும் இந்த சறுக்கல் நேரங்களில் சரி செய்து கொள்ளுகிறோம்! ஆனால் இந்த நவநாகரிக காலத்தில் நகையணியாமல் வாழ்வது தான் நல்லது என்று ஒரு சாரார் சொல்லுகிறார்கள். ஆனால் இதில் இரு வகை உண்டு. மற்றொரு சாரார், இல்லாமையினால் இப்படி நடிப்பதும் உண்டு. இன்னொரு

சாரார் நிறைய இருப்பதினுல், அவர்களுக்குள்ள அந்த இயற்கை. யான மதிப்பால் இல்லாமல் இருப்பதும் உண்டு. ஆனுல் நாம் அப்படியல்ல. இத்தகைய நேரங்களில் அதைப் பயன் படுத்தி பண்போடு வாழவேண்டும். இந்த வாழ்வு இப்படியே இருந்து விடுமென்று நீ மனம் தளர்ந்து விடாதே. இந்தத் தளர்ச்சிக்குக் காரணம், உன் வாழ்க்கையின் ஆரம்ப முதலே வசதியான சூழ்நிலையிலே நீ வளர்ந்து விட்டாய்.

பல குடும்பங்களைப் பார்த்திருப்பாய். இயற்கையாகவே அழகும் ஆற்றலும் பெற்ற உன் போன்ற சகோதரிகள் வசதியற்ற நிலையில் வாழ்வதை நீ பார்க்கவில்லையா? அவர்களும் அமைதியோடுதான் இந்த நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறுர்கள். ஆனுல், அவர்களுக்கும் உனக்கும் உள்ள வித்தியாசத்தை நான் உணராமலில்லை. நீ உயர்ந்த நிலையிலிருந்து சற்றுத் தாழ்ந்த நிலையில் வரும்பொழுது, அந்தத் தாழ்வு மனப்பான்மையை உன்னுல் சகித்துக் கொள்ள முடியவில்லை. ஆனுல் அவர்கள் அந்த உயர்வின் தன்மையை அறிந்தாலும், தாழ்ந்த நிலையிலே வாழ்ந்து விட்ட காரணத்தினுல் இயற்கையாகவே அவர்கள் அமைதியோடு, அன்பு கொண்டும் வாழுகிறுர்கள்.

உங்கள் வாழ்வு மீண்டும் புது வாழ்வு பெற என்றும் புதுமையோடுபுதியகருத்துக்கள்கொண்ட உனது கணவர் மீண்டும் விடாது பாடுபட்டுக்கூடியசீக்கிரம் வெற்றியின் சிகரத்திற்கு வர முயற்சிப்பார். அந்த ஆற்றல் அவருக்கு உண்டு என்று நாம் அறிந்ததே.

சகோதரி, இப்பொழுதுதான் எனக்கு உன்னைப் பற்றிய நம் தமக்கை முன்பு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்ட சங்கதி ஞாபகத்திற்கு வருகிறது.

''தம்பி, நான் நமது சகோதரி வீட்டிற்கு உன் அத்தானுடன் சென்றிருந்தேன். நமது தங்கைக்குக் கண்ணிறைந்த கணவர் கிடைத்தது மட்டுமல்லாமல் அவர் பண்பாளராகவும் அதே சமயத்தில் நல்ல முறையில் பணத்தை

ஆசிரியர் : ஜி. உமாபதி
இம்மாதம் 14-ம் தேதி
பகல் 12 மணிக்கு
'தனக்கு வந்தால் தெரியும்'
என்னும் பொருள் பற்றி
ரேடியோவில் பேசுவார்.

சம்பாதிக்கும் திறமையையும் பெற்றிருக்கிறுர் என்பதை நான் நேரில் பார்த்தபோது பூரிப்பால் பெருமகிழ்ச்சியடைந்தேன். எனது பூரிப்பை புதிராக நினைத்து நான் ஏன் அவள் வீட்டிற்கு வரவேண்டும் என்று வாய் திறந்து கேட்காமலேயே எவ்வளவு தூரம் எங்களை குறைவாக நடத்த முடியுமோ அவ்வளவு குறைவாக நடத்த ஆரம்பித்தாள். அதை ஓரளவு புரிந்து கொண்ட நாங்கள் அவள் 'போ' என்று சொல்லுவதற்கு முன்னமேயே புறப்பட்டு வந்து விட்டோம். அதைப் பற்றி எனக்கு ஒன்றும் கவலையில்லை, தம்பி– நம்மைவிட இளையவள் தானே! உன் அத்தானைப் பற்றித்தான் எனக்குக் கவலை. உனக்குத்தான் தெரியுமே, யார் வீட்டிற்கும் போகாதவர்– எல்லா விதத்திலும் சுயமரியாதை இருக்க வேண்டும் என்று அதிகமாக வற்புறுத்தும் மனப்பான்மை உடையவர் என்று! அவர் மனம் புண்பட்டுக் குமுறலோடு கூறியது இந்த வார்த்தைதான்: 'நான் அப்போதே சொல்லவில்லையா? அவர்களின் நிலைக்கேற்ப நாம் வாழவில்லை. அங்கு போவது உசிதமன்று என்று சொன்னேனே நீ கேட்டாயா?'

அப்பொழுதுதான் நான் 'ஆண்டவனே! என் தங்கையின் பெருமைக்கு எங்களால் குறைவு ஒன்றும் வராமலிருக்கவும், அவள் தமக்கை என்று என்னை பகிரங்கமாகச் சொல்லவும் எங்களை ஓரளவு உயர்த்தக்கூடாதா' என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டினேன். என்னுடைய பிரார்த்தனையினுலோ, அல்லது

உன் அத்தானின் முயற்சியினாலோ அவர் ஒரு சிறு வியாபாரத்தைத் துவக்கினார். அது இன்று சிறுகச் சிறுக உயர்ந்து கொண்டு வரும் நிலையைப் பார்த்தால் அது மேலும் நன்றாக உயர முடியும் என்ற நம்பிக்கை உதயமாகி யிருக்கிறது. தம்பி, நீ தங்கை வீட்டிற்கு எப்போதாவது போனால் நான் இப்படி மனம் நொந்து கடிதம் எழுதினேன் என்று சொல்லாதே. நான் இதை எழுதியது கூட என் மனத்தில் உள்ள பாரத்தைக் குறைத்துக்கொள்ளத்தான். இல்லையெனில் இந்தக் குடும்ப விஷயத்தை மாற்றாரிடம் போய் சொல்லுவதோ, எழுதுவதோ நமது குடும்ப கௌரவத்தை நாமே தாழ்த்திக் கொள்வது போல் ஆகாதா என்று நினைத்துக் தான் உனக்கு எழுதினேன். தாயில்லாத அவனுக்கு நீயும் நானும்தானே துணை!'' என்று எழுதியிருந்த அந்த பாசம் நிறைந்த கடிதத்தில்தான் எத்துணை உயரிய பண்பு!

நமக்கு மீண்டும் நல்லகாலம்வராமல் போகாது என்று நம்பிக்கையோடு நீ வாழ வேண்டும். அப்படி அந்த வாழ்வு மறுபடியும் மலரத்தான் போகிறது. அப்போது உனது வாழ்க்கைத் தரம் உயர்ந்து விட்டது என்று நினைத்து, மற்றவர்களைத் தாழ்வாக நினைப்பது எவ்வளவு தவறு என்பதை மறந்து விடாதே! அதை நீ சரியாக புரிந்து கொள்ள வேண்டுமானால், நமது தமக்கை வீட்டிற்குச் சென்று பார். அவர்கள் இப்போது தோட்ட அமைப்போடு அழகான பங்களாவில் வாகன வசதியோடு வாழ்ந்து கொண்டிருப்பதை நீ தெரிந்து தான் இருக்கிறாய். நிறைகுடம் தளம்பாதது போன்றே நிறை மனதோடு குறை கூறாது புன்முறுவலோடு உங்களை வரவேற்று வாழ்த்து கூறுவார்கள்.

நீ நினைக்கலாம்; தாழ்ந்த நிலையில் வேறொரு வீட்டிற்குப் போவது நல்லதல்ல என்று. உன் போன்ற நெஞ்சம் உள்ளவர்கள் அவ்வாறு நினைப்பார்கள். அதைத்தான் நீயும் நினைக்கிறாய் என்று எண்ணுவேன். உன் வாழ்வு வளம் பெற்று, நீ உன் கணவனோடு கடற்கரைக்கு செல்லும் அந்தக் காட்சியைக் காண ஆவலுடன் காத்திருக்கிறேன்.

உன் அன்பு தமையன்.

குழந்தை மஞ்சுளாவின் நாட்டிய அரங்கேற்றம்

சென்னை ரசிக ரஞ்சினி சபையில் 23-ந் தேதியன்று குழந்தை மஞ்சுளாவின் பரத நாட்டிய அரங்கேற்றம் நடந்தது. அந்தக் குழந்தை பிரபல நாட்டிய நடிகை குமாரி வனஜாவின் மூத்த சகோதரர் திரு ராகவன் அவர்களின் அருந்தவப் புதல்வி என்றும் அத்துடன் அவரே அந்தக் குழந்தைக்கு நடன ஆசிரியராவார் என்றும் கேள்வியுற்றபோது, அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர். திரு ராகவன் அவர்களின் பண்பமைந்த பல நல்லகருத்துள்ள பாடல்களுக்கு பாவத்தோடுகூடிய நடன பயிற்சியைப் பார்த்து பெருமிதம் அடைந்தார்கள். இத்தகைய ஒரு நல்ல கலைஞரை கலையுலகம் ஏன் இன்னும் பயன் படுத்தவில்லை என்ற கேள்வி எல்லோருடைய மனத்திலும் எழுந்தது. மஞ்சுளா ஏழு வயது நிரம்பாத குழந்தையாவாள். ஆனால் அவள் நடன சக்தியோ தனி சக்தியாக இருந்தது. அவைக்கு வந்திருந்தவர்களும், தலைமை வகித்த திரு சிவாஜி கணேசனும், சின்ன அண்ணாமலை, ஜி. உமாபதி ஆகியோரும் குழந்தையை 'வாழ்க' என வாழ்த்தினார்கள்.

சிவாஜி கணேசன், மஞ்சுளா



நடன ஆசிரியர் C. D. ராகவன்

எங்கள் இதயங்கள் பேசுகின்றன

'உமா' சித்திரை இதழைக் கண்டேன். சங்ககால நூல்களைக் கண்டு, அதன் ஆசிரியரின் குண விசேஷங்களையும், திறனையும் நாம் நோக்குவது மரபு. அதைப் போன்று, 'காந்தமலை' என்ற 'நுண்மானி' கொண்டு தமிழ்த் தாத்தாவைக் காண இயலுகிறது. சங்க கால இலக்கியத்தே தமிழ் எழுத்தாளர்களுக்கு இருக்கவேண்டிய ஈடுபாட்டின் அவசியத்தை மேம்பட வலியுறுத்தியுள்ளார் கி. வா. ஜ. அவர்கள். மெய்யாகவே, 'பேட்டிக் கட்டுரை'யில் மிகுந்த அளவு தமிழ் மணம் கமழ்கிறது.

1947-ம் ஆண்டிற்குப் பிறகு தமிழ் எழுத்துலகில் 'தேக்க காலம்' என்று கூறிய எனது மதிப்பிற்குரியவர்களின் தவறான மதிப்பு, இந்த இதழ் 'உமா'வைக் கண்டேனும் மாறும் என்பது உறுதி.

த. கோதண்டராமன், திருப்பத்தூர்.

...பாரத சமுதாயத்தின் பைந்தமிழ் நாட்டு இன்பத் தமிழினத்தின் கொள்கையான 'சமதர்மத்தை' ஏந்தி, தவிர்க்க முடியாத கோரிக்கையான 'தனித் தமிழரசு' வேண்டி, கடமையுடன் போராடும் நமது 'உமா'தேவி நான்கு ஆண்டுகளைக் கடந்து ஐந்தாவதாண்டில் புகுகிருள் என்ற இன்பச் செய்தியைக் கேட்டு உள்ளம் மகிழ்ந்தோம்.

நாங்கள் கடல் கடந்து வாழ்ந்தாலும் — இனத்தாலும், பேசும் மொழியாலும், கொள்கையாலும் கன்னித் தமிழின் மக்கள் என்பதை 'உமா' தேவியாருக்குத் தெரிவித்துக் கொண்டு, ஐந்தாவதாண்டில் புகும் 'உமா' பல்லாண்டு வாழ இறைவன் திருவடிகளைச் சிரந்தாழ்த்தி வணங்குகிறோம்.

ரா. தாமஸ் செ. இருதயராஜன்,
இரங்கூன்.

....'உமா'வின் தலையங்கம் வெகு நன்றாக இருக்கிறது. ஆசிரியர் பதியின் 'தம்பிக்கு' அற்புதமான சிந்தனைக் கலவையாகும். பூவை, 'ஜாதி ரோஜா'வை அழகிய நடையில் நல்ல முடிவிற்கு அமைத்துச் செல்கிறார். கி. வா. ஜ. பேட்டிக் கட்டுரை மீண்டும் ஒரு முறை படிக்கத் தூண்டுகிறது.

தஞ்சை நா. ல. பதி, சென்னை-2.

'ஜாதிரோஜா'வில் புதுமை மிளிர்கிறது. 'தம்பிக்கு' போதனைக் கடிதம்.

கி. அனந்த நாராயணன்
சென்னை-24.

...அட்டைப் படத்தில் காதற் பெண்ணின் கடைக் கண் பணி தத்ரூபமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. ஓவியத்தின் சிருஷ்டிகர்த்தா கே. மாதவன் அவர்களுக்கு உளங்கனிந்த நன்றி. கிருஷ்ணுவின் 'கலையின் எல்லை'யைப் படிக்கும் பொழுது கண்களில் நீர் தளும்பி நின்றது.

தென்றல் ராமலிங்கம்,
புதுக்கோட்டை.

....'உமா'வின் ஐந்தாவதாண்டு பிறப்பின்போது என் நல் வாழ்த்துக்கள். 'உமா' நீடூழி வாழவேண்டும். அப்போதுதான் இளம் எழுத்தாளர்கள் முன்னேற முடியும்.

ஆர். நாராயணன்: 'மின்மினி',
நாகர்கோவில்.

உங்களுக்கு எங்கள் நன்றி!

போலீஸ்காரன் மகன்

பி.எஸ். ராமையா

1

மார்த்தாண்டம் பிள்ளையின் உடலிலே சுறுசுறுப்பு இல்லை. வழக்கபலத்தினால் அவருடைய கால்கள் ரோந்து வழியில் தளர் நடையில் தாமாக இயங்கிக் கொண்டிருந்தன. அவர் கையிலே பற்றியிருந்த சட்டத்தின் சின்னமான குறுந்தடி கூடச் சோர்ந்து தொங்கிக் கொண்டிருந்தது. அவருடைய உள்ளத்திலும் கூடத்தான் சுறுசுறுப்பு இருக்கவில்லை. அவருடைய சிந்தனையும் தளர் நடையாகத்தான் இயங்கிக் கொண்டிருந்தது.

அவர் ஒரு போலீஸ் ஜவான். சென்னைப் பட்டணத்து மொழியில் தாணாக்காரர். நகரத்தில் சட்டத்தையும்

அமைதியையும் நிலை நாட்டிக் காப்பாற்றும் பொறுப்பை வகித்த பெரிய இயந்திரத்தின் ஒரு துண்டு அவர். அவரிடம் ஒரு போலீஸ்காரனுக்கு இயல்பான தன்மைகளெல்லாம் நிறைந்திருந்தன. கோபம் என்ற உணர்ச்சியின் வேகத்திற்கு உள்ளாகாமலே அவர் அகப்பட்டவன் எலும்பு நொறுங்கும்படி அடிக்கும் வித்தையைக் கற்றவர். சமூகத்தின் கீழ்க் கடையிலிருந்த மக்கள் அவரைக் கண்டால் 'கிடுகிடு' வென்று நடுங்குவார்கள். நகரத்தின் பழைய கேடிகள், சட்ட விரோதமான வாழ்க்கை வழிகளில் ஈடுபட்டிருந்தவர்களெல்லாம் அவர் முன் எதிர்ப்படாமல் பதுங்கி ஒதுங்க முயலுவார்கள்.

அவர் நகரப் போலீஸில் சேர்ந்து இருபத்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. நகரத்தின் முக்கியமான வட்டாரத்தின் (சர்க்கிள்) தாணுக்களிலெல்லாம் இருந்திருக்கிறார். அந்த நீண்ட கால அனுபவத்தின் பயனாக அவர் மேலதிகாரிகளுடன் பழகவேண்டிய நெளிவு சுளுவுகளையெல்லாம் நன்றாக அறிந்திருந்தார். தாணுக்களுக்குப் புதிதாக மாற்றப்பட்டு வரும் சர்க்கிள், சப்–இன்ஸ்பெக்டர்கள் வந்த புதிதில் அவரிடம் 'ஆட் பூட்' என்று அதிகாரம் செய்வார்கள். ஆனால், இரண்டே நாளில் அவர்கள் மார்த்தாண்டம் பிள்ளையின் உள் இறுகலைப் புரிந்துகொண்டு அவரிடம் பேசவேண்டிய பக்குவத்தை அறிந்து கொண்டு விடுவார்கள்.

★ ★ ★

தமிழ் எழுத்துலகில் தமக்கெனத் தனியான – நிலையான ஓரிடம் அமைத்துக் கொண்டவர், 'பிரசிடெண்ட் பஞ்சாட்சரம்' ஆசிரியர் திரு ராமையா. குங்குமப் பொட்டு குமாரசாமியை அறிந்தவர்களுக்கு இப்போது போலீஸ் ஜவான் மார்த்தாண்டத்தை அறிமுகம் செய்விக்கிறார் நாவலாசிரியர்.

அவருடைய சகா ஜவான்களில் அவரைப் போன்ற பழம் பெருச்சாளிகள் சிலரைத் தவிர மற்றவர்கள் மரியாதை எல்லையிலிருந்தே அவருடன் பேசிப் பழகுவார்கள்.

மார்த்தாண்டம் பிள்ளை மற்றவர்களைத் தமது கருத்துக்கு, வழிக்குத் திருப்பியே பழகியவர். போலீஸ் ஸ்டேஷனுக்கு முறையீட்டுடன் வந்த பெரிய மனிதர்களைக் கூட அவர், "அது சரிதான், ஸார்! நான் சொல்றபடி செய்யுங்க. மற்றதெல்லாம் நடக்க வேண்டிய பக்குவத்துலே தானு நடக்கும். நீங்க போங்க," என்று அடக்கி அனுப்பி விடுவார். அவருடைய குரல், 'எதிர்த்துக் கட்சியாடுவது பலனளிக்காது' என்று தெளிவு படுத்திவிடும்.

அவருடைய சொல்லுக்கு, அவ்வளவு சக்தி வந்ததற்குக் காரணம் இருந்தது. அவரிடம் அல்ப புத்தி கிடையாது. போலீஸ் படையில் சேர்ந்த நாளிலிருந்து அவர் இருபத்து இரண்டு ஆண்டுச் சேவை காலத்தில் யாரிடமும் கை நீட்டிக் காலணு வாங்கியதில்லை.

அவருக்கு சர்க்கார் அளித்த மாதச் சம்பளம் மிக மிகக்குறைவு தான். அடி நாட்களில் அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு அவர் தமது மனைவி, பெற்றோர், ஒரு தம்பி ஆகிய நால்வரையும் காப்பாற்ற இயலாமல் தத்தளித்தார். அந்தத் துன்பத்திலிருந்து விடுபட இழிமுறைகளில் இறங்க அவர் மனம் இடம் கொடுக்கவில்லை.

நான்கு ஆண்டுகள் திணறித் திண்டாடி விட்டுத் தமது தம்பி கோதண்டனுக்கு இரண்டு பசுமாடு வாங்கிக் கொடுத்தார். அவனுக்குப் பால் வியாபாரம் கட்டிக் கொடுத்து அவனும், பெற்றோர் இருவரும் நிம்மதியாகச் சாப்பிட வழிசெய்து விட்டார். அந்த வியாபாரம் பெருகியது. அதோடு அவர் இரண்டு ரிக்ஷா வண்டிகளும் வாங்கி வாடகைக்கு ஓட்டினார்.

கடைசியாக, அவர் தமது பெற்றோர் வசித்த வீட்டு வாசலிலேயே ஒரு டீக்கடை வைத்து ஒரு மலையாளிப் பையனைப் பிடித்து வேலைக்குப் போட்டார். தாணாக்காரரின் மாடுகளும், ரிக்ஷாக்களும் டீக்கடையும் அவருடைய சம்பளத்தை விட மூன்று மடங்கு அதிக வருமானம் அளித்தன. அதனால் அவர் சிறுகச் சிறுக முதல் சேர்க்கத் தொடங்கினார்.

அவருடைய முதல் குழந்தை, மகன் ராஜாபாதர் பிறந்தபோது அவனுக்கு 'நெஸ்ஸில்ஸ்' புட்டிப் பாலும் மனைவி சொர்ணத்துக்கு டானிக்கும் வாங்கிக் கொடுக்க அவருக்கு வசதியிருந்தது. பின்னால் ஒருவர் பின் ஒருவராக அவருடைய பெற்றோர் கண்ணை மூடிக் கொண்டு போன பிறகு, தம்பி கோதண்டன் அவரையே எதிர்த்துப் பேசத் துணிந்தபோது, அவர் வியாபாரங்களை யெல்லாம் பக்குவமாகத் தமது மனைவி பேருக்கு மாற்றிக் கொண்டு விட்டார்.

"ராஜாபாதருக்கு அவங்க பாட்டன் விட்டுட்டுப் போன சொத்து. அதையெல்லாம் நிறுத்திடுவானேன்; அவர்பேருலே நடந்துட்டுப் போகட்டும்னு வச்சுட்டேன்," என்று அவர் அவசியம் நேர்ந்த நேரங்களில் அதற்குச் சமாதானம் சொன்னார்.

அந்த உபதொழில்களில் கிடைத்த வருவாயின் பலத்தில் அவர் ராஜாபாதரையும், மகள் நீலவேணியையும் படிக்க வைத்தார். ராஜாபாதரைக் கல்லூரிக்குக்கூட அனுப்பினார். அவன் இரண்டே வருஷத்திற்குப் பிறகு கல்லூரியிலிருந்து வெளியேறிவிட்டான். அவனை மறுபடி கல்லூரிக்கு அனுப்ப அவர் செய்த முயற்சிகள் எல்லாம் வீணாயின. அவன் பிடிவாதமாக 'மெக்கானிக்' ஆகப் போவதாகச் சொல்லிவிட்டு, மோட்டார் ஒக்கிடும் ஒரு பட்டறையில் பழி கிடக்கத் தொடங்கினான்.

நீலாவின் படிப்பை அவர் எஸ். எஸ். எல். ஸியுடன் நிறுத்தி விட்டார். அப்பொழுது அவளுக்குப் பதினேழு வயதாகி விட்டது. அவள் கல்லூரிக்குப் போகக்கூடாதென்று சொர்ணம்தான் குறுக்கே நின்றாள். "அவ இன்னம் படிச்சா அவளைக் கட்டிக்கறதுக்கு நம்ம எனத்துக்கு வெளியிலே யிருந்துதான் ஆள் வரணும்," என்று அவள் எச்சரித்தாள். மார்த்தாண்டம் பிள்ளைக்கு அவளை மறுத்துப் பேச வலுவில்லை.

சொர்ணத்தை மட்டுமல்ல; ராஜாபாதர், நீலாவையும் கூட மறுத்துப் பேச, தமது வழியில் நடத்தி வைக்க அவரால் இயலவில்லை. ராஜாபாதர் கல்லூரியிலிருந்து வெளியே வந்தபோதும் அப்படித்தான் ஆயிற்று. பிள்ளைக்கும் கோபம் வந்தது. பிறரை அடித்து உதைத்துப் பழகிய அவருடைய கைகளும் கால்களும் பறந்தன. நூற்றுக்கணக்கானவர்களைக் குடல் நடுங்க வைத்த அவ

முச்சந்தியில் அறிஞர்கள்!

சாதனை!

தலைவர் ராஜாஜி சென்னையின் பிரதமராக முதலில் இருந்த பொழுது ஏற்பட்ட ஒரு வேடிக்கையான சம்பவம் இது. அவருடைய சேவகன், பட்டுவாடா செய்ய வேண்டிய கடிதங்களின் மேல் தபால் தலைகளை ஒட்டும் பொழுது, ஒரு கடித உறையின் மேல் தலை கீழாகத் தபால் தலையை ஒட்டி யிருந்தான். ராஜாஜி இதைக் கவனித்து விட்டுக் குறிப்பிட்டார்: "ஏனப்பா, நாங்கள் எல்லோரும் மன்னர் ஆட்சியைக்கவிழ்க்க இவ்வளவு வருஷங்களாகச் சிரமப்படுகிறோம். நீ ஒரே ஒரு வினாடியில் அதைச் சாதித்து விட்டாயே? மன்னரைத் தலை கீழாகக் கவிழ்த்து விட்டாயே?"

* * *

பூதக் கதை:

விசித்திர விசிறி!

அன்று வெயில் பயங்கரமாகக் காய்ந்துகொண்டிருந்தது. திருமதி ஜிட்டிலுக்கு வெப்பம் தாங்க முடியவில்லை. கடைத்தெருவுக்குச் சென்று ஒரு பென்னி கொடுத்து ஓர் அழகான விசிறியை வாங்கிச் சென்ருள்.

ஆனல், சென்று சொற்ப நேரத்தில் விசிறி வாங்கிய யூதனின் கடைக்கு ஆத்திரத்துடன் அவள் திரும்பவும் வந்தாள். கையில் உடைந்த விசிறியைக் கண்டான் கடைக்காரன். "அம்மா, இதை எப்படி உபயோகித்தீர்கள் ?"

"விசிறியை எடுத்து முகத்துக்கு நேராக விசிறினேன்," என்ருள்.

"அதுதான் அம்மா, விசிறி முறிந்து விட்டிருக்கிறது. அப்படி விசிறுவது ஐந்து சத விசிறியால். ஆனல் இந்த ஒரு பென்னி விசிறியைக் கையில் பிடித்துக் கொண்டு, முகத்தைத்தான் விசிறிக்கு நேராக அசைக்க வேண்டும்," என்ருன் கடைக்காரன்.

வந்தவள் அசடு வழியத் திரும்பினுள்!

ருடைய குரல் வெடித்துக்கொண்டு புறப்பட முண்டியது.

ஆனல் அவருக்கு அதற்கெல்லாம் வலுவில்லாமல் போய்விட்டது. அந்தக் கோபம், ஆத்திரமெல்லாம் அவர் மேலேயே திரும்பின. "சே! இவங்களையெல்லாம் இவ்வளவு மீற விட்டது என் முட்டாத்தனம் தானே!" என்று அவர் தம்மையே கடிந்து கொண்டார்.

இப்போது நீலவேணியின் கலியாண விஷயம் அவரை மறுபடி அந்த மன நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டது. நீலாவுக்குப் பத்தொன்பது வயது நிறைந்து விட்டது. அவருடைய இனத்திலேயே எட்டிய உறவில் அவளைப் பெண் கேட்டு ஆள் வந்தது. பையனும் எஸ். எஸ். எல். ஸி தான். வகுப்பு வாரிச் சலுகையில் சர்க்கார் உத்தியோகத்தில் இருந்தான். சம்பளம், படி எல்லாமாகக்கூடி மாதம் எண்பத்து மூன்று ரூபாய் வந்து கொண்டிருந்தது.

சொர்ணம் வகையில் உறவினர். நல்ல மதிப்புள்ள குடும்பம். நீலாவை அங்கே கட்டிக் கொடுப்பதுதான் சிறந்தது என்று மார்த்தாண்டமும், சொர்ணமும் முடிவு செய்து விட்டார்கள். திடீரென்று நீலா தன் தாயிடம், "நான் அவனைக் கட்டிக்கப் போறதில்லே. அப்பா கிட்டக் கண்டிப்பாச் சொல்லிடு," என்று சொல்லி விட்டாள். அது போலீஸ் லயனில் அக்கம் பக்கம் நாலைந்து வீடுகளுக்குக்கூடப் பரவி விட்டது.

அன்று இரவு அவர் எட்டு மணி வேலைப் பொறுப்புக்குப் புறப்பட்ட போது அவர் வீட்டு விவகாரம் பக்கத்து வீட்டாருக்கும் தெரியும் என்பது அவருக்குத் தெரிய வந்தது. அதைப்பற்றி யோசித்துக் கொண்டே தாணுவுக்குள் நுழைந்தார். அந்த வாரம் அவருக்கு ரோந்து வேலை கொடுக்கப்பட்டிருந்தது.

இரவு மணி பதினென்றரைக்கு மேலிருக்கும். அவர் நீலாவைப் பற்றித்தான் சிந்தித்துக்

கொண்டே நடந்தார். நீலாவைப் பற்றி மட்டுமல்ல; அவள், ராஜாபாதர், சொர்ணம் ஆகிய மூவரையும்பற்றித்தான் அவர் அப்போது சிந்தித்துக் கொண்டிருந்தார். உயிருக்குத் துணிந்த போக்கிரிகள், திருடர்கள், சூதாடிகள், குடிகார வெறியர்களெல்லாம் அவரைக் கண்டு கிடுகிடுவென்று நடுங்கினார்கள். அவருடைய மேலதிகாரிகள்கூட அவரிடம் மரியாதை எல்லையைத் தாண்டத் துணியவில்லை.

ஆனால் இந்த மூவர் மட்டும் அவருடைய அதிகார எல்லைக்குள் கட்டுப்பட மறுத்தார்கள். அவருடைய சொந்த மனைவியும், மக்களும், அவருடைய சோற்றைத் தின்பவர்கள்; அவருடைய உழைப்பிலும் வருமானத்திலும் வளர்ந்தவர்கள்; அவர்களை அவரால் அடக்கி ஆள இயலவில்லை!

அது அவருக்கு ஒரு பெரிய புதிராக இருக்கவில்லை. அவரை எதிர்த்துப் பேச, அவர் வழிக்கு வர மறுப்பதற்கு அவர்களுக்கு எது பலமளித்தது என்பது அவருக்குத் தெரியும். அவர்கள் எதிர்ப்பை உடைத்துத் தமது ஆட்சியை நிலைநாட்டத் தமக்கு உறுதி வரவே மறுக்கிறதே என்பதுதான் அவர் மனத்தை வருத்தியது.

பூந்தமல்லி சாலையிலிருந்து 'லண்டன் தோட்டம்' ஆஸ்பத்திரி சந்து வழி போய் பார்னபி ரோட்டில் திரும்பி, அதைப்பற்றி யோசித்துக் கொண்டே சுறுசுறுப்பில்லாமல் நடந்து கொண்டிருந்தார் மார்த்தாண்டம் பிள்ளை. நீலாவை காலேஜில் படிக்க வைத்தால் இனம் விட்டு இனத்தில் அவளைக் கட்டிக் கொடுக்க நேர்ந்துவிடுமென்று சொர்ணம் எச்சரித்தாள். நீலாவை அவ்வளவு தூரம் படிக்க வைத்ததே தவறுதானே என்று அவர் தம்மைத் தாமே கேட்டுக் கொள்ளும் நிலைமை வந்து விட்டது. அவள் பள்ளிக்குச் சென்று வருவதைப் பார்த்தபோ

அடுத்த இதழில்

தொடர்கதைகள் :

போலீஸ்காரன் மகன்

பி. எஸ். ராமையா

வாடா விளக்கு

'மாயாவி'

*

ரேடியோப் பேச்சு :

'தனக்கு வந்தால் தெரியும்'

ஜி. உமாபதி

*

சந்தித்தோம்—சிந்தித்தோம்

வேம்பு—வாசவன்

*

நகைச்சுவை நாடகம் :

'புதுவீட்டுக்கு வந்திருக்கேன் !'

என். எஸ். சிதம்பரம்

*

பாப்பா உமா

கதை கதையாம்....!

'கார்த்திகை பாலன்'

*

கதாசிரியர்கள் ; கவிஞர்கள் :

சரஸ்வதி ராமநாதன்
ஸ்ரீவத்ஸன், புகழேந்தி
மு. வை. அபரஞ்சி
த. சிவப்பிரகாசம்
அன்புச் செல்வி
பீஷ்மன், ஆர். ஸி. மணி
பூவை எஸ். ஆறுமுகம்

தெல்லாம் அவருடைய நெஞ்சம் பூரித்துப் பொங்கிய அனுபவங்களெல்லாம் திடீரென்று அவருடைய நினைவுக்கு வந்தன. அவளும் ராஜாபாதரும் வீட்டில் 'டஸ்ஸு புஸ்ஸெ'ன்று இங்கிலீஷில் பேசிக்கொண்ட பெருமையை அவரும் சொர்ணமும் கண்களாலேயே பரிமாறிக் கொண்டதும் நினைவுக்கு வந்தது.

நீலா ஆறும் படிவத்தில் சேர்ந்த புதிதில் லயனுக்கு வந்திருந்த சட்டைக்கார சார்ஜெண்டிடம் அவள் இங்கிலீஷில் பேசியதும், அவள் படிப்பை நிறுத்திய பிறகு பக்கத்து வீட்டு நானூற்று ஐம்பத்தாறு நாயுடு மகன் தீனனுக்கு அவள் இங்கிலீஷ் 'பிரைவேட்' சொல்லிக் கொடுத்ததும், அதைப் பற்றி சொர்ணம் பெருமையாகப் பேசியதும் எல்லாம் அப்போது அவருடைய நினைவில் மிதந்தன.

குடும்பத்தினரிடம் தம்முடைய அதிகாரம் பலிக்காமல் போனதற்கு அவருடைய மனப் பாங்கிலேயே இருந்த குறைதான் காரணம் என்பதை அவர் ஒப்புக்கொள்ள மறுத்தார். ராஜாபாதரும் நீலாவும் சிறுகச் சிறுக அவருடைய நெஞ்சை இளக்கி அதை வளைத்துப் பிடித்துக் கொண்டு விட்டார்கள். சொர்ணமும் அவர்கள் வழியாக அந்தப்பலத்தைத் தேடிக் கொண்டு விட்டாள் என்றே அவர் கருதினர். அவர்களுக்கு அவ்வளவு தூரம் இடம் கொடுத்து விட்டது பெரிய தவறு என்று நினைத்தார். ஆனால் அந்தத் தவறைத் திருத்தி நேராக்க வழி....?

''சே! திரும்பத் திரும்ப இப்படியேயோசிச்சுக்கிட்டேயிருந்தா இதுக்கு முடிவுதான் என்ன? கழுதைங்க ரெண்டு நாளைக்குக் கதறிக் கண்ணீர் விட்டுக் கிட்டுக் கெடந்தாலும் கெடக்கட்டும்னு அடக்கி ஆண்டாத்தான் ஆச்சு,'' என்று அவர் ஊர்ந்து கொண்டிருந்த மன ஓட்டத்திற்கு 'பிரேக்' போட்டார். அதே சமயம் எதிரில் வந்த ஒரு ரிக்ஷா வண்டி அவர் கவனத்தைக் கவர்ந்தது. அதே நொடியில் அவருடைய உள்ளும் புறமும் சுறுசுறுப்படைந்தன.

ரிக்ஷா அப்போதுதான் தெரு விளக்கின் ஒளிப்பரப்பில் நுழைந்து கொண்டிருந்தது. வண்டியில் யாரோ ஒருவன் குடிபோதையில் துவண்டு கிடப்பது போலச் சாய்ந்து கிடந்தான்.

எதிரில் தாணுக்காரரைக் கண்டவுடன் ரிக்ஷாக்காரன் நிமிர்ந்தான். அவன் நடையிலும் 'கியர்' மாறியது. மார்த்தாண்டம் பிள்ளையின் கை தடியின்மேல் இறுகியது. அப்படியே நின்றார். வண்டி அவர் எதிரில் வந்தது. கையிலிருந்த குறுந்தடி ஒரு அரையடி உயரம் மேலே உயர்ந்தது. வண்டி நின்றது. பிள்ளை ரிக்ஷாவின் அருகில் போய் நின்று, ''டேய்!'' என்று வண்டிக்குள் முடங்கிக் கிடந்தவனை அதட்டினர்.

ரிக்ஷாக்காரன், ''காச்சலு சார். ஆஸ்பத்திரிக்கு இட்டுக்கினு போறேன்,'' என்றான்.

மார்த்தாண்டம் பிள்ளை கைத்தடியினால் வண்டியிலிருந்தவன் தலை மேலிருந்த முக்காட்டை விலக்கினர். அவன் முக்கி முனகிக் கொண்டு கசங்கிய குரலில், ''குளிர் ஜொரமுங்க!'' என்றான்.

அது மெய்யாகவே ஜுரம்தானா, அல்லது குடி மயக்கமா என்று பார்க்க வேண்டுமென்ற எண்ணம் எழுந்தது அவர் மனத்தில். ஆனால் அந்த நினைப்பு நீடிக்கவில்லை. தடியை இழுத்துக் கொண்டு திரும்பி மேலே நடந்தார்.

அந்தச் சம்பவம் அவர் மனமடியை மாற்றி விட்டது. அவருடைய சிந்தனை சுறுசுறுப்புடன் இயங்கியது. உடலிலும் பரபரப்புத் தோன்றியது. கால்களை வீசிப் போட்டு நடந்தார். அந்தப் புது வேகத்தில் அவர் இரண்டு பங்களாக்களைத் தாண்டி விட்டார். மூன்றாவது பங்களாவின் பின்புறச் சுற்று மதில்மேல் யாரோ ஒருவன் ஏறித் தெருவில் குதிக்க முயன்றதைக் கண்டவுடன், அவர் உடல்

மின்விசையால் இயங்கத் தொடங்கி விட்டது.

அந்தப் பங்களாவின் முன்வாசல் ஆர்ம்ஸ் ரோடில் இருந்தது. பெரிய விசாலமான மனைக்கட்டின் நடுவில் கட்டப்பட்டிருந்தது பங்களா. சுற்றிலும் அழகாகத் தோட்டம் வளர்க்கப்பட்டிருந்தது. பார்னபி ரோடின் புறமிருந்த வளைவுச் சுவரையடுத்து வரிசையாக மூன்று தூங்கு மூஞ்சி மரங்கள் செழித்து வளர்ந்திருந்தன. அதன் பயனாக தெரு விளக்குகளின் ஒளி அந்த எல்லைக்கு எட்டாமல், அந்த இடம் இருண்டு கிடந்தது.

மார்த்தாண்டம் பிள்ளை அவன் சுவரின் மேல் ஏறியதைப் பார்த்து விட்டார். ஆனால் அவன் அவரைப் பார்க்கவில்லை. அதற்குள் அவர் தமக்கு அருகிலிருந்த வாகை மரத்தின் மறைவுக்குள் ஒதுங்கி விட்டார். அந்த மறைவிலேயே அவர் மெல்ல மெல்ல நகர்ந்து அவன் குதித்தவுடன் பிடித்துக் கொள்ளும் எல்லையை யடைந்து விட்டார்.

அவர் வருவதைப்பற்றி ஏதும் அறியாமலே அவன் சுவரின் மேலிருந்து தெருவில் குதித்தான். அதே சமயம் பிள்ளை பாய்ந்து அவனைப் பற்றிக் கொண்டார்.

சுமார் இருபத்து நான்கு வயதடைந்த வாலிபன். கட்டுமஸ்தான உடலும் அதற்குரிய வலிமையும் பெற்றவன். பிள்ளையின் கை தன்மேல் பட்டவுடன் அவன் சீறிக் கொண்டு திரும்பினான். அவருடைய பிடியை உதறி எறிந்து விட்டுத் தப்பி ஓட ஒரு முண்டு முண்டினான். பிள்ளையின் அனுபவப்பட்ட கைகளின் பிடி இறுகியது. அவனை ஒரு குலுக்குக் குலுக்கி உதறி இழுத்தார். வேறு யாராக இருந்தாலும் அந்தக் குலுக்கலிலும், உதறலிலும் செயலிழந்து நின்றிருப்பான். ஆனால் அவன் அதை எதிர்த்துச் சமாளித்துக் கொண்டு மறுபடி முண்டினான்.

பிள்ளை, ''டேய்! சீ! சும்மா நில்லு!'' என்று உறுமி அவன் பிடரியின்மேல் ஒரு குத்து விட்டார். அந்தக் குத்துதான் அவனை அப்படி அடக்கி வசப்படுத்தி விட்டது என்று அவர் நம்பினார். ஆனால் அவனைப் பிடித்து அவர் மரத்துக் கப்பாலிருந்த தெரு விளக்கடிக்கு இழுத்துக் கொண்டு போனவுடன் தான் அவனை அப்படி அடங்க வைத்தது தம்முடைய குரல்தான் என்பதை அவர் உணர்ந்தார். அவருடைய கைப்பிடியில் அவருடைய மகன் ராஜாபாதர் மேல் மூச்சுடன் திணறிக் கொண்டு நிற்பதைக் கண்டு அவர் திடுக்கிட்டு விட்டார்.

''டேய்! நீயா? என்னடா இது?'' என்று பதறிய குரலில் கேட்டார் பிள்ளை. ராஜாபாதர் முகத்தைத் திருப்பி அவரைப் பார்த்தான். அவன் முகத்திலும் கண்களிலும் பயத்தின் குறைவோ அல்லது வெட்கத்தின் கூச்சமோ குன்றலோ சிறிதுகூட இல்லை.

பிள்ளை தடுமாறிய குரலில், ''இதெல்லாம் என்னடா? அது யார் வீடு?'' என்று மறுபடி கேட்டார். அவருடைய கைப்பிடி சிறிது தளர்ந்தது. ராஜாபாதர், ''கையை விடுங்க. வீட்டுக்கு வந்து எல்லாம் விவரமாச் சொல்றேன்,'' என்றான்.

பிள்ளை அவனை விட்டு விடத்தான் விரும்பினார். தமது மகன் அப்படி பிறர் வீட்டுச் சுவரேறிக் குதிக்கும் அளவுக்கு வந்து விட்டானே என்று அவர் நெஞ்சம் பதறியது. ''வீட்டிலே வந்து என்னடா சொல்றது? அது யார் வீடு? எதுக்காக உள்ளே புகுந்தே?'' என்று கேட்டுக் கொண்டே அவர் அந்த வீட்டின் புறம் திரும்பினார்.

பங்களாவின் மாடிமேல் பின்புறத் தாழ்வாரத்தில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. தாழ்வாரக் கைப்பிடிச்சுவர்மேல் முன்னேக்கிச் சாய்ந்து நின்று கொண்டிருந்தாள் ஓர் இளம் பெண். அவள் தெரு விளக்கடியில் நின்றவர்களைத்தான் கவனித்தாள் என்பது தெளிவாகத் தெரிந்தது.



அவள் பார்வையிலிருந்து அப்புறப்படுத்திவிட வேண்டும் என்று அவர் மனம் பறந்தது.

குரலைத் தணித்து, அவர், "உனக்கு ஏண்டா இந்தக் கீழ்ப் புத்தி வந்தது? பேசாமே வா என் கூட!" என்று சொல்லி அவனை முரட்டுத்தனமாக இழுத்துத் திரும்பினார்.

'பங்களா மாடி மேல் நின்ற பெண் எப்பொழுதுமுதல் கவனித்துக் கொண்டிருக்கிறாள்? இவன் சுவர் ஏறிக் குதித்ததைப் பார்த்திருப்பாளா? அப்படியிருந்தால் இவனை அவர்கள் வீட்டுக்கு இழுத்துக் கொண்டு போய் வீட்டில் ஏதாவது திருட்டு நடந்திருக்கிறதா என்று பார்க்கச் சொல்லுவது தான் முறையல்லவா? அப்படியின்றி இவனை விளக்கடிக்குக் கொண்டுபோன பிறகுதான் அவள் கவனித்தாளென்றால் வீண் வம்பை விலைக்கு வாங்கினதாக அல்லவா முடியும்?' என்று மறுபடி சுழன்று சுழன்று பாய்ந்தது அவர் மனம்.

அதை அறிந்தவுடன் அவருடைய உடல் கெட்டிப் பட்டது. தளர்ந்த கைப்பிடியும் மறுபடி இறுகியது. ஓர் இமைப்புக்குள் அவர் நெஞ்சகத்தில் ஒரு நூறு எண்ணங்கள் மின்வெட்டின. ராஜாபாதருக்கும் அந்தப் பெண்ணுக்கும் ஏதாவது தவறான உறவு இருக்குமோ? அவளுக்காகத்தான் அவன் சுவர் தாண்டிச் சென்று வந்தானோ? அல்லது, அவன் அந்த விட்டினுள் திருடுவதற்காகப் புகுந்திருப்பானோ? அவள் பார்த்துக் கொண்டு நின்றாள். ஆகையால் அவள் காண அவனை விட்டுவிடுவது தவறாகி விடும். ஆகையால் ஏதாவது நாடகமாடி அவனை

அந்தச் சிந்தனை வேகத்தில் அவர் பொன்னியம்மன் கோயில் பக்கத்திலிருந்து வந்து கொண்

டிருந்த ஜவான்கள் இருவரையும் கவனிக்கவில்லை. ராஜாபாதரை இழுத்துத் திருப்பி அந்தப் பக்கம் ஒரு எட்டு எடுத்து வைத்தவர் எதிரில் வந்த இருவரையும் கண்டு திடுக்கிட்டு நின்று விட்டார்.

அதே சமயம் எதிரில் வந்த ஜவான் நாராயண நாயர், ''என்னங்க நூத்தி நாப்பத்து நாலு! கேஸா?'' என்று கேட்டுக் கொண்டே விரைந்து வந்து அவரை நெருங்கினான். அவனுடன் வந்த மொஹிதீன்சா மற்றொரு பக்கத்தில் வந்து ராஜாபாதரை அணைத்துக் கொண்டு நின்றான்.

நாராயண நாயர் பிள்ளையின் பதிலுக்காகக் காத்திருக்கவில்லை. ராஜாபாதர் முகவாயைப் பிடித்து முகத்தை மேல் நோக்கி நிமிர்த்தினான். அதே சமயம் அவனுடைய வலதுகை முட்டி பிடித்து இறுகி மேல் நோக்கி உயர்ந்தது.

பிள்ளையின் குரல் 'டிரில் சார்ஜண்டி'ன் கட்டளை போல வந்தது. ''நாயர் அவனைத் தொடாதே!'' என்று அதட்டி அவர் மகனை இழுத்துக் கொண்டு பொன்னியம்மன் கோயிலின் புறம் நகர்ந்தார்.

நாராயண நாயரும், மொஹிதீனும் தயங்கி நின்றார்கள். மார்த்தாண்டம் பிள்ளையின் இயல்பு அவர்களுக்குப் புதிதல்ல. நகர போலீஸ் படையில் அவர் சேர்ந்த போது அவருக்குத் தற்செயலாகத்தான் நூற்று நாற்பத்து நாலு எண் வந்து வாய்த்தது. அப்போது அதில் ஏதும் விசேஷமிருப்பதாக அவருக்குப் படவில்லை.

பின்னால் நாட்டின் அரசியல் கிளர்ச்சி நிலைமைகளால் கிரிமினல் சட்டம் நூற்று நாற்பத்து நாலாம் பிரிவு ரொம்ப ரொம்பப் பிரபலமடைந்து விட்டது. அவருடைய சகா ஜவான்கள் மட்டுமன்றி இலாகாவில் மேலதிகாரிகள்கூட பிள்ளையைப் பார்த்து, ''என்னய்யா தடை உத்தரவு!'' என்று வேடிக்கையாகக் கூப்பிடுவது வழக்கமாகி விட்டது.

நகரில் கலவரம் ஏதாவது ஏற்படலாமென்ற வதந்தி பரவும் போதும், அரசியல் கிளர்ச்சி உயரும் போதும் இலாகாவில், ''மார்த்தாண்டம் பிள்ளை புறப்பட்டுடுவாரு!'' என்று நூற்று நாற்

பத்து நாலாவது பிரிவு உத்தரவு வரப்போவதைக் குறிப்பாகச் சொல்லுவார்கள்.

அவரை நன்கறிந்திருந்த நாயரும் மொஹிதீனும் அவர் அந்தப் பையனைத் தள்ளிக் கொண்டு போவதைப் பார்த்துக் கொண்டு நின்று விட்டுத் திரும்பினார்கள். மார்த்தாண்டம் பிள்ளை ஏதோ கேஸ் பிடித்து விட்டார். அதில் வேறு யாருக்கும் பங்கு கொடுக்க அவர் விரும்பவில்லை என்ற எண்ணம் அவர்கள் இருவர் நெஞ்சங்களிலும் எழுந்தது. அதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டே அவர்கள் வழியில் புறப்பட்டார்கள்.

மார்த்தாண்டம் பிள்ளையும் அவர்களைப்பற்றியேதான் சிந்தித்துக் கொண்டு ராஜாபாதரை நடத்திக் கொண்டு சென்றார். அந்த விட்டு மாடி மேலிருந்த அந்தப் பெண்ணும் ஜவான்களும் அவர் ஓர் ஆளைப் பிடித்ததைக் கண்டு விட்டார்கள். அவன் அவருடைய மகன்தான் என்பது அவர்களுக்குத் தெரியாது. 'இப்போது இவனை விட்டு விட்டால் என்ன ஆகும்? இவர்களிருவரும் ஸ்டேஷனுக்கு வந்து நீங்கள் பிடித்த கேஸ் என்னவாயிற்று என்று கேட்டால் என்ன பதில் சொல்லலாம்' என்று ஓடியது அவர் மனம்.

ராஜாபாதருடன் அவர் பத்து எட்டுக்கள்கூடப் போயிருக்கமாட்டார். பின்னுலிருந்து, "கனிஸ்டேபிள் ஸார், கொஞ்சம் நில்லுங்கள்," என்ற பெண் குரலைக் கேட்டு அவர் திடுக்கிட்டு நின்று திரும்பினர்.

ராஜாபாதர் ஏறித் தாண்டிய சுற்றுமதிலில் இருந்த வாயிலுக்கு வெளியே தெருவில் நின்றிருந்தாள் அந்தப் பெண். பக்கத்திலிருந்த தெரு விளக்கின் ஒளியில் அவளுடைய யௌவன வடிவ அழகு பளிச் சென்று தெரிந்தது. மகன் கையைப் பற்றிக்கொண்டு திகைப்புடன் நின்றார் பிள்ளை.

அந்தப் பெண் அவர்களை நோக்கி அசைந்தாள். மறுபடி அவள் தயங்கி நின்று, "ஒரு நிமிஷம், தயவு செய்து அவரை அழைத்துக் கொண்டு வாருங்கள்," என்றாள், கெஞ்சிய குரலில்.

பிள்ளை மகனைத் திரும்பிப் பார்த்தார். மௌனமாக அவனை இழுத்துக்கொண்டு அவள் நின்ற இடத்திற்குச் சென்றார். அதே சமயம் எதிர்ப் புறத்திலிருந்து நாயரும் மொஹிதீனும் அவளருகையடைந்தார்கள்.

அவளுக்குப் பதினெட்டு அல்லது பத்தொன்பது வயதிருக்கும். நல்ல வளர்த்தி. பெரிய கண்கள். மயக்கும் அழகு. ரோஜா நிற மேனி. அவள் நின்ற நிலையிலேயே அந்தஸ்து களை கட்டி நின்றது. அவள் முகத்தில் படர்ந்திருந்த கவலை அவள் குரலிலும் கலந்து ஒலித்தது. அவள் ராஜாபாதரை ஏற இறங்கப் பார்த்தாள். பிறகு பிள்ளையிடம் கெஞ்சிய குரலில், "இவர் என் மாமன் மகன். தந்தைக்கும் மகனுக்கும் ஒத்துவரவில்லை. இரவில் நேரம் கழித்து வீட்டுக்கு வருவதைக் கண்டால் மாமா ஏதாவது கூச்சல்போடுவாரென்று பின்புறம் சுவரேறிக் குதிக்க முயன்றிருக்கிறார். அதற்குள் நீங்கள் பிடித்துக் கொண்டு விட்டீர்கள். மகன் சுவரேறி வீட்டுக்குள் வரமுயன்றபோது போலீசில் பிடித்துக்கொண்டுபோய் விட்டார்கள் என்று அறிந்தால் மாமா மனது ரொம்பவும் நொந்து போகும். ஏற்கனவே அவர் உடல் நிலை சரியாக இல்லை. மூன்று மாதமாகப் படுத்த படுக்கையாகக் கிடக்கிறார். இந்தச் சமயத்தில் இந்த மாதிரி கேட்டால் என்ன ஆகுமோ! அவரை விட்டுவிடுங்கள் ஸார்," என்றாள். அதைக் கேட்டு பிள்ளை 'திடுக்கிட்டு விட்டார், அவர் நெஞ்சில் ஒரு பெரிய அதிர்ச்சி விழுந்தது போலிருந்தது' என்றெல்லாம் சொல்லுவது அவர் மன நிலையை ஆயிரத்தில் ஒரு பங்கு எடுத்துக் காட்டியதாகக் கூட இராது. அவர் மனம் ரேடியோ கதிரியக்க வேகத்தில் ஓடியது. ராஜாபாதர், அவருடைய மகன் அந்தப் பெண்ணின் மாமன் மகனா? — இது என்ன ஏதாவது

நாடகமா, அல்லது ஆள் மாறாட்டக் கோளாறா?

அவசரமாக மகன் முகத்தைப் பார்த்தார். அதிலிருந்த குளறலை அவர் தவறாகப் புரிந்து கொண்டு விட்டார். அந்தப் பெண்ணும், அவனும் ஒருவரை யொருவர் அறிந்தவர்கள்தாம். அவளுக்காகத்தான் அவன் முறை தவறிச் சுவரேறி அந்த வீட்டுக்குள் புகுந்திருக்கிறான். திரும்பி வந்தபோது அகப்பட்டுக் கொண்டான். கள்ளக் காதலன் திரும்பிச் செல்லுவதைக் கவலையுடன் பார்த்துக் கொண்டு நின்றவள் அவனைக் காப்பாற்ற ஓடி வந்து நாடகமாடுகிறாள் என்று அவர் முடிவு கட்டி விட்டார்.

அந்த நாடகத்தைக் கலைத்து உண்மையை அறிய அது நேரமல்ல என்று அவருக்குள்ளே ஓர் எச்சரிக்கை ஒலித்தது. நாயர், மொஹிதீன் இருவரையும் கழித்துக்கட்ட அப்போதைக்கு ஒரு வழி தோன்றி விட்டது. அதைப் பயன்படுத்திக் கொண்டு மகனைத் தப்ப விட்டு விட்டால், பின்னால் அதன் உண்மையை அறிந்து கொள்ளலாம் என்று சொல்லியது அவருடை பெற்ற பாசம்.

ராஜாபாதரிடம் அவர், "இந்தக் காலத்துப் பிள்ளைங்களை எந்தக் கடவுள் படைச்சு விடறானோ? பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளைங்கள்ளாம் இப்படி ராவுலே காம்பவுண்டுச் சுவரேறிக் குதிச்சு வீடு நொழைஞ்சு திருட்டுப் பயல்களுக்கு வழி காட்றீங்க; ஏன் ஸார் உங்களுக்கு இதெல்லாம்? பெத்தவங்களுக்கு நல்ல பேர் தேடிக் கொடுக்கிற வழியா இதெல்லாம்?.... இந்தாங்கம்மா! இவர் இந்த வீட்டுப் பையனாகவே இருந்தாலும் இன்னேரத்துலே சுவரேறிக் குதிக்கறது தப்புதான். இந்த வாட்டி நீங்க கவனிச்சு வந்துட்டீங்க. எப்போதும் இப்படியே இருக்காது. சொல்லி வைங்க," என்று சொல்லி ராஜாபாதரை சற்று பலமாகப் பிடித்துக் கதவின் புறம் தள்ளி விட்டார்.

அந்த வேகத்தில் தடுமாறித் தோட்ட வாசலருகில் போய் நின்று திரும்பிப் பார்த்தான் ராஜாபாதர். அந்தப் பெண், "ரொம்ப தாங்ஸ், ஸார். இனிமேலே இப்படி நேரவே நேராது. நான் பார்த்துக் கொள்ளுகிறேன்," என்று சொல்லிவிட்டு வாசலின் புறம் நகர்ந்தாள்.

ராஜாபாதர் வாசல் வழியை மறித்துக் கொண்டு நின்றான். அவனருகில் போய் அந்தப் பெண், "உள்ளே போங்கள் அத்தான்!" என்றாள். அவன் அப்போதும் நின்ற நிலையை விட்டு அசையாமல் மார்த்தாண்டம் பிள்ளையையே முறைத்துப் பார்த்துக் கொண்டு நின்றான்.

மகன் சுபாவத்தை அறிந்த பிள்ளை அவன் ஏதாவது உளறி விடப் போகிறானே என்ற பதட்டத்துடன், "போங்க ஸார் உள்ளே; பெரியவங்க பேரையெல்லாம் கெடுக்கறதுக்குன்னே வந்து பெறந்துடறீங்களே!" என்று குறிப்பாகச் சொல்லிக் காட்டினார்.

ராஜாபாதர் 'விருட்'டென்று திரும்பி சுவர் வளைப்புக்குள் புகுந்தான். அந்தப் பெண் அவன் பின்னாலேயே சென்று கதவை அடைத்துத் தாழிட்டுப் பூட்டிய சத்தம் வந்தது.

மார்த்தாண்டம் பிள்ளை எதிரில் நின்ற நாயரையும் மொஹிதீனையும் நிமிர்ந்து பார்த்துப் புன்னகை செய்தார். மொஹிதீன் சா "பெரிய கேஸ் பிடிச்சுட்டீங்கன்னு பாத்தேன். ஆனா விட்டுட்டீங்களே? பையனை ராவு ஒரு நேரமாவது கொண்டுபோய்ப் படுக்க வச்சிருக்கணுங்க," என்றான்.

மார்த்தாண்டம் பிள்ளை, "குழந்தை குட்டிங்களைப் பெத்துத் தள்ளிட்டு பணம் சேக்கறதே குறியா இருந்துடற பெரிய மனுஷாள் கதியெல்லாம் இதுதான்! வாய்யா, நாயர்; டீ குடிச்சுட்டுப் போகலாம். நீயும் வாய்யா," என்று சொல்லி விட்டு நகர்ந்தார்.

மற்ற இருவரும் பின் தொடர்ந்தனர்.

(தொடரும்)



மாபெரும்

அருள் செல்வநாயகம்

பெண்ணைப் புதிராக்குகிருர் திரு நெடுமாறன். அழகான சொல்லடுக்கு. இங்கே புதிர் என்ற சொல்லினின்றும் பெண் விடுதலை பெறுகிருள். சிங்களத்திவு தந்த எழுத்தாளர் இவர்.

அனுரதபுரம் அமைதியாகத் துயின்று கொண்டிருந்தது.

"அசோகமாலா!"

"அப்பா!...."

"ஒதுக்கப்பட்டவர்களான நாம் வேதனையைத்தான் தினமும் கொண்டு வாழ்கிருேம். பார், இந்தப் பொல்லாத வியாதி என்னை இரண்டு நாட்களாகப் படுக்கையிலே கிடத்தி விட்டது. நாளைக்காவது குணம் கிடைக்க வேண்டும்."

"நாளைக்கு என்னப்பா?...."

"வேலைக்குப் போக வேண்டுமே, குழந்தாய்!...."

"இந்த நிலையிலா? வேண்டாம் அப்பா. பொழுது புலர்ந்ததும் போக வேண்டாம். இன்னும் நாலைந்து நாட்கள் கழித்துச் செல்லுங்கள்."

"அதெப்படி முடியும். மகளே? நமக்காக இடப்பட்டுள்ள கடமையைச் செய்துதானே ஆக வேண்டும்? இது அரசாங்க ஆணையல்லவா? மாமன்னர் கைமுனு இட்ட கட்டளையல்லவா? குழந்தாய், நாம் தாழ்த்தப்பட்டவர்கள். தீண்டாதவர்கள். உயர்ந்த மக்கள் தங்களது சகல தேவைகளையும் நம்மைக் கொண்டே நிறைவேற்றும் போது, நம் இனத்தவருக்கு ஓய்வுதான் ஏது; ஒழிச்சல்தான் ஏது? அதனல்தான் நோய் என்று பாராமல் வேலைக்குச் செல்ல வேண்டிய கடமை நமக்கு வந்திருக்கிறது....!"

''இந்த நிலையில், நீங்கள் செல்ல வேண்டாம், அப்பா; உங்களுக்காக நான் தினமும் செல்கிறேன் அப்பா!''

மாலைக் கதிரவன் மேற்கு வானத்தில் வெகு உல்லாசமாகப் பவனி வந்து கொண்டிருந்தான். மனத்தைக் கவரும் மாலைப் பொழுதிலே தன்னை மறந்து ஈடுபட்டுக் கொண்டிருந்தான் மாமன்னர் கைமுனுவின் ஏக புதல்வனான இளவரசன் சாலி.

ஒருகாலத்திலே கைமுனு இரத்த வெறி பிடித்து அலைந்தான். அனுரதபுரத்திலே தமிழன் ஆணை செலுத்துவதா என்று சீறினான்; சினந்தான். படை திரட்டி வந்து மன்னவன் எல்லாளனை எதிர்த்தான். இருவருக்கும் தனியாகப் போர் நடந்துகொண்டிருக்கையில், எல்லாளன் பட்டத்து யானையிலிருந்து தவறிக் கீழே விழுந்தான். பகைவன் தான் தன்னுடைய காலடியிலே கிடக்கிறானென்று எண்ணிய பட்டத்து யானை, தனது காலை வைத்து நசுக்கிக் கொன்றது. அதனால் கைமுனு வெற்றி வீரனானான். அப்பொழுதுதான் கைமுனுவின் இரத்த வெறி தணிந்து பச்சாதாப உணர்ச்சி பெருக்கெடுத்தோடியது. 'ஓர் உயிரையேனும் ஆக்கச் சக்தியற்ற நான், ஆயிரக் கணக்கான உயிர்களை வதைத்துவிட்டேனே'யென்று வருந்தினான். ''இனிக் கைமுனு இரத்தவெறி பிடித்தவனல்ல; அகிம்சா மூர்த்தியான புத்ததேவனது கொள்கையைப் பரப்பும்

தியாகம்

உமா

சந்தா விவரம்

இந்தியா, சிலோன்

ஓர் ஆண்டிற்கு ரூ. 3-00
ஆறு மாதத்திற்கு ரூ. 1-50

வெளிநாடுகளுக்கு

ஓர் ஆண்டிற்கு ரூ. 4-00
ஆறு மாதத்திற்கு ரூ. 2-00

ஆறுமாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. வி. பி. பி. மூலம் இதழ்கள் அனுப்பப்படமாட்டா.

தனிப்பிரதி 25 நயாபைசா

'உமா' :: சென்னை-1.

அடியவனுவேன்,'' என உறுதிபூண்டான். அதன் பயனுக அனுராதபுரத்தைப் புத்தர் மதத்தின் உறைவிடமாக்குவதற்காக உழைக்கலானுன். அவனது பெரும் உழைப்பிலே வருங்கால மன்னனுன சாலியும் பங்கு கொண்டு புத்த மதத்தை வளர்க்க வேண்டும் என்று எண்ணினுன். அந்த எண்ணத்தைக் கைமுனு தன் மைந்தன் சாலியின் மனத்தாமரையில் செம்மையாகப் பதித்து விட்டான்.

அன்று அரண்மனையின் மேல் மாடத்திலிருந்தவாறு இயற்கையைப் பருகிக் கொண்டிருந்த சாலியின் செவியிலே, இன்னிசை இழைந்து வந்து விழுந்தது. கானத்தின் இனிமையிலே சாலி மயங்கினுன். கண்களை மூடியவாறு கானத்திலே அவன் ஒன்றுபட்டுப் போனுன். 'இத்தகைய தெய்வீக கானத்தை இதுவரை கேட்கவில்லையே! அரண்மனைப் பாடகர்களில் இத்தகைய குரல் உடையவர் யாரும் இல்லையே! யாரோ புதியவர் ஒருவர் இசைக்கிருர். புதுமையான இன்னிசையை வழங்குகிருர். குரலின் இனிமையினுல் ஒரு பெண் போலத் தோன்றுகிறது' என்ற வகையிலே சாலி எண்ணமிடலானுன். மனம் எண்ணமிட்டுக் கொண்டிருந்தாலும், உள்ளம் இன்னிசையிலே சொக்கிக் கிடந்தது.

தென்றலிலே தவழ்ந்து வந்த கானம் தடைப்பட்டது. அப்பொழுது சாலி கண்களைத் திறந்து தோட்டத்தை நோக்கினுன். மிகவும் அதிசயப் பட்டான்.

காதல் வயப்பட்டு அப்போதே தனது உள்ளத்தை அவளிடம் திறந்து காட்ட வேண்டும், அவளது காதலைப் பெற வேண்டுமென்ற வேகத்தைக் கட்டுப்படுத்த சாலியால் முடியாது போகவே, இருக்கையை விட்டெழுந்து, தோட்டத்துக்கு விரைந்தான்.

தன்னை நோக்கி வந்து கொண்டிருந்த இளவலை ஏறிட்டு நோக்கிய அவள் திடுக்கிட்டாள். 'பட்டாடையும் கிரீடமும் அணிந்து வருவது இளவரசரேதான்; தனது வேலையில் ஏதாவது குறை கண்டு விட்டாரோ, அல்லது அப்பா ஏன் வேலைக்கு வரவில்லையென்பதைக் கேட்கத்தான் வருகிருரோ'-இவ்வாறு எண்ணிய அவள் ஒரு புறமாக ஒதுங்கி நின்ருள்.

காதல் வேகத்தினுல், மன்மதனின் மலர்ப் பாணங்களால் அடிபட்டு வந்த சாலி, அவளது மென் கரத்தை அன்புடன் பற்றினுன். அதைக் கண்ட அவள் துடி துடித்தவாறு கைகளை உதறித் தள்ளிவிட்டு, ''என்னைத் தொடாதீர்கள், இளவரசே!'' என்ருள்.

''மாலா, உன்னைத் தொடுவது மட்டுமல்ல; என் இதயத்து ராணியாகவும் ஆக்கப் போகிறேன். உன்னைக் கண்ட அந்தக் கணமே, என்னுள்ளம் உன்னைச் சரணடைந்து விட்டது. என் காதல் ஜோடி நீதான்.''

''அபசாரம், தகாத வார்த்தைகளைச் சொல்லாதீர்கள். நான் தீண்டாதவள்; தாழ்த்தப்பட்டவள்....!''

''அப்படி ஒரு வகுப்பு இந்த நாட்டில் இருக்கிறதா? குலநெறி

மனிதர்கள் வகுத்துக் கொண்டது தானே? நீ தாழ்ந்தவளாக அல்ல, வேறு எவ்வகையாக இருந்தாலும் பாதகமில்லை. நீ கன்னிப் பெண். நான் வாலிபன். சகல நியதிகளின் மீதும் நம்பிக்கை வைத்துச் சொல்கிறேன். நீதான் என் இதய ராணி....!''

''இளவரசே, ஆசை மயக்கத்தில் சொல்லாமல் சிந்தித்துப் பாருங்கள். இந்த நாட்டின் வருங்கால மன்னவர் நீங்கள்....''

''அது எப்போதே முடிவானது. மாமன்னர் கைமுனுவுக்கு மகனைகப் பிறந்த அந்தக் கணமே நான் இளவரசன் தானே....?''

''நாட்டு மக்களை நல்ல வழியில் அழைத்துச் செல்லவேண்டிய தாங்கள், அபலைப் பெண் ஒருத்தியிடம்....''

''என்னை நீ இன்னும் புரிந்து கொள்ளவில்லை. உன்னிடம் காமத்தை எதிர்நோக்கி நான் வரவில்லை. ஆசையைத் தூண்டும் உன் அழகைச் சிதைத்துச் சின்னுபின்னமாக்க நான் வரவில்லை. காமம் கழிந்த பின் கைவிட்டெறியும் காமுகனுக நான் வரவில்லை. தூய்மையான காதலில் கட்டுண்டு உன் அன்பைப் பெறத்தான் வந்தேன்.

''தூய்மையான உன் காதல் ஒன்று மட்டும் கிடைத்தாற் போதும். மற்றபடி இந்த நாடோ, மணிமகுடமோ எனக்கு வேண்டியதில்லை. உன்னைக் கசக்கி முகர்ந்து பாழாக்கி விடுவேனே என அஞ்சுகிருயா? அரச பரம்பரையைப் பற்றி மக்கள் சிலர் அறிந்திருப்பது போல் நீயும் எண்ணுகிருய். ஆனல் சாலி அதற்கும் விதிவிலக்கு. உன்னை என் கண்ணின் கருமணி போல் பாதுகாப்பேன்; என் காதலை நீ மறுத்தால், இந்த அனுரதபுரத்தையே நான் துறந்து விடுவேன்....!''

''வேண்டாம், இளவரசே! கைமுனுவின் ஒரே மகனைத் துரத்திய பழி எனக்கு வேண்டாம். இளவரசரின் காதலை ஏற்றுக் குல கௌர

இவர்கள் எழுதுகிருர்கள் :

சி. சு. செல்லப்பா

யானை குதிரை, வண்டியோடு அத்தானையும் 'பொம்மை' ஆக்கிய சரஸா, கடற்கரையில் தான் கட்டி அழகு பார்த்த 'மணல் வீட்'டை அலை விழுங்கியதற்காக அதைச் சபிக்கும் ஜெயம், அயல் வீட்டு வாசலில் வைத்திருந்த 'மார்கழி மலரை'த் திருடி பிற குழந்தைகளால் தாக்கப்பட்டு, ஆசை, ஏமாற்றம், அவமானம் ஆகிய உணர்ச்சிகளுக்கும் ஆளான சக்தி, கண்ணுமூச்சி விளையாட்டில் பல குழந்தைகளிடையில் மீனுவிடம் மட்டும் விசேஷப் பரிவும் சிரத்தையும் காட்டிய 'நொண்டிக்குழந்தை' ஞானம், அப்பாவின் கோபத்திலிருந்து அண்ணன் கிட்டுவைத் தப்புவிக்க, அவனுக்காகக் கணக்கு செய்து தந்த தங்கை ராதா—இவை குழந்தைகளின் மனேபாவத்தையும் உள்ள உணர்ச்சிகளையும் நல்ல முறையில் ருசி பிசகாமல் வெளிக்காட்டும் சிருஷ்டிகள். இவர் கண்ணகி கதையைக் 'கனவின் எதிரொலி'யாகக் காட்டியிருப்பவர்.

'சிறுகதை ஓர் உணர்ச்சியின் முழு உரு; ஒரு சம்பவத்தின் முழுச் சித்திரம்' என்பதில் நம்பிக்கை கொண்டு, அதற்கேற்ப தம் கதைகளை அமைப்பவர் சி. சு. செ.

எழுத்தாளன் ரவியை மணந்த ரேவதி முதல் இரவன்று 'காத்திருந்தாள்' என்று 'சிட்டி' எழுதிய கதையை வைத்துக் கொண்டு ரேவதியை 'அவசரப்பட்டவள்' ஆக்கிய சி. சு. செ. வை மறக்க முடியாது. 'பகடி' என்ற புனை பெயரில் எழுந்த அவரது நயமான படைப்புக்கள் தரமான ஹாஸ்யத்தில் தோய்ந்தவை.

எஸ். எஸ். சுப்பிரமணியன் பி.காம்

சென்னை-5.

வத்தைக் கெடுத்த அபவாதம் எனக்கு வேண்டாம்!''

''என் அன்பே, நீ அப்படிச் சொல்லாதே! நம்மைப் போல் பாக்கியசாலி வேறு யாரும் இருக்க மாட்டார்கள்,'' என்றவாறு அவளை மாமன்னன் மகன் தன் மார்பிலே அணைத்துக்கொண்டான்.

முதுமையின் கோரப்பிடியிலே சிக்கிய கைமுனு, தன் ஒரே மகன் சாலியின் திருமண வைபவத்தைக் காண முயன்றார்.

'தந்தை தனது மனக் கருத்தை ஏற்கமாட்டார்' என்ற ஓர் எண்ணம் சாலிக்கு இருந்தாலும், எதற்கும் நேரடியாகக் கேட்டுவிடுவது என்று திடப்படுத்தினான்.

தீண்டாத குடியில் அவதரித்த அழகி அசோகமாலாவின் பால் தான் கொண்டொழுகிய உண்மைக் காதலை அரசனிடம் வெளியிட்டான் அவன்.

''உன் விருப்பை மக்கள் மதிக்க வேண்டும்; மக்கள் வழியில்தான் நீ செல்லவேண்டும். மக்களுக்காகத்தான் மன்னவனேயன்றி, மன்னவனுக்காக மக்களில்லை. ஆகவே உன் காதல் அழியவேண்டும். ஈழ நாட்டின் நலனுக்காக உன் காதல் அழிந்துதான் ஆகவேண்டும்.''

''என் மாலாவை அடைவதற்குக் குறுக்காக இருக்கும் இளவரசுப் பட்டம் எனக்கு வேண்டாம். என் காதல்ராணியை அணைய இடராக இருக்கும் இளவரசுப் பட்டம் வேண்டவே வேண்டாம். எனக்கு என் காதல்தான் லட்சியம். அரண்மனை வாழ்வும், ஆடம்பரமும், மணி மகுடமும் எனக்கு வேண்டாம். என் மாலா மட்டும் எனக்குக் கிடைத்தாற் போதும். நாடோடியாக அவளுடன் வாழும் இன்ப வாழ்வொன்றே போதும்!''

அந்தி மறைந்தவுடன் ஓடிவருவதாகச் சொன்ன காதலனைக் காணவில்லையே என்று அசோகமாலா அங்கலாய்த்தாள்.

''மாலா, புறப்படு; தாமதிக்க நேரமில்லை,'' என்றவாறு குதிரையை நிறுத்தினான் சாலி!

''நான் நினைத்ததுதான் நடந்துவிட்டது....!'' — அவள் அவனைப் பூரண நிலவின் ஒளியிலே நோக்கினாள்.

''நீ மட்டுமல்ல; நானும் நினைத்தது நடந்துவிட்டது. நமது வாழ்க்கைத் திட்டத்தை வகுத்துவிட்டேன். ஈழத்து மணிமுடியை உனக்காகத் தியாகம் செய்துவிட்டேன். தந்தையின் ஆணை பறந்து வருவதற்கிடையில் நாம் அனுராதபுரத்தைக் கடந்தாக வேண்டும். சீக்கிரம் புறப்படு....'' என்று துரிதப்படுத்தினான் சாலி.

''என்னால் உங்களுக்கு, உங்கள் குடும்பத்திற்கு, இந்த நாட்டினுக்கு எவ்வளவோ துன்பங்கள். என்னை மன்னியுங்கள்; நான் உங்கள் மகுடத்துக்குக் குறுக்கே நிற்க மாட்டேன்! ஆனாலும், இந்த அபலைப் பெண்ணின் நெஞ்சிலே உங்கள் முகம்தான் அழியாச் சித்திரமாக இருக்கும்!''

இலங்கைச் சரித்திரத்தின் ஏடுகளில் கீழ்க்காணும் செய்திகள் எழுதப் பெற்றன.

''தீண்டாத குலக்கொடியாள் என அறிந்தும், உள்ளத்திலே உதயமான காதலைப் போற்றி வளர்த்தசாலி, காதலின்பொருட்டு ஈழத்து மணிமகுடத்தைத் தியாகம் செய்தான். ஆனால், அசோகமாலாவின் திடீர் மாற்றம் அவனைப் பித்தனாக்கியது; கடைசியில் இரட்டை உயிர்களும் அன்று இரவே ஒருயிராகக் கலந்தன! ஆம்; அவர்களது அன்புக் காதல் வென்றது!''

★

வாழ்ந்தவர்கள் சொன்னார்கள்: வஸந்தன்

கர்வம் என்பது மேதைக்கு எரு; ஸ்திரீகளுக்கு ஆபரணம்; கலைஞர்களுக்கு இணை பிரியாத துணை.

ஆம்; அன்று மெய்க்கு மனிதன் பயந்தான்; இன்று மனிதனுக்கு மெய் பயப்படுகிறது. அன்று சத்தியம் மனிதனை ஆண்டது; இன்று சத்தியத்தை மனிதனின் சட்டம் ஆளுகிறது!

நீதிமன்றத்திலிருந்து திரும்பி வந்து அரை மணி நேரம் ஆயிற்று. ஒரே அலுப்பாக இருந்தது. உடை மாற்றிக் கொண்டு சிற்றுண்டி—காப்பி அருந்தினேன். மனத்தில் துளி நிம்மதி இல்லை. ஏதோ படு பாதாளத்தில் விழுந்து விட்டது போல ஒரு தாழ்மை மனப் பிராந்தி பிடித்து ஆட்டியது. பெருமையும், பேரும், புகழும் அன்றைய தினம் ஏற்பட்ட ஒரே ஒரு தோல்வியில் முழுகிப் போயின.

ஆம், மிகுந்த பிரயாசை எடுத்துக்கொண்டு அன்று வாதாடிய வழக்கிலே என் கட்சி தோற்று விட்டது. என் கட்சி மட்டுமா?— நியாயமே தோற்று விட்டது. இப்போது நினைத்தாலும் நெஞ்சு குலுங்குகிறது. கொலை செய்யாத அப்பாவி மனிதனை என் கட்சிக்காரன் நீதிபதியின் தீர்ப்பைக் கேட்டுக் குமுறிக் குமுறி அழுது கொண்டே சிறைக்குப் போனான். உண்மையில் அந்தக் கொலையைச் செய்தவனை எதிர்க் கட்சிக்காரன் சந்தர்ப்ப சாட்சியங்களின் உதவியால் 'நிரபராதி' என்று கருதப்பட்டு விடுதலை செய்யப்பட்டான்.

"ஐயோ சாமீ! தர்மம் நியாயம் எல்லாத்துக்குமே கண் அவிஞ்சு போச்சுங்களா?" என்று 'குற்றவாளியாக்கப்பட்டவன்' கதறிய போது என் நெஞ்சை யாரோ இறுக்கி அமுக்குவது போல இருந்தது.

யார் என்ன செய்யலாம்? இந்தக் காலத்தில் சத்தியத்தின் தலைவிதி, சாட்சி சொல்பவர்களின் யோக்கியதையைப் பொறுத்தல்லவா இருக்கிறது!

மனம் மேலும் மேலும் குழம்பியது. படம் பார்க்கப் புறப்பட்ட நான் பெயரைப் பார்த்ததும், எனக்குத் தூக்கிவாரிப்போட்டது

"அரிச்சந்திரன்"—முதலிலேயே தெரிந்திருந்தால் வந்திருக்கவே மாட்டேன். எந்த மனக்குழப்பத்தைப் போக்கிக் கொள்ளலாம் என்றெண்ணி வந்தேனோ, அதே குழப்பத்தைச் சித்திரிக்கும் கதை.

பொறியிலிருந்து தப்புவதாக எண்ணிக்கொண்டு பொறிக்குள்ளேயே மாட்டிக்கொண்ட எலியின் நிலையை அடைந்தேன். என் கதை?—மெய்க்கும் பொய்க்கும் ஏற்பட்ட போராட்டத்தில் பொய் வென்ற கதை! அரிச்சந்திரன் கதை — அது

நா. பார்த்தசாரதி

வித்துவான் இவர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ்ப் பணியாற்றுகிறார். எல்லாப் பத்திரிகைகளும் இவரது எழுத்துக்களை வெளியிட்டு வருகின்றன. திறம்படச் சிந்திக்கிறார்.

பொய்க்கும் மெய்க்கும் ஏற்பட்ட போராட்டத்தில் பொய் தோற்ற கதை!

இந்த இரண்டு கதைகளுக்கும் இடையே காலம் என்ற கொத்தன் யுகம் என்ற பெரிய மதிலை எழுப்பி யிருந்தான்.

அன்று கோர்ட்டில் நடந்த வழக்கில் நிரபராதியைக் காப் பாற்ற முயன்றவன் நான்; என் கட்சி மெய்யின் கட்சி. ஆனால் அது தோற்றுவிட்டது. பிரதிவாதிக் காக வாதாடிய வக்கீல் ஒரு கொலைகாரனை நிரபராதி என்று நிரூபிக்க முயன்றார். அவர் கட்சி பொய்யின் கட்சி; ஆனால் அது வென்றுவிட்டது! இதுதான் இந்த யுகத்தின் தர்மமா?

திரையில் படம் 'விறு விறு' என்று ஓடிக் கொண்டிருந்தது. விசுவாமித்திரர் அரிச்சந்திரனை எப்படியாவது ஒருபொய் சொல்ல வைத்துவிட வேண்டும் என்று பிரம்மப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தார்.

"கண்ணுக்குத் தெரியாததெல் லாம் பொய்யானால் பகுத்தறிவும் பொய்தான்; கண்ணுக்குத் தெரிந்ததெல்லாம் மெய்யானால் கானல் நீரும் மெய்தான்; எது மெய்? எது பொய்? விஷய ஞானத் தின் தெளிவுதான் மெய்யா— பொய்யா என்பதற்கு அளவு கோல். காட்சியும், காணுமையும், மெய் பொய்களுக்கு இலக்கண மல்ல!"—படத்தில் வசனகர்த்தா தன் சாமர்த்தியத்தையெல்லாம் அள்ளித் தெளித்திருந்தார். 'பளிச் பளிச்' சென்று மின்வெட்டுப் போல அங்கங்கே வசனத்தில் தத் துவக் கருத்துக்களும், தர்க்க நியா யங்களும் மின்னின.

எல்லா நட்சத்திரங்களுமே தத் ரூபமாக நடித்திருந்தார்கள். படத் தைத் தயாரித்தவர்களுக்கு நல்ல வெற்றியைக் கொடுத்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

அரிச்சந்திரன் நாடு இழந் தான். மனைவி, மகன், இருவரோ டும் காட்டுக்குப் போகிறான், அலை கிறான், கஷ்டப்படுகிறான்; அப் போது நட்சத்திரேயன் வந்து மிரட்டுகிறான். அந்தச் சத்தியபுரு ஷன் கடனுக்காக மனைவியை விலைக்கு விற்கிறான். சுடுகாட் டுப் பறையனாகிறான். லோகிதாச னைப் பாம்பு கடிக்கிறது. சந்திர மதி நள்ளிரவில் பிள்ளையின் பிணத் தோடு சுடுகாட்டுக்கு வருகிறாள்.

"முனிசிரேஷ்டரே, நாட்டை இழந்தேன். அரசை இழந்தேன். மனைவியை இழந்தேன். மகனை இழந்தேன். என்னையுங் கூட இழந்தேன். உயிரையே இழக்க நேர்ந்தாலும் சரி; சத்தியத்தை இழக்கத் தயாராயில்லை"—அஞ்சா நெஞ்சுடனே அரிச்சந்திரன் விசுவாமித்திரரை எதிர்த்துப் பேசுகிறான்.

சோதனை முடிகிறது. தேவர்கள் மலர் மாரி பொழிகின்றனர். விசுவாமித்திரர் அரிச்சந்திரனை வணங்கி மன்னிப்புக் கேட்டுகொள் கிறார். இழந்தவற்றையெல்லாம் பெறுகிறான் அரிச்சந்திரன். கதை சுபமாக முடிகிறது. அரிச்சந்திரன் வென்றான்; சத்தியம் வென்றது.

படம் முடிந்தது.

ஆட்டோ ரிக்ஷா அத்துமீறிய வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தது.

"மெல்ல ஓட்டுப்பா; அகப்பட் டுக் கொண்டால் வம்பு."

"நீ சும்மா வா ஸாமீ! நம்ப கை 'ஸ்டியரிங்கை' பிடிச்சா புஷ்ப விமானங் கணக்கா பறக்கணு முங்க..."

'சரி, இவன் நிஜமாகவே சுய நினைவில் இல்லை' என்று தெரிந்து கொண்டேன். தொடர்ந்து அவ னிடம் பேசவுமில்லை. கடவுள் புண் ணியத்தில் எப்படியாவது வீடு போய்ச் சேர்ந்தால் போது மென்று மனத்தில் தியானம் செய்து கொண்டிருந்தேன்.

"எங்கே ஸாமீ போகணும்னு சொன்னீங்க....?"

''அதுக்குள்ள மறந்துட்டியா ? மைலாப்பூர் — மந்தைவெளி.''

''மறப்பேனு? ஸாமீ, சும்மா விளையாட்டுக்காகக் கேட்டேன் !''

ராமகிருஷ்ண மடம், ஸம்ஸ்கிருத காலேஜ், ஒவ்வொன்ருகக் கடந்தன. பி. எஸ். ஹைஸ்கூல் வாசலில் ஒரு பிச்சைக்காரன் ஆலமரத்தடியிலிருந்து புறப்பட்டுச் சாலையின் நடுவே நடந்து கொண்டிருந்தான்.

"ஹாரன் கொடப்பா ; குருடனே என்னவோ ?''

''சும்மா இரு ஸாமீ, அந்தப் பய உயிரை மதிக்கல்லே, நமக்கென்ன ?....''

''ஐய்யோ... அப்பா !....'' குரூரமான ஓர் அலறல். 'ஆட்டோ' நின்றது. அது அவன்மேல் ஏறி விட்டது. எனக்குச் சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. டிரைவர் மலங்க மலங்க விழித்தான்.

தூரத்தில் ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் ஓடி வருவதைக் கண்டதும் எனக்கு உடம்பு 'வெட வெட' வென்று நடுங்கியது. ஓடிவிடலாமா என்றுகூடத் தோன்றியது. ஆனால் அப்படிச் செய்யவில்லை.

''கொஞ்சம் இருங்க ; ஒரு தந்திரம் செய்றேன்,'' என்று அவன் குபீரென்று ஓடி ஆட்டோ ரிக்ஷாவுக்குள் அடியிலிருந்து ஏதோ சீசாவை எடுத்தான். சக்கரத்தின் அடியில் அடிபட்டுக் கிடந்த பிச்சைக்காரனின் கையில் அதைத் திணித்துவிட்டுநின்றுகொண்டான். விளக்கொளியில் அது ஒரு 'பிராந்தி பாட்டில்' என்பது எனக்கு நன்ருகத் தெரிந்தது.

இரண்டே நிமிஷத்தில் கூட்டம் கூடிவிட்டது. போலீஸ்காரர்களும் இரண்டு மூன்று பேர் வந்துவிட்டார்கள்.

எனக்கு நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம் போல அவமானமாக இருந்தது. சமூகத்தில் பேரும் புகழும் பெற்ற ஒரு வக்கீல் இந்த மாதிரிச் சில்லறை விபத்தில் மாட்டிக் கொண்டால் பத்திரிகையிலே தலை உருளுமே....? என் மனம் வெட்கத்தால் குன்றியது !

''ஸார், பாருங்க ஸார்....! பயல் நிறையக் குடிச்சிட்டுத் தன் நினைவில்லாமல் தெருவிலே நடந்து வந்தான். கை வலிக்கிருப்பலே

ஆசிரியர் : நீ இவ்வளவு மக்கா இருக்கியே? உன் வீட்டிலே உன் அப்பா சமர்த்தா ? அம்மா சமர்த்தா ?

பையன் : அவர்களைவிட நான்தான் ஸார், சமர்த்து !

ஹாரன் அடிச்சேன். பாவிப் பய காதிலேயே போட்டுக்கலே சார்.... இதோ பாருங்க, கையிலேகூடப் பிராந்திப்புட்டி வச்சிருக்கான்...!''

டிரைவருடைய நாடகத்தை அந்தக் கூட்டம் உண்மையாகவே நம்பியது.

ஆம்புலன்ஸ் வந்தது, போலீஸ் ஜீப்பும் வந்தது. காரில் அடிபட்டு விழுந்தவனை அதே நிலையில்– பிராந்திப் புட்டியும் கையுமாகப் போட்டோ எடுத்தார்கள். கால் மணி நேரத்தில் பத்திரிகை நிருபர்கள் வேறு காமிராவும் கையுமாக ஓடி வந்து விட்டார்கள். அடிபட்டவனை ஆம்புலன்ஸ் ஏற்றிக்கொண்டு போயிற்று. நானும் டிரைவரும் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கூட்டிக் கொண்டு போகப் பட்டோம்.

சப்-இன்ஸ்பெக்டர் எனக்கு ஜாமீன் வேண்டுமென்றார். நான் ஒரு மனிதரை போனில் அழைத்து ஜாமீன் கொடுக்கச் செய்தேன். அவர் ஸ்டேஷனுக்கு வந்து ஜாமீன் கொடுத்தார். டிரைவரை 'ரிமாண்டில்' வைத்து விட்டார்கள். அடிபட்டவன் ஸ்தலத்திலேயே மாண்டிருப்பதாக ஆஸ்பத்திரியிலிருந்து போலீசுக்குச் செய்தி வந்தது.

''நீங்கள் போகலாம். சம்மன் வரும்போது கோர்ட்டில் ஆஜராக வேண்டும்,'' என்று இன்ஸ்பெக்டர் கூறினார்.

'அந்த டிரைவருக்கு ஜன்ம தண்டனை விதிச்சு, இனி ஆட்டோ ரிக்ஷாவையே தொட முடியாமல் செய்ய வேண்டும்' என்று நான் முடிவு செய்தேன்.

எதை எதிர்பார்த்துப் பயந்தேனோ அது வீண் போகவில்லை. மறுநாள் எல்லாப் பத்திரிகைகளிலும் அந்த விபத்துச் செய்திவந்துவிட்டது. ஆனால் ஓர் அதிசயம். விபத்து டிரைவரின் அஜாக்கிரதையால் நிகழ்ந்ததென்றோ, அவன்தான் விபத்துக்குக் காரணம் என்றோ, ஒரு பத்திரிகையாவது எழுதவேயில்லை!

'விபத்துக்காளான பிச்சைக்காரன் குடிபோதையில் இருந்ததால் 'ஆட்டோ' முன் விழுந்துவிட்டான்' என்ற பல்லவியை எல்லாப் பத்திரிகைகளும் பாடியிருந்தன. சில பத்திரிகைகளில் சாராயப் புட்டியோடு கூடிய அடிபட்டவனின் படம்கூட வெளியாகியிருந்தது.

''மேற்படி வாடகை ஆட்டோவில் பிரயாணம் செய்து கொண்டிருந்தவர் மைலாப்பூரைச் சேர்ந்த பிரபல வக்கீல் ஸ்ரீ..........என்பது குறிப்பிடத் தக்கது.'' இந்த வரிகளைப் படிக்கும்போது மட்டும் என் மனம் அடித்துக் கொண்ட வேகம் சொல்லி முடியாது.

அன்று மாலையில் அந்த டிரைவரும் ஜாமீனில் வெளி வந்து விட்டான். வந்ததும் வராததுமாக நேரே என்னிடம் ஓடி வந்தான்.

''சாமீ, நீங்கதான் காப்பாத்தணும். நிசத்தை வெளியிட்டுட்டீங்கன்னா நான் அகப்பட்டுக் கிடுவேன். பிள்ளை குட்டிக்காரன்மேலே இரக்கம் காட்டுங்க...''

"நீ ஒரு ராட்சஸன். உன்னை என்ன செஞ்சாலும் தகும். உனக்கு இரக்கம் ஒரு கேடா?"

"ஐயையோ! அப்படிச் சொல்லாதீங்க. நான் சரியானபடி சாட்சியங்களை எல்லாம் தயார்ப்பண்ணிட்டேனுங்க......எல்லாரும் என் வழிப்படி சொல்லச் சம்மதிச்சிட்டாங்க...நீங்களும்...."

"நான் உண்மையைத்தான் சொல்வேன்."

"ஐயோ சாமீ!...மடத்தனமாகக் குடிச்சிட்டு அன்னிக்கி அப்படி நடந்துக்கிட்டேன். நடந்ததை எல்லாம் மறந்து மன்னிச்சிடுங்க. பணத்தைப் பணம்னு பாராமே செலவழிச்சு வக்கீலுக்கும் சாட்சியங்களுக்கும் கொடுத்திருக்கேனுங்க!...."

"நீ செய்த துரோகம் உனக்கே நன்றாக இருக்கிறதா? ஒரு அப்பாவிப் பிச்சைக்காரனை ...."

"துரோகந்தானுங்க; ஆனா என்ன செய்யிறது? எனக்காக மட்டுமா செஞ்சேன்? உங்க கௌரவமும் சம்பந்தப்பட்டிருக்கே? எதாவது தந்திரமாகச் செய்தால்தானே தப்பிக்கலாம்? அதான் அப்படிச்செய்தேனுங்க."

"சரி, எப்படியாவது தொலை!"

"எப்படியோ, உள்ளதை வெளியிட்டிடாதீங்க. காலிலே விழுந்து கும்பிடறேன்" – அந்த டிரைவர் உண்மையாகவே என் காலில் விழுந்துவிட்டான்.

அவனது பொய்யில் என் கௌரவமும் உள்ளடங்கி யிருப்பதாக அவன் சொன்ன சொல் என்னைத் திகைக்கச் செய்தது!

"நான் காட்டிக்கொடுக்கவில்லை. போ....!"

அன்று என் கண் முன்னேயே நீதி செத்தது. இன்றோ, உண்மைக் கொலைகாரன் யார் என்ற மெய் எனக்குத் தெரியும். தெரிந்து என்ன பிரயோசனம்? என் கௌரவம் அந்த மெய்யைச் சொல்லவிடாமல் தடுக்கிறது. ஓர் அப்பாவிப் பிச்சைக்காரன் மேல் ஆட்டோரிக்ஷாவை ஏற்றிக் கொன்ற அந்த டிரைவரை நான் நினைத்தால் காட்டிக் கொடுக்க முடியும் – ஆனால், அந்த விபத்து நடக்கும்போது அவனுடன் நானும் கூட இருந்திருக்கிறேனே? உண்மையைச் சொன்னால் 'கேஸ்' என் பேரிலும் தொடருமே?

விசாரணை நாள் வந்தது. கோர்ட்டில் ஒரே கூட்டம். பிச்சைக்காரனுக்கு யார் வக்கீல்? – ஒருவருமே கிடையாது! சர்க்கார் தரப்பு வக்கீலும் டிரைவரின் வக்கிலும் காரசாரமாக விவாதித்தனர்.

"டிரைவர் மேல் குற்றமே இல்லை. பிச்சைக்காரன் குடித்துவிட்டு ரோட்டில் அசையாமல் நின்றான். அதனால்தான் விபத்து ஏற்பட்டது!" என்பதற்கு ஐந்தாறு பேர் சாட்சி கூறினார்கள்.

"பிச்சைக்காரனுக்குக் குடிப் பழக்கம் உண்டு!" என்று அவனைச் சேர்ந்த வேறு சில பிச்சைக்காரர்கள் வந்து சாட்சி கூறினார்கள். எல்லாம் டிரைவரின் பணம் செய்த வேலை.

'பிச்சைக்காரனின் மரணத்திற்கு அவனே காரணம். அவன் குடித்து விட்டு வேண்டுமென்றே காருக்கு முன்னே வந்து விழுந்ததால்தான் இறக்க நேர்ந்தது. டிரைவர் நிரபராதி!' என்று சட்டம் தீர்ப்பு வழங்கியது!

சாயங்காலம் அந்த டிரைவர் வந்தான். பழம், மாலை முதலியனவும் அவனுடன் வந்தன.

அவனுடைய பரிசுப் பொருள்களைக் காலால் உதைத்தேன். நான் விம்மினேன்.

ஆம்; அன்று மெய்க்கு மனிதன் பயந்தான்; இன்று மனிதனுக்கு மெய் பயப்படுகிறது. அன்று சத்தியம் மனிதனை ஆண்டது. இன்று சத்தியத்தை மனிதனின் சட்டம் ஆளுகிறது. ★

மா. கு. நெடுமாறன்

பெண்ணே! நீ பெரும் புதிர்!

பாவையே!

உன்னை என்னவென்று சொல்ல? நீ எனக்கு எட்டாத தூரத்தில் இருப்பவள். உன் இதயம் என்னைக் கடந்து எங்கோ சென்றுவிட்டது.

குழப்பத்தின் அன்னை நீ; ஆனால், தெளிவின் தாயாகவும் உன்னால் இருக்க முடிகிறதே....!

சுழலும் உன் விழிகளில் தாங்கம் இசைக்கும் கடலைப் பார்க்கிறேன் நான். அது, உன் உள்ளத்தின் உருவமாக இருப்பதையும் காணுகிறேன்; வியக்கிறேன்.

அந்த வியப்பு மறைவதற்குள்ளாகவே, உன் விழிகளில் தடாகத்தின் குளிர்ச்சி ததும்பி ஓடக் காண்கின்றேன். பின், வியப்பால் இனம் தெரியாத ஏதோ ஓர் உணர்வு என்னை எங்கோ இழுத்துச் சென்று விடுகிறது.

நீ விந்தை; வியப்பு!— ஆமாம், அதுதான் உனக்குப் பொருத்தமான பெயர்.

ஆரணங்கே!

நீ இன்பத்தின் தொட்டிலாக இருப்பதைக் கண்டவனும் நான்தான். பின்னர் துயரங்களின் விளைநிலமாக நீ மாறியதை உணர்ந்தவனும் நான்தான்.

ஈட்டியையும் நீதான் பாய்ச்சுகிறாய்; பின், மருந்தும் நீதான் தடவுகிறாய்!

நிலையற்ற உன் போக்கு என் இதயத்து அமைதியை நிலையற்றதாக்கிவிடுகிறது.

ஆனால் நீ அழுகிறாய்; சிரிக்கிறாய். உன் இந்த இரண்டு செயல்களுக்குமே அர்த்தம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

உனக்காக, முடிசார்ந்த மன்னரெல்லாம் பிடி சாம்பராகியிருக்கிறார்கள். களம் பல கண்ட வீரர்கள்கூட, உன் சிலம்பணிந்த பாதத்தினடியில் தவம் கிடந்ததாக வரலாறு பெருமை பேசுகிறது.

ஆனால், நீயோ எதுவும் உனக்குச் சம்பந்தமற்றது போலவே பாவனை செய்கிறாயே....!

அழவேண்டிய நேரத்தில் நீ அழுவதில்லை. சிரித்திட வேண்டிய சந்தர்ப்பத்தில், உனக்குச் சிரிப்பு வர மறுத்து விடுகிறது — ஆம்; உன் பெயர் வேதனை; நீ ஓர் அழகு நிறைந்த விபத்து!

பூவையே!

நீ கவிதைக்கு உயிரூட்டும் உயிர்ப்பு. உன் கனி இதழில் பிறந்த இன்பம், எத்தனையோ மனிதர்கட்குக் கவிதாவன்மையைத் தந்திருக்கின்றது.

உருவான கலையில் உன் அழகான முகம் தெரிகிறது; அப்போது, அவற்றின் 'மாதா' நீதான் என்ற உண்மையும் எனக்குப் புரிகிறது.

ஆம், உன் பெயர் கலை; நீ ஒரு கவிதை!

உன் எழில் விழிகள் பேசும் விந்தையை எழுதி எழுதிக் கலைஞரானவர் கணக்கற்றோர்.

எழுதும் கவிதைகள் நீ தந்தவை; ஆயின், அவை அத்தனையிலும் நீ இருக்கிறாய்!

எழிலரசி!

பிரேமையின் நரம்புகளை நீதான் மீட்டுகிறாய். ஆனால், விரக்திக்குச் சுருதி கூட்டுபவளும் நீதான்!

போகத்தின் உச்சிக்கு மனிதனை அழைத்துச் செல்லும் நீதான்,

யோகக் குழியிலும் அவனை மூடி மறைத்து விடுகிறாய்!

நீ பாசத்திற்குத் திறவுகோலாக இருப்பதும் உண்டு; ஆனால், 'துறவு' வாழ்வின் கதவுகள் உன்னால் திறக்கப் படுவதையும் நான் கண்டிருக்கிறேன்.

வீட்டிலிருந்து கொண்டே மனிதன், 'விடு'–'விடு' என்று சதா புலம்பிக் கொண்டிருக்கிறான்.

ஆமாம், உண்மையான 'வீடு' வீடாக இல்லாதபோது, எங்கோ இருப்பதாக தான் கற்பனை செய்துகொண்ட ஒரு சூன்ய வீட்டிற்கு அவனது உள்ளம் போகத் துடிக்கிறது!

இதற்குக் காரணமாக நீ இருக்கின்றாயல்லவா....!

உன் பெயர் இன்பம்! ஆனால், உன் இயல்பு துன்பம் தருவது தான்—அதில் எனக்குச் சந்தேகமே இல்லை.

பெண்ணே!

வியவகாரப் புயலை நீதான் எழுப்புகிறாய். பிரச்சனைப் புழுதிகள் உன்னால்தான் கிண்டி விடப்படுகின்றன.

ஆனால் அந்தச் சூறாவளிக்கு நடுவே அமைதித் தென்றலையும் உன்னால் அழைத்து வர முடிகிறது!

மிகப் பெரிய போராட்டங்கள் அத்தனையும் உன்னால் சிருஷ்டிக்கப் பட்டவையே. ஆனால், அந்த யுத்த கேந்திரங்களுக்கு மத்தியிலும், எங்களுக்கு வரம் பெற்று ஒரு புது இன்பத்தை வாரி ஊட்டும் உன் இயல்பு ஆச்சரியமானது!

கசப்பான மருந்தை நீ தருகிறாய். அதனால் எவ்வளவோ இனிப்பான விளைவுகள் நிகழ்ந்து விடுகின்றனவே....!

ஆம்; உன் பெயர் துன்பம்! ஆனால், இன்பம் தருவதையும் நீ உன் கடமையாகக் கருதி வருகிறாய்! நீ ஒரு விடுகதை!

இன்ப மாளிகைக்கு என்னை அழைத்துச் சென்று, பின், அங்குள்ள துன்பத்தின் சாளரக் கதவுகளை எனக்காக நீ திறந்து விடுகிறாய்!

உன்னோடு நான் துயரக் காட்டில் நடைபோட்டபோது, எனக்கு எங்கிருந்தோ இன்பத்தேனை எடுத்து வந்து புகட்டிய உன் அன்பை – ஆதரவை நான் என்னவென்று சொல்வேன்....?

உன் செயலை, என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. உன் மர்மச் சிரிப்புக்கு அடியில் மறைந்து கிடக்கும் பொருள் என்னவென்பதை அறிய என் அறிவுக்குச் சக்தியற்றுப் போய்விட்டது.

நீ உலகை ஆளுகிறாய்; உலகம் உன்னை ஆளுகிறது!

நீ தாயாக இருக்கிறாய்; அதற்கு முன்பே, நீ காளியாகவும் வேடம் தரித்து விடுகிறாய்!

ஒரு சமயம் நீ எஜமானியாகப் பவனி வருகிறாய். மற்றொரு சமயத்தில், உன் எழிற் கரங்களை கொடு விலங்கு பிணைத்திருப்பதையும் நான் காணுகிறேன்.

துயரங்கள், உன்னால் பெற்றெடுக்கப்படுகின்றன. ஆனால், நீ இல்லாவிட்டால் இன்பமே இல்லை!

கோழைத்தனம் உன் இயல்போடு ஒன்றிய ஒரு தன்மையாகும்; ஆனால், நீ வீரத்திற்குப் பாலூட்டி வளர்க்கும் காட்சியின் பெருமை மகத்தானது....!

மெய்!–உன்னை என்னால் உணரவே முடியவில்லை! நீ புதிர்! ★

போட்டிக் கதை :

எங்களுடைய ரயில்ப் பேச்சுக்கிடையில் 'ரகசியம்' என்பது பற்றிப் பேச்சு எழுந்தது. கிழவர் சொன்னார் : ''ரகசியம் என்பது பொல்லாதது; அதை நாம் மனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்; நேரம், காலம் வரும் பொழுது வேண்டுமானால் வெளியிடலாம்.''

தன்னுடைய கருத்தை நிரூபிக்க அந்தப் பெரியவர் சொன்ன கதை இதுதான்.

1

திருமங்கலம் கிராமத்திலுள்ள இளைஞர்கள் ஒருவனைக் கண்டு அஞ்சுவார்கள் என்றால், அது நாட்டாண்மைக்காரன் நமச்சிவாய அம்பலகாரன்தான். ஆறடி உயரம்; அதற்கேற்ற உடலமைப்பு; முறுக்கிவிடப்பட்ட மீசை; இடுப்பிலே எப்பொழுதும் கறுப்புக் கட்டம் போட்ட கைத்தறி ஆடை; கையிலே பொன்னாலான காப்பு; விரல்களிலே மின்னும் ஒரு ஜோடி வைர மோதிரங்கள்—இவை அவன் பெரிய பணக்காரன் என்பதைப் பறைசாற்றின. வயது ஐம்பது என்றாலும் முப்பத்தைந்துதான் மதிப்பிட முடியும். இளைஞனாய் இருந்த பொழுதே சிலம்பம், மற்போர் முதலியவைகளில் நல்ல தேர்ச்சி உண்டு. நாட்டாண்மைக்காரன் வீதியிலே போகிறான் என்று சொன்னால், தலை நரைத்த கிழவர்கள் முதல் சிறிய பிள்ளைகள் வரை எழுந்து மரியாதை செய்வார்கள். அவன் நல்லவனுக்கு நல்லவன்; தீயவனுக்குத் தீயவன் – அவனோடு பழகியவர்கள் அறிந்துகொண்ட விஷயம்.

பூங்கொடி அவனுடைய ஒரே மகள். பெயருக்கேற்ற நல்ல அழகி.

தாயற்ற அந்தப் பெண்ணை இமையில் வைத்து வளர்த்தான் நாட்டாண்மைக்காரன்.

பூங்கொடிக்கு இரண்டு முறை மாப்பிள்ளைகள் அவ்வூரில் இருந்தனர். அழகு, குணம், செல்வம் இம்மூன்றும் ஒருங்கே அமைந்த பூங்கொடியைத் திருமணம் செய்து கொள்பவன் அதிர்ஷ்டசாலி என்று அந்த வட்டாரத்துப்

சென்ற ஏப்ரல் இதழில், திருச்சி அர்ச் சூசையப்பர் கல்லூரி மாணவரின் போட்டிக் கதையை வெளியிட்டோம். அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர் இவர். இடைநிலை இறுதி வகுப்பு, தாய் தந்தை இட்ட பெயர் மெய்கண்டான். விலாசம் : 'தி. வ.' கல்லூரி மாணவர் – மாணவிகள் போட்டிக்கு வந்த கதைகளில் பிரசுரத்துக்கு உகந்ததெனத் தேர்வு பெற்ற கதை இது.

பாட்டிமார்கள் பேசிக் கொள்ளுவதும் உண்டு!

2

நாட்டாண்மைக்கார னுக்கு இரண்டு தமக்கைகள் இருந்தனர்.

மூத்தவள் பணக்காரி; அவளுக்கு ஒரே ஒரு மகன் இருந்தான். பெயர் மாரி முத்து; அவன் குடும்பத்து முன்னோர்கள் ஏராளமான சொத்தை ஈட்டி வைத்திருந்தனர். உழைக்க வேண்டிய தொல்லை இல்லாததால் அவன் சோம்பேறியாகத் திரிந்து வந்தான். அவனை எப்பொழுதுமே ஒரு கும்பல் சுற்றிக் கொண்டே இருக்கும். அவனை அடக்கிக் கேட்பவர்கள் யாருமில்லாததால், வீண் செலவு செய்து வந்தான்.

சாராயம் காய்ச்சும் வழக்கு ஒன்றில் அகப்பட்டுக் கொண்டபோது நாட்டாண்மைக்காரன் உதவியால் சிறைக்குச் செல்லாது தப்பினான்.

ஆனால் இளைய தமக்கையோ ஏழை. உழைத்துச் சாப்பிட வேண்டிய நிலைமையில் இருந்தது அவள் குடும்பம். அதனால் அவள் மகன்—நல்ல முத்து—தன் பொறுப்பை உணர்ந்து நல்ல குணமுடையவனை வாழ்ந்து வந்தான். பணமற்ற இடத்தில் தானே குணம் இருக்கும்! தனக்கு இருந்த இரண்டு காணி நிலங்களை உழுது பயிரிட்டு, எப்படியோ வாழ்க்கையைக் கழித்து வந்தான்.

நாட்டாண்மைக்காரனுக்குச் சிறிய வயது முதலே தன் இளைய தமக்கையிடம் அன்பு உண்டு. அவள் இளமையிலேயே கைம்பெண்ணாகிய பொழுது அப்பாசம் இன்னும் இறுகியது. அவளுடைய குடும்பம் கஷ்டம் படும்போதெல்லாம் தன்னாலான உதவியைச் செய்து வந்தான். அவள் மீது இருந்த பாசம் அவள் மகனிடத்திலும் இருந்ததில் ஆச்சரியமில்லையல்லவா?

தம் தமையன் பெண் பூங்கொடியைத் தம் பிள்ளைகளுக்கு மணம் முடிக்க வேண்டும் என்று பிள்ளைகளின் இரண்டு தாய்மார்களுக்கும் ஆசை இருந்தது. இளையவளுக்குப் பூங்கொடியைப் பெண் கேட்கப் பயம், ஏழை என்ற காரணத்தால். ஆனால் மூத்தவளுக்கு அப்படி இல்லை. ஒரு நாள் நெருங்கிக் கேட்டு விட்டாள், எப்பொழுது பரிசம் போடலாம் என்று!

"யோசித்துச் சொல்லுகிறேன்", என்றான் நாட்டாண்மைக்காரன்.

"இதில் யோசிக்க என்ன இருக்குது? எனக்கு இரண்டு தலைமுறைக்குத் தேவையான சொத்து இருக்குது. உன் பெண்ணும் சுகமா வாழலாம்!" என்றாள்.

"பயல் வேலை செய்யாமல் திரிகிறானே என்றுதான் யோசிக்கிறேன்; எதுக்கும் பெண்ணை ஒரு வார்த்தை கேட்டுச் சொல்றேன்!" என்று இழுத்தான் நாட்டாண்மைக்காரன்.

"பெண்ணை என்ன கேட்கிறது? நீ சொன்னால் வேண்டாம்னு

சொல்லப் போறாள்....?'' என்று கூறி விட்டுச் சென்றாள், பணக்காரி!

3

திருமங்கலம் கிராமத்தின் மேற்குப் பகுதியில் ஓர் ஆறு அழகை அள்ளித் தெளித்தவாறு ஓடிக் கொண்டிருந்தது. ஆறு நிறைய நீர்; இரண்டு கரைகளையும் தொட்டவாறு ஆற்று நீர் செல்லும் அழகே அலாதி.

ஆற்றின் பக்கத்திலிருந்த தன் வயலில் வேலையை முடித்துக்கொண்டு அப்பொழுதுதான் கரையேறினான் நல்லமுத்து.

மாலை வேளையில் சூரியனின் பொற்கிரணங்கள் பட்டு ஆற்று நீர் 'பள, பள' வென்று மின்னியது.

அப்பொழுது 'ஐயோ' என்ற அலறலுடன் ஆற்றில் யாரோ 'தொப்' என்று விழுந்த சத்தம் கேட்டது.

ஒரு பெண் ஆற்றில் விழுந்து கரையேற முடியாமல் தவிப்பதைக் கண்டான்.

நல்லமுத்து துண்டை வரிந்து கட்டிக் கொண்டு கரையில் சிறிது தூரம் ஓடி, ஆற்றில் பாய்ந்து அவளை ஒரு கையால் பற்றியவாறே நீந்தி மெல்லக் கரை சேர்ந்தான்!

கரையேறிய பெண் நாணத்தால் தலை குனிந்தவாறு, ''மச்சான், இந்நேரத்துக்கு நீங்க வந்து என்னைக் காப்பத்தலேன்னு ஆற்றோடு போயிருப்பேன். மாரியாத்தாதான் உங்களை அனுப்பிச்சு என் உசிரைக் காப்பாத்தினு!'' என்ருள்.

''நீ ஆத்திலே விழலேன்னு நான் உன்னைக் தொட்டுத் தூக்கி இருக்க முடியுமா? பூங்கொடி, எல்லாம் நன்மைக்குதான் போலே!'' என்ருன் நல்லமுத்து.

''போங்க மச்சான், உங்களுக்கு எப்பவும் விளையாட்டுத்தான்!''

4

''எனக்கு இருப்பது ஒரே மகள். அதை ஒருவனுக்குக் கொடுத்து, அதனுலே இன்னொரு குடும்பத்திலேருந்து வீண் மனஸ்தாபத்தைச் சம்பாதிக்கவிரும்பலை. வருற தைப் பொங்கலப்போ என் மயிலைக் காளையை 'ஜல்லிக் கட்டு'க்கு விட்டுட்றேன். இரண்டு மாப்பிள்ளைகளிலே யார் அதை அடக்கி அதன் கொம்பில் கட்டி இருக்கும்



மஞ்சள் துணியை அவிழ்க்கிருனே அவனுக்கே பூங்கொடியைக் கொடுத்து விடுறேன்.''

இந்தச் செய்தியை ஊர் வாய் பறை சாற்றியது.

அந்தக் காளையே தர்மசங்கடமான தன்னுடைய நிலைமையை

இரவே, நீ வா!

வெண்ணிலா உலவும் நேரம்
வேதனை மறையும் என்று
விண்ணினில் வாழும் முத்தாம்
மீனினம் ஆடிக் காட்டும்.
பண்ணினை நெஞ்சிசைக்கப்
பைந்தமிழ்க் கவிதை பொங்கும்
எண்ணிலா மேன்மை செய்தாய்;
எழில்திருத் தூதே, நீ வா!

உழைத்ததால் உடலில் சோர்வு;
உளத்திலும் அந்தச் சோர்வு;
அழைத்திடாச் சோர்வு வந்தால்
அருமை நல் வாழ்வு சாகும்.
உழைத்தவர் சோர்வு நீங்கி
உலகெலாம் இன்பம் எய்த
அழைக்கிறேன் உன்னை நானே
அருள் மிகும் இரவே, நீ வா!

காதலன் களிப்பால் துள்ள
காதலி நெஞ்சம் விம்ம
காதலர் மகிழும் நேரம்
உன் துணை அவருக் காகும்;
காதலி கவிதை எண்ணில்;
கவிதையோ உன்றன் தூண்டல்;
ஆதலால் கவிதை இன்பம்
அளிக்கவே, இரவே, நீ வா!

—இளம்பாரதி

அழகாகப் பாடுபவர் இவர். 'முத்த ஏடு' இவருடைய நல்ல பாடல்களின் தொகுப்பு.



நீக்க வந்த அரும் பொருளாகி எண்ணினான் நாட்டாண்மைக் காரன்.

தான் உண்பதிலெல்லாம் காளைக்கும் ஒரு பங்கு போட்டுக் கொடுத்தாள் பூங்கொடி. தந்தையும் மகளும் போட்டி போட்டுக் கொண்டு வளர்க்கவே, காளையும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது.

நட்ட பயிர் வளர்ந்து, கதிர் விட்டு முற்றி அறுவடைக்குத் தயாராயிருந்தது.

5

அன்று மாலை வேளை; மயிலைக் காளையை நன்கு அலங்கரித்து அதன் கொம்பில் ஒரு மஞ்சள் துணியில் ஒரு பவுன் பொன் வைத்துக் கட்டி இருந்தான் நாட்டாண்மைக்காரன். அந்தக் காளை 'மாரியாத்தா திடலுக்கு' அழைத்துச் செல்லப் பட்டது.

ஊர் மக்கள் திடலில் கூடி இருந்தனர். வேடிக்கை பார்க்கப் பக்கத்துக் கிராமங்களிலிருந்தெல்லாம் மக்கள் வந்திருந்தனர்.

காளையை அடக்கப் போகும் மாரிமுத்து–நல்லமுத்து இருவரையும் உற்சாகப் படுத்த ஆளுக்கொரு கும்பல் கூடி இருந்தது.

தாரை, தப்பட்டை முதலிய வாத்தியங்கள் முழங்கின. மாட்டை அவிழ்த்து விட்டார்கள். இதுவரை அவ்வளவு கூட்டத்தைக் கண்டிராத காளை மிரண்டுவிட்டது. வாத்தியங்களின் ஓசை அதற்கு இன்னும் வெறியை உண்டு பண்ணியது. வால் குத்திட்டு நின்றது.

முதலாவதாக மாரிமுத்துதான் செல்ல வேண்டும். அவன் தோளில் போட்டிருந்த பட்டுத் துண்டை எடுத்து இடுப்பைச் சுற்றிக் கட்டிக் கொண்டான்; காளையை அடக்கத் தயாரானான். அவனை உற்சாகப் படுத்தினர், அவனைச் சேர்ந்தவர்கள்! எடுத்த

எடுப்பிலேயே கூட்டத்தினரிடம் நல்ல பெயரெடுக்க வேண்டுமென்று காளையை நெருங்கி விட்டான். நெருப்புச் சுடர்களைப் போலக் கோபம் கொழுந்து விட்டெரியும் காளையின் கண்களைக் கண்டு திகில் அடைந்து விட்டான்.

கண்ணிமைக்கும் நேரத்தில் மாரிமுத்துவின் விலாவில் தன் கூரிய கொம்புகளைப் பாய்ச்சித் தூக்கி எறிந்து விட்டது காளை.

காளையிடமிருந்து மாரிமுத்துவைக் காப்பாற்ற அக்கூட்டத்தினர் பட்ட துன்பம் கொஞ்சநஞ்சமல்ல.

பிறகு, இளையவன்—நல்லமுத்து செல்லவேண்டும். அவனும் கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன்னே வந்தான்.

'காளை இவனையும் காயப்படுத்தி விட்டால்....!' என்ற எண்ணமே நாட்டாண்மைக்காரன் நெஞ்சில் மேலோங்கி இருந்தது. 'ஏன் இந்த விபரீத விளையாட்டைச் செய்தோம்?' என்று எண்ணி வருந்தினான்.

நல்லமுத்து மெல்ல மெல்லக் காளையை நெருங்கிக்கொண்டிருந்தான்; காளையும் ஆடாமல் அசையாமல் அவனையே முறைத்துப் பார்த்தவாறு நின்றது.

அவன் காளையை நெருங்கி விட்டான்! அப்பொழுதும் காளை அவனை ஒன்றுமே செய்யவில்லை!

கூட்டத்தில் 'கசமுச' என்ற சத்தம் எழுந்தது.

'கபீர்' என்று பக்கவாட்டில் பாய்ந்து காளையின் கழுத்தின்மீது கையைப் போட்டுச் சுற்றி, மற்றொரு கையால் அதன் கொம்பிலிருந்து மஞ்சள் துணியை உருவினான். காளை திமிறியது; மஞ்சள் துணியை அவிழ்த்துக் கொண்டு கூட்டத்தோடு சேர்ந்து விட்டான்! நாட்டாண்மைக்காரன் ஓடி வந்து அவனைக் கட்டி அணைத்துத் தழுவிக் கொண்டான்.

சிரிக்கவும் சிந்திக்கவும்:

பெண் மனம்

"ஐயோ!....ஆ!....உயிர் போறமாதிரி உடம்பெல்லாம் வலிக்குதே!...தெருக்கோடியிலிருக்கிற கிணத்துக்குக்கூட நடக்க முடியாது போலிருக்கே? எப்படித்தான் தண்ணி கொண்டு வருவேனோ தெரியலையே? ஆ....ஐயோ அந்தப் பாவி...." என்று வருந்தினாள் பாட்டி.

"பாவம், பாட்டி!.... அடடே, கோடி வீட்டுக் குப்பம்மா வீட்டிலே குழந்தை அழுவற சத்தம் கேட்குதே! அவளுடைய மகளுக்குக் குழந்தை பிறந்தாச்சோ? என்ன குழந்தைன்னு போய் விசாரிப்போம் வாங்க, பாட்டி!..."என்றாள் உடன் வந்தவள்.

"என்ன குழந்தை, குப்பம்மா?"

"பெண் குழந்தைதான், பாட்டி!"

"பெண் குழந்தையா? அடடா, ஆண் பொறந்திருக்கக் கூடாது? சாண் பிள்ளைன்னாலும் ஆண் பிள்ளைன்னு எப்படியிருக்கும்!"

"அதுக்கு நாம என்ன செய்யறது பாட்டி? நாம கொடுத்து வச்சது அவ்வளவுதான். இந்த மட்டும் என் மகள் பெத்துப் பிழைத்தாளே அதுவே போதும். அது சரி, நீ ஏன் பாட்டி இப்படி நொண்டி நொண்டி நடக்கறே? கையிலே வேறு காயம். ஏன்? என்ன நடந்துச்சு?"

"அந்தக் கண்றாவியை ஏன் கேக்கறே போ, குப்பம்மா! என்னோட மருமக பேச்சைக் கேட்டுக்கிட்டு இன்னிக்கு என்னை இடுப்பு ஒடியற மாதிரி அடிச்சிட்டான் என் **மகன்!**"

— எஸ். என். பழனிச்சாமி

உமா கல்லூரி மாணவர்—மாணவிகள் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றவரல்லவா இவர்!



6

வானவீதியில் சந்திரன் வெண் முகிலுக்கிடையில் தன் மதிமுகத்தைக் காட்டி மேகத்தினூடே மறைந்து மறைந்து பவனி வரும் காட்சி கண் கொள்ளாக் காட்சி!

தனியாக சந்திரனோ, தனியாக வெண்முகிலோ தோன்றினால், அவை அவ்வளவு அழகாகத் தோற்றம் அளிப்பதில்லை. இரண்டும் கலந்திருந்தால்தான் கவர்ச்சி.

ஆற்றங்கரையின் ஓரத்திலே நல்லமுத்துவும், பூங்கொடியும் சந்தித்து மகிழ்ந்திருந்தனர்.

பூங்கொடி நல்லமுத்துவைப் பார்த்துக் கேட்டாள்: "பெரிய வீரர்தான்! காளையை அடக்கிட்டீங்களே!"

"நீ உதவி செய்யலேன்னா நான் எப்படிப் பூங்கொடி அந்தக் காளையை அடக்க முடியும்?"

"சரி! பொன்னம்மாவிடம் தூண்டி அப்பாகிட்டே நடந்ததைத் தெரியப் படுத்தச் சொல்லட்டுமா?"

"ஐயையோ, அப்படியெல்லாம் செஞ்சிடாதே! நான் கெட்டிக்காரன்னு மாமா நினைச்சுக்கிட்டிருக்காங்க!"

அந்த ரகசியம்—

மயிலைக் காளையை 'ஜல்லிக்கட்டுக்கு' விடப் போவதாக நாட்டாண்மைக்காரன் சொன்னதுமே பூங்கொடி திடுக்கிட்டாள்.

தன் மனத்திற்குகந்தவன்—நல்லமுத்து—வெற்றிபெற முடியுமா? ஒரு வேளை தோல்வி அடைந்தால் என்ன செய்வது? அப்படி வெற்றி பெற்றாலும் பல காயங்கள் படாமல் வெற்றிபெற முடியாது! அந்த மயிலைக் காளை முரட்டுக் காளை என்பதை அவள் நன்கு உணர்ந்திருந்தாள்.

இதற்கு ஏதாவது தந்திரம் செய்ய விரும்பினாள். இதற்குத் தன்னைச் சிறிய வயது முதல் அன்போடு வளர்த்து வந்த பொன்னம்மாவிடம் தன் எண்ணத்தை வெளியிட்டாள். அவள் கூறிய யோசனையுடன் நடந்ததால்தான் அவன் வெற்றி பெற முடிந்தது!

பொன்னம்மாவின் கணவன் தான் நாட்டாண்மைக்காரனின் மாடுகளை மேய்த்து வந்தான். பொன்னம்மா அவனிடம் விஷயத்தைக் கூறி, 'மயிலைக் காளையைப் புல்மேய அழைத்துச் செல்லும் பொழுது நல்லமுத்துவிடம் தினமும் பழக்கவேண்டியது!' என்று கூறி, "இதை யாரிடமும் சொல்லக் கூடாது" என்று உறுதிமொழியும் வாங்கிக் கொண்டாள்!

ஏறக் குறைய மூன்று மாதங்கள் அவனுடன் பழகிய காளை எப்படி அவனை எதிர்க்கும்? இந்த இரகசியம் நாட்டாண்மைக்காரனுக்கு—பூங்கொடியின் அப்பாவுக்கு எங்கே தெரியப்போகிறது?

7

கதையைச் சொல்லி முடித்த பெரியவர், "இந்த ரகசியத்தை அப்பொழுதே வெளியிட்டால் நல்லமுத்துவின் கதி என்னவாகி இருக்கும்?" என்று என்னைக் கேட்டார்.

"அது சரி, பெரியவரே! நீங்கள் தானே நல்லமுத்து அம்பலகாரர்?"

"உனக்கு எப்படித் தம்பி தெரியும்?" என்று கேட்டார்.

அவருடைய சட்டைப் பையைச் சுட்டிக் காட்டினேன். அவரது சட்டைப் பையில் அவருக்கு வந்த ஒரு கடிதம் நீட்டிக் கொண்டிருந்தது. அதில் 'நல்ல முத்து' என்று விலாசமிட்டிருந்தது. எப்பொழுதோ அவருக்கு வந்த பழைய கடிதம்.

"நீங்க ரொம்பக் கெட்டிக்காரத் தம்பி," என்று கூறிய கிழவர், ரயில் நின்றதும் அந்தப் புகை வண்டி நிலயத்தில் இறங்கினார். ★

பாசமும் பாசியும்

வே. தில்லைநாயகம்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் உதவி நூல் நிலைய அதிகாரியாகப் பணியாற்றுகிறார் இக்கட்டுரையாளர்.

ஆண் – பெண் கூட்டுறவு இயற்கை. அது அளவோடிருப்பின் உயிரையும் உள்ளத்தையும் உடலையும் ஒருங்கே வளர்க்கும். நல்ல எண்ணம் மகிழ்ச்சி தரும். மகிழ்ச்சி மனத்தை உயர்த்தும். மனம் உயிருக்கு உரமும், உடலுக்கு அழகும் தரும்; நலமும் ஈயும். இதுவே முன்னோர் கண்ட முடிபு. இன்றைய ஆய்வுகளும் அதையே வலியுறுத்துகின்றன.

தலைவன் பொருள் தேடவேண்டிய காரணமாகத் தலைவியைப் பிரிந்தான். கணவனது முயற்சியின் நோக்கம் அறிந்து அவள் அவனைப் பிரிந்திருந்தாள்.

எனினும் கணவனின் பிரிவு அவளை வருத்தத் தொடங்கியது. தலைவன் உடனிருந்த போது அவளிடம் கண்ட மகிழ்ச்சியையும் எழிலையும் இப்போது காணமுடியவில்லை. காண முடியாதுதான்!

ஒளி உமிழும் நெற்றி உலர்ந்தது. பசலை பற்றியது. உடம்பு நிறம் மாறுபட்டது. உள்ளம் வருந்தியது.

துயரம் பிறரிடம் கூறக் கூறக் குறையும் என்பதறிந்தவள் தோழி. ஒன்றுமறியாதவள் போலப் பேச்சைத் துவக்கினாள்.

"என்ன இது, இப்படி உன் நெற்றி ஒளியிழந்து கிடக்கிறதே? பசலையுற்ற உன் மேனி பார்க்கவே பரிதாபமாயிருக்கிறதே?"

"சற்றுமுன் தானே ஊருணியிலிருந்து நீர் மொண்டு வந்தாய்? அதற்குப் பின்னருமா காரணம் கேட்கிறாய்?"

"தண்ணீர் கொண்டு வந்ததற்கும் உன் பசலைக்கும் என்ன தொடர்பிருக்கிறது?"

"இதென்ன அதிசயமான கேள்வி? – படித்துறையில் நீரை மூடியிருந்த பாசத்தை முதலில் கையில் ஒதுக்கினேன். பிறகு குடத்தை வைத்து மேலும் கீழும் இரண்டு தடவை அசைத்தேன். பாசம் விலகியது. நீர் மொண்டு வந்துவிட்டேன்!" என்றாள் தலைவி.

"ம்.... ம்!"

"கை பட்டதும் விலகும் பாசம், கையெடுத்தவுடன் கூடிக் கொள்கிறதல்லவா?–அப்படித்தான் என் பசலையும்...!"

தோழி சிரித்தாள்.

"தலைவர் அருகிருந்தால் பசலை என்னைத் தீண்ட முடிவதில்லை. அவர் பிரிந்து போனதும் பசலை என்னைப் பற்றிக் கொள்கிறது. நான் என்ன செய்யட்டும்?...."

ஊருண் கேணி உண்துறைத் தொக்க
பாசி யற்றே பசலை, காதலர்
தொடுவுழித் தொடுவுழி நீங்கி
விடுவுழி விடுவுழிப் பரத்த லானே!

(குறுந்தொகை) ★

Pilot
WORLD FAMOUS
PILOT INK
FOUNTAIN PEN
AND INK
THE PILOT PEN CO., (INDIA) LTD.
OFFICE: CATHOLIC CENTRE, ARMENIAN ST. MADRAS-1. FACTORY RED HILLS, MADRAS.

ஆஸ்த்மாவா?
ஒரு நொடியில் அதை ஒழிப்பது
மல்ட்டிமிக்ஸ்
தாராளமாக மூச்சு வரச் செய்து,
தொண்டைக்கு இதமாக இருந்து,
மூச்சடைப்பையும் இருமலையும்
போக்குகிறது.
MULTIMIX
இந்தோ-ப்ரெஞ்ச் பார்மஸூடிகல் கோ.
காதோலிக் ஸென்டர், மதராஸ்-1

அரசாங்கப் பரிசு பெற்ற நாவலாசிரியர்களுள் இவர் ஒருவர். பொருளைப் பேச்சுக்குக் கதை உருவில் முக்கியத்துவம் கொடுத்து, நெல்லைச் சீமை மக்களையும் இழுத்துப் போட்டுக் கதை சொல்லத் தொடங்கி யிருக்கின்ற 'மாயாவி'யை தென்காசி மறக்க முடியாது.

அத்தியாயம் – 14

மட்டப்பாத் தெரு மைனர்

தென்காசியிலுள்ள மட்டப்பாத் தெருவுக்குக் கொஞ்ச காலம் ஒரு கெட்ட பெயர் இருந்து வந்தது – அதாவது, அந்தத் தெரு வாசிகளிடம் சற்று ஜாக்கிரதையாகப் பழக வேண்டும் என்று. ''ஓ! ஆளு மட்டப் பாத் தெருவில்லே? அதுனாலே தான் இப்படி நடந்துகொண்டிருக்கிறான்!'' என்று தென்காசியிலுள்ள இதரத் தெருக்காரர்கள் சர்வ சாதாரணமாகப் பேசுவார்கள், அத்தெருவில் யாராவது ஒருதப்புத் தண்டாவுக்குப் போய்விட்டால். மட்டப் பாத் தெருக்காரர்களில் கூடச் சிலர், ''இவருகிட்டே வாலைக் காட்டாதே, தம்பீ. இவரு எந்தத் தெரு, தெரியுமில்லே? மட்டப் பாத் தெரு, தம்பி, மட்டப்பாத் தெரு. ஞாபகமிருக்கட்டும்; வாலை ஒட்ட நறுக்கிடப் போறேன்!''

என்று பயமுறுத்துவது வழக்கம். யாரோ ஒரு நபர், போக்கிரியாக நடந்து, தான் வசித்து வந்த தெருவுக்கு இப்படி ஓர் அவப் பெயரைச் சூட்டி விட்டுப் போய் விட்டார். அந்த அவப் பெயரைச் சில மகானுபாவர்கள் தொடர்ந்து நிலைநாட்டிக் கொண்டும் வந்தார்கள்.

இந்தப் புனித கைங்கரியத்தைச் செய்து வந்த ஆசாமிகளில் ஒருவனைப்பற்றி நாம் இப்பொழுது பார்க்கலாம்.

நம் கதையின் இரண்டாவது அத்தியாயத்தில், விறகுக் கடைக் காசி ஐயர் என்ற ஒரு பாத்திரத்தைச் சிறிது நேரம் சந்தித்தோம். காசி ஐயர் மட்டப்பாத் தெருக்காரர்தான். ஆனால் அத்தெருவின் அவப்பெயரை நிலைநாட்டி வந்தவரில்லை. மாறாக, அதற்கு நல்ல பெயரைக் கொடுத்து வந்தவர். தென்காசி ஊரிலே ஐயரைத் தெரியாதவர்கள் இருக்கமாட்டார்கள். ஏனென்றால், அவர் ஊருக்கெல்லாம் நல்லவர். தமக்கு மாத்திரமல்ல; முன்பின் தெரியாத அயலானுக்குக்கூட ஒரு தீங்கு நேரிட மனம் பொறாத உயர்ந்த பண்புடையவர். அவருக்கு அவ்வூரில் எல்லோரும் நண்பர்கள். தோட்டி முதல் தொண்டமான் வரையில், பணமோ, குணமோ, ஜாதி–மத வேறுபாடோ பாராமல், சொந்தச் சகோதரனைப் போல் பழகுவார், அவர்.

நோயாளி : ஐயா, உடம்புக்கு சுரமுங்க. சாப்பிட்டு இரண்டு நாளாச்சுங்க!

டாக்டர் : ஐய்யோ! முதல்லே போய் சாப்பிட்டு வாய்யா; உடம்பு கெட்டுப் போயிடும்!

இத்தகைய நல்ல மனிதருக்கு, இறைவன் எல்லாப் பாக்கியங்களையும் குறைவின்றிக் கொடுத்திருந்தும், மக்கட் பேற்றில் மாத்திரம் அவரை மட்டம் தட்டிவிட்டார். காசி ஐயருக்கு நெடுங்காலம் குழந்தைகளே பிறக்கவில்லை. அவர் மனைவி காமாட்சி அம்மாள், குடும்பம் பூண்டற்றுப் போய்விடக் கூடாது என்று, கணவரை வற்புறுத்தி மறுமணம் செய்து கொள்ளச் செய்தாள். ஆனால், காசி ஐயர் கட்டிக்கொண்ட இளையாள், அவருக்கு மக்கட் பேற்றை அளிக்கவே வந்தவள் போல், கல்யாணமான மறு வருஷமே ஓர் ஆண் குழந்தையைப் பெற்றுக் கொடுத்து விட்டுக் கண்களை மூடிவிட்டாள். கிட்டாமல் கிட்டிய அந்தப் புத்திர சிகாமணிக்கு சேதுராமலிங்கம் என்ற அழகான பெயரைச் சூட்டி, அன்பைக் கொட்டி வளர்த்தனர், காசி ஐயரும், அவர் மூத்த சம்சாரம் காமாட்சி அம்மாளும். ஆனால் சேது வளர வளர, பசுவின் வயிற்றில் தோன்றிய புலியாகத் தலையெடுத்தான். அவனைத் திருத்த எவ்வளவோ முயன்றும் முடியாமற் போகவே, காசி ஐயர் அவனைப் பற்றிய கவலையிலேயே பிராணனை விட்டார்.

காமாட்சி அம்மாள் ஒரு பச்சைப் பாவம். அடித்தால் கூட அழத் தெரியாத அப்பாவி. அதோடு, தறுதலையாகத் திரிந்த சேதுவிடம் அவளுக்கு அடக்கமுடியாத ஒரு பாசம். ஒரு வகையில் பார்க்கப் போனால், பெற்றோரின் அளவு மீறிய பாசந்தானே, பிள்ளைகள் கெட்டுப் போகக் காரணமாகிறது! அதிலும் சின்னஞ்சிறு வயசிலேயே கெட்டுக் குட்டிச்சுவ

ராகிவிட்ட சேதுவுக்கு. அடக்கி ஆளும் தந்தையும் போய், பெரியம்மாவும் ஓர் அசடாக இருந்துவிட்டது ரொம்ப சவுகரியமாகப் போய் விட்டது தந்தை இறந்த மறு வருஷத்திலே அவன் சொத்துக்களைக் கைவசப் படுத்திக்கொண்டு மைனர் விளையாட்டுக்களில் இறங்கி விட்டான். எப்பொழுது பார்த்தாலும் நாலு காலிகள் பின்தொடர, அவிழ்த்துவிட்ட கோயில் காளையாகச் சுற்றித் திரிவான். வீண் சண்டைகளை விலைக்கு வாங்குவான். 'துட்டு' வைத்துச் சீட்டாடுவான். புகை குடிப்பான். 'லொண்டா'ப் (போதையளிக்கும் அபின் சேர்ந்த 'மன்மத சிந்தாமணி' எனப் புகழ்பெற்ற ஒரு லாகிரி லேகியம்) போடுவது முதல் 'தண்ணீ' போடுவது வரையில் எல்லாம் அவனுக்குத் தண்ணீர் பட்ட பாடுதான். குற்றாலத்தில் சீஸன் வந்து விட்டால், 'மீளவிட்டான் பஜார்'தான் (அக்காலத்தில் விலைமாதர் முகாமிடுவது வழக்கம்) கதியென்று கிடப்பான். இப்படியெல்லாம் மைனர் விளையாட்டுக்களில் தீவிரமாக ஈடுபட்டுக் காசைக் கரியாக்கி வந்ததால், சேதுவின் இயற்பெயர் மறைந்து, அவனுக்கு 'மட்டப்பாத் தெரு மைனர்' என்ற பெயர் நிலைத்து விட்டது.

இவர்கள் வாழ்கிறார்கள்:

தாயே, இசையின் மூலகாரணம் நீ! 'ச,ரி, க,ம,ப,த,நி,ச' என்ற சுரங்களில் ஈடுபட்டு, உன் இடது ஸ்தனத்தில் வீணையைச் சார்த்திக்கொண்டு நகங்களின் நுனிகளால் மீட்டி எழும் இன்னிசையை அனுபவிக்கும் போது, உன் திருமுகம் புதியதொரு சோபை பெறுகின்றது. — சங்கரர்

"பிள்ளை இப்படித் திரிகிறானே? அவனை எப்பொழுது, எப்படித் திருத்துவது?" என்று கண்டவர்களிடமெல்லாம் ஆலோசனை கேட்பாள் காமாட்சி அம்மாள். கடைசியில் யாரோ சொன்னார்களென்று அவள் இந்த அழகான மகனுக்கு ஒரு 'கால்கட்டை'யும் (கல்யாணத்தையும்) கட்டி வைத்துவிட்டாள். ஆனால் சேதுதான் ஊர் மேய்பவன் ஆயிற்றே!— அவன் மனைவியைத் திரும்பியே பார்ப்பதில்லை. கணவனின் பாராமுகத்தால் மனமுடைந்த அச்சிறு பெண் ஏங்கி விடும் கண்ணீர் காமாட்சி அம்மாளின் நெஞ்சை வெடிக்கச் செய்யும். "அவன் எப்படி வேண்டுமானாலும் சொத்தை அழிக்கட்டும்; சூதாடித் திரியட்டும். ஆனால் நாலில் ஒன்றில் வீட்டுக்கு வந்து மனைவியுடன் தங்கியிருந்தால் போதும்" என்று அவள் சொல்லுவாள். மகனைக் காணும்போதெல்லாம் இதைச் சொல்லி, கால்களில் விழாத குறைக்காகக் கெஞ்சுவாள்; கதறுவாள். ஆனால் சேது அவள் வார்த்தைகளைத் துளியாவது சட்டை செய்தால்தானே!

சேதுவின் குடும்பத்துக்கும், நம் கதாநாயகன் நெல்லையப்பன் குடும்பத்துக்கும் அவர்கள் தந்தைமார் தலைமுறையிலிருந்து நெருங்கிய நட்பு உண்டு. அவர்கள் வெவ்வேறு இனத்தவராக இருந்த போதிலும், ஓரினத்தவர் போலவே பழகுவார்கள்; ஆண்களும் சரி; பெண்களும் சரி. ஆனால் குத்தாலிங்கம் பிள்ளையும், காசி ஐயரும் காலமாகி, சேதுவும் மைனராகத் திரியத் தொடங்கியது தொட்டு, நெல்லையப்பன் சேதுவோடு கொண்டிருந்த நட்பைப் படிப் படியாகக் குறைத்துக் கொண்டு விட்டான். அவனுக்கு எப்பொழுதுமே கெட்ட நடவடிக்கையுடையவர்களுடன் பழகப் பிடிக்காது. தவிர சேதுவுக்குந்தான் இப்பொழுது காலிகளின் 'ஜமா' சேர்ந்து விட்டதே! எங்கேயாவது அவர்கள் இருவரும் எதிர்பாராது சந்தித்துக் கொண்டால், "என்னடே சொகந்தானா?" என்று விசாரித்துக்கொண்டு, தங்கள் வழியே செல்லும் அளவுக்குத்தான் அவர்கள் தொடர்பு இருந்து வந்தது.

> உள்ளூர ஆசையுடன் தன்னை அனுசரித்து இல்லற வாழ்க்கை நடத்தத் தெரியாத மனைவியோடு கூடி வாழ்வதைக் காட்டிலும் வேதனை தருவது வேறு எதுவுமே இல்லை, அப்படிப்பட்ட மனைவியோடு வாழ்வது தன் உயிருக்குத் தானே உலைவைத்துக் கொள்வதாகும்!
>
> —விவேக சிந்தாமணி

ஒரு சமயம், ஆற்றுக்குக் குளிக்கச் சென்று கொண்டிருந்த காமாட்சி அம்மாள், நெல்லையப்பனை வழியில் கண்டதும் அவனை நிறுத்தி, சேது கட்டிய மனைவியைத் திரும்பிப் பாராமல் இருப்பதை விவரித்து, ''நீ அவன் வயசுப் புள்ளைடா, அப்பா. நீங்க ரெண்டு பேரும் பால்ய சிநேகிதாள் வேறே. ஒண்ணாப் படிச்சேள்; ஒண்ணா வெளையாடியிருக்கேள். நீ கொஞ்சம் அவனுக்குச் சொல்லப்படாதா? பாவம், அந்தப் பொண் கண்ணாலே ஜலம் விடறதைப் பாக்க எனக்கு சகிக்கலையே,'' என்று பிரலாபித்தாள்.

''அதுக்கென்ன அம்மா; சொல்லிப் பாக்கேன்,'' என்று கூறிவிட்டு வந்தான் நெல்லையப்பன்.

இந்த வாக்களிப்புக்கு ஏற்ப அன்று மாலையில் நெல்லையப்பன் வெளியே எங்கோ போவதற்காக வீட்டிலிருந்து கிளம்பி வாசலுக்கு வந்ததும், சேது தன் ஜமாவுடன் தெரு வழியே வந்து கொண்டிருப்பதைக் கண்டான். வழக்கம்போல் நெல்லையப்பனைச் சந்தித்ததும் சேது, ''என்னடே, சொகந்தானா? குடும்பக்காரன் ஆயிட்டே; ஆளைக் கண்ணிலே காணவே கெடைக்கறதில்லை!'' என்று குசலம் விசாரித்தான். அவன் அச்சமயம் குடித்துவிட்டோ, லேகியம் போட்டுவிட்டோ, நிலைதவறி இருக்கவில்லை என்பதை உணர்ந்து கொண்ட நெல்லையப்பன், வழக்கத்துக்கு மாறாக, க்ஷேமம் விசாரிப்பதோடு நிறுத்தாமல், ''தூரமாடே போறே? வாயேன் நம்ம வீட்டுக்கு. செத்தெ பேசிக்கிட்டிருப்போம்,'' என்று அழைத்தான்.

நெல்லையப்பன் அவனை அழைத்த அதே சமயத்தில், பக்கத்து வீட்டுக்கு ஏதோ காரியமாகச் சென்றிருந்த காந்திமதி வீடு திரும்பி, அவர்களைத் தாண்டிக் கொண்டு உள்ளே சென்றாள். அழகான பெண்களைக் கண்டுவிட்டால், அவர்கள் பின்னால் போவது; மெல்லப் பேச்சுக்கொடுக்க முயலுவது; வழியிருந்தால் வலை விரிப்பது போன்ற துர்க்குணங்கள் சேதுவுக்கு நிறைய உண்டு. ஆகவே, மின்வெட்டுப்போல் தோன்றி மறைந்த காந்திமதியின் அபூர்வ எழில் மைனர் சேதுவைக் காந்தம்போல் கவர்ந்தது. அவனிடம் பேச்சுக் கொடுத்தால் அவள் யாரென்பதை அறிந்து கொள்ளலாம் என்று தோன்றவே, சேது தன் நண்பர்களை அனுப்பிவிட்டு, அவனோடு உள்ளே சென்றான்.

சேதுவை எதற்காகக் கூப்பிட்டானோ, அந்தப் பேச்சை உள்ளே சென்றதும் ஆரம்பித்து விட்டான் நெல்லையப்பன். ஆனால் சேதுவின் காமக் கண்களோ, உள்ளே சென்ற கட்டழகியைக் காணச் சுற்றி அலைந்தன. வீட்டு ரேழியில் அவர்கள் பேசிக் கொண்டிருந்தனர். அதை அடுத்திருந்த பட்டகசாலையில் காந்திமதி ஏதோ வேலை செய்து கொண்டிருந்தாள்.

நெல்லையப்பன் பேச்சை முடித்ததும், ''யாருடே இந்தப் பொண்ணு? புதுசாயிருக்கே?'' என்று கேட்டான் சேது.

நெல்லையப்பன் சேதுவின் நோக்கத்தை உணர்ந்து கொள்ளவில்லை. ''ஏன் அத்தெ மக காந்தியிடே; ஒனக்குத் தெரியாது?....நீதான் நம்ம வீட்டுப் பக்கமே வருதில்லியே?'' என்றான் அவன்.

''ஓ! ஐயாவாளின் 'உட்–பி ஒய்ப்பா'?'' என்று கேட்டுவிட்டு விகாரமாகச் சிரித்தான் சேது.

என்றைக்கு நெல்லையப்பனின் இன்பக் கனவுகள் சிதைந்தனவோ, அன்று தொட்டு யாராவது அவனையும் காந்திமதியையும் இணைத்துப் பேசினால், அவனுக்குப் பளீரென்று கோபம் வந்துவிடும். அவ்வாறே இன்றும் அவன், ''ஒய்யும் இல்லை ; எளவும் இல்லேடே'' என்று வெறுத்தாற்போல் கூறிவிட்டு, பிறகு நிலைமையைச் சமாளிக்கும் பொருட்டு. ''அது கெடக்குதுடே. ஒன் மனைவி

யைப் பத்தி நன்று சொன்னது...'' என்ா பழைய பேச்சுக்குத் திரும்பினான்.

சேதுவும், அச்சமயம் அவன் இப்படி வெறுப்பாகப் பேசியதற்குக் காரண-காரியங்களை அறியும் ஆவல் கொள்ளவில்லை. அவனுக்கு அப்பெண் யாரென்பது தெரிய வேண்டும் ; அது தெரிந்து விட்டது. அவன் நெல்லையப்பனின் மனைவியாகப் போகிறவளானால் என்ன ? இல்லாவிட்டால், வேறு

யாருக்கு மனைவியானால் அவனுக்கு என்ன? அவள் அவன் உள்ளத்தைக் கிளறி விட்டுவிட்டாள். இனி அவன் தன் வேலைகளை ஆரம்பிப்பதை அந்தப் பிரமனே வந்தாலும் நிறுத்திவிட முடியாது....!

பிறகு தொடங்கின அந்த மைனரின் திருவிளையாடல்கள். மறுநாள் முதல், அவன் ஏதாவது சாக்காக நெல்லையப்பனின் வீட்டுக்குத் தினசரி வர ஆரம்பித்தான். என்றாவது ஒருநாள் காந்திமதி மாத்திரம் வீட்டில் இருப்பாள்; அச்சமயம் அவளிடம் பேச்சுக் கொடுத்துப் பார்க்கலாம் என்பது அவன் நோக்கம்.

அவன் எதிர்பார்த்த அந்தச் சந்தர்ப்பமும் ஒருநாள் வந்தது. அன்று, அருகில் இரண்டு மைல்களுக்கு அப்பாலிருந்த இலஞ்சியில், சொந்தக்காரர் ஒருவர் வீட்டில் ஓர் இழவு விழுந்துவிட்டது. அதற்காக நெல்லையப்பனும் கோமதியாச்சியும் காலையிலேயே புறப்பட்டுப போயிருந்தனர். அப்பொழுது மாலை நான்கு மணி இருக்கும். காந்திமதி மாத்திரம் வீட்டில் தனியே இருந்தாள்.

''நெல்லையப்பா! நெல்லையப்பா!'' என்று எப்போதும் போல் கூப்பிட்டுக்கொண்டே உள்ளே வந்தான் சேது.

''அவுக இல்லியே!'' என்று அடுக்களையிலிருந்து வெளியே வந்து பதிலளிததாள் காந்தி.

''எங்கே போயிருக்கான்?''

''ஒரு துட்டிக்காக எலஞ்சிக்குப் போயிருககாக.''

''ஒங்க அம்மா?''

''அவளும் அங்கனே தான் பேயிருக்குதா.''

எதிர்பார்த்த தருணம் வந்துவிட்டதைக் கண்டுகொண்ட சேது, ''எப்போ திரும்பி வருவான், நெல்லையப்பன்?'' என்று கேட்டுக்கொண்டே அங்கிருந்த ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டான்.

''பொளுது சாயத்தான் வருவாக போலிருக்குது,'' என்றாள் காந்திமதி.

''அப்பிடியா? சரி; கொஞ்சம் நல்ல தண்ணி கொடேன்; ரொம்ப தாகமாயிருக்கு.''

சேது சட்டைப் பையிலிருந்து 'ஸெண்டின்' நெடி வீசும் கைத்துண்டை எடுத்து, முகமெல்லாம் வேர்த்துவிட்டதுபோல் ''ஸ்.... அப்பாடா!'' என்று துடைத்துக் கொண்டான்.

''நீங்க நம்ம வீட்டுகளிலே தண்ணி சாப்பிடுவீகளா?'' என்று ஆச்சரியப்பட்டாள் — ஒன்றுமறியாத பேதை காந்தி.

''தண்ணி, காபி, எது கொடுத்தாலும் சாப்பிடுவேன்; எனக்கு அந்த மாதிரி வித்தியாசம் ஒண்ணும் கெடையாது; கொடுக்கறவா கொடுத்தா எங்கேயும் சாப்பிடுவேன்; எதையும் சாப்பிடுவேன்,'' என்றான் சேது, அவளை நோக்கிக் கபடமாகப் புன்னகைத்துக் கொண்டே.

''நீங்க சாப்பிடுவீகன்னா, காப்பித் தண்ணியே கொண்டாறேன். எனக்கு என்ன?'' என்று விகல்பமின்றிக் கூறிவிட்டு உள்ளே சென்ற காந்திமதி, தனக்காகத் தயாரித்து வைத்திருந்த காப்பியை 'லோட்டா'வில் விட்டு எடுத்து வந்து சிரித்துக்கொண்டே அவனிடம் கொடுத்தாள்.

அச் சிரிப்பு சேதுவை வெறியனாக்கி விட்டது.

''என்ன சிரிக்கிறே, காந்தி?'' என்று கேட்டுக்கொண்டே காப்பியை வாங்கி ஊஞ்சலில் வைத்துவிட்டு, சடாரென்று அவளது கையை எட்டிப் பிடித்துவிட்டான் அவன்.

கைபடாத அந்த மலர், ஒரு நிமிஷத்தில், இந்தக் குரங்கின் கையில் சிக்கிக் கசங்கிப் போயிருக்கும். ஆனால்....?

அவனுடைய திடீர்ச் செய்கையால் மனம் பதறிய காந்தி, ''அடபாவி!'' என்று கூக்குரலிடவும், அதே சமயம் இலஞ்சியிலிருந்து திரும்பிய நெல்லையப்பனும், கோமதியாச்சியும் உள்ளே நுழையவும் சரியாக இருந்தது!

(தொடரும்)

நம்பிக்கையாம் நம்பிக்கை !

எஸ். சேதுராமகிருஷ்ணன்

எப்போதாவதுதான் இந்தப் பெயர் உங்கள் கண்களில் தட்டுப்படும்; பெயர் ஒரு முறை அறிமுகமானால் போதும், அப்புறம் உங்கள் நினைவில் அழுந்தப் பதிந்து விடும்.

மிகப் பழைய காலத்தில் நடந்தது இது. ஒரு குடியானவன்; உழைத்துச் சாப்பிடுகிறவன். ஒரு நாள் அவனுக்குக் கடவுளைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை எழுந்தது. உடனேயே ஓடோடிக் கோவில் குருக்களின் வீட்டிற்குச் சென்றான். குருக்கள் சந்தியா வந்தனம் பண்ணிக் கொண்டிருந்தார். குடியானவன், "சாமி!" என்று கூப்பிட்டு, "நான் கடவுளைப் பார்க்கவேணும்! அதுக்கு என்ன செய்யவேணும்?" என்று கேட்டான். குருக்களுக்கு ஸந்தியா வந்தனம் பண்ணும்போது குடியானவன் வந்து கெடுத்து விட்டானே என்று மிகுந்த கோபம். "போடா, போ. மண்ணாங்கட்டி!" என்று கத்தினார் அவர் – கோபத்துடன்.

குடியானவன் பரம திருப்தியுடன் வீடு திரும்பினான். கடவுளைப் பார்க்க மந்திரம் கிடைத்து விட்டது என்ற நம்பிக்கையுடன் திரும்பினான். வீட்டிலே ஓர் இடத்தில் உட்கார்ந்து கொண்டு, "மண்ணாங்கட்டி....!" என்று சொல்லிக் கொண்டேயிருந்தான். கடவுள் தரிசனமாகும்வரை அப்படியே 'மண்ணாங்கட்டி' ஜபத்தைப் பண்ணிக் கொண்டே இருந்தான் ஏழை!

ஒரு நாள் கழிந்தது. இரண்டு நாட்கள் கழிந்தன.

மூன்றாம் நாள் காலை பகவான் மஹாவிஷ்ணு குடியானவனுக்குத் தரிசனம் தந்தார். "பக்தா, என்ன வரம் வேண்டும்?" என்று அன்போடு கேட்டார்.

"நீ யார்?" என்று அதிகாரத்துடன் வினவினான் உழவன்.

"நான்தான் மஹாவிஷ்ணு....! கடவுள்!" என்றார் பகவான்.

குடியானவனுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. அவன் பகவானின் கையை 'கர, கர' வென்று இழுத்துக் கொண்டு குருக்கள் வீட்டுக்கு ஓடி வந்தான். "குருக்கள் சாமி, இவரு கையிலே சக்கரம், சங்கு, உடம்பிலே பட்டு எல்லாத்தையும் போட்டுக்கிட்டு, கடவுள்னு சொல்றாரு. இவரு கடவுளா, சாமி?.... நீங்க சொன்னாத்தான் எனக்கு நம்பிக்கை வரும்!" என்றான்.

விஷ்ணு குழந்தையானார்....! ★

'பூவை' எழுதிய **வசந்தபைரவி** விலை: (எட்டணா) 50 நயா பைசா

விவரங்களுக்கு: 'உமா', :: சென்னை-1.

ளோடு ஒட்டி உறவாடியது.

கொஞ்சப் பொழுதிற்கு முன்னதாக 'மாமா.... மாமா!' என்று கதறிய சொற்களை எதிரொலித்துக் காட்டியது சுற்றுப்புறம். விழிகளை ஒரு நிலைக்குக் கொண்டு வந்து பார்த்தாள் அழகி. வாய் ஓயாமல் இன்னமும் அழுது கொண்டுதான் இருந்தார் அழகேசனின் அப்பா.



''மாமா, என்னை

11. அந்திச் செவ்வானம் அப்போதே மழை!

''ஆமாம், அழகியேதான்! எங்கள் அழகி!....என் மருமகள் அழகியேதான்!''

பெரியவர் சோமநாதன் தன்னை மறக்காமல் விம்மினார்; தன்னை மறந்து பேசினார்; அந்தரத்தில் பறந்தது அவர் உள்ளம்; அது 'சிரி சிரி' யென்று சிரித்தது. நடுங்கும் கைகளால் மருமகளின் தோள்களைத் தொட்டுத் தூக்கினார் அவர். ஊன் உருகியது; உள்ளம் உருகியது. ஏன், அவரே உருகி வழிந்து கொண்டிருந்தார்!

அழகி கண்களைத் திறந்தாள். பார்வைக்குக் கண்ணீர் வெள்ளம் அணை கட்டியது. சித்தம் பறிபோனவளைப் போல அங்கும் இங்கும், அப்படியும் இப்படியும் பார்த்தாள். அவளுக்கு ஒன்றும் பேசத் தோன்றவில்லை. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டமாதிரி இருந்தது அவளுக்கு. உணர்ச்சி வெறியில் 'அள்ளாடித் தள்ளாடி' ஓடிக்கொண்டிருந்த மனக் குதிரையின் லகானைப் பிடித்து இழுத்தாள். சுய நினைவு சிறுகச் சிறுக அவ

மன்னிச்சிடுங்க....! என்னை மன்னிச்சிடுங்க, மாமா!'' என்று செருமினாள் அவள்.

''அம்மா அழகி, நானா உன்னை மன்னிக்க வேணும்?....இல்லே அம்மா!....நீதான் என்னை மன்னிக்கணும்!... குற்றம் செய்தவங்கதானே மன்னிப்பை யாசிக்க வேணும்?'' என்று சொல்லி மறுபடியும் விம்மினார் அவர்.

''நீங்க பெரியவங்க; என் மாமனார். அப்படியெல்லாம் சொல்லாதீங்க...!'' என்று அழகி கூறிக் கொண்டிருக்கும்போது, சுசீலா, அவள் கணவர் ராமலிங்கம், அவள் தம்பி கரிகாலன் மூவரும் அங்கே வந்து சேர்ந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து செந்தாமரை வந்து நின்றாள்; இரண்டு விநாடி கழித்து முரளி வந்தான்.

''வாங்க ஐயா!'' என்று சோமநாதனை வரவேற்றாள் சுசீலா. சொல்லி முடிந்து திரும்பிய போது, அங்கே அழகேசனும் கஜேந்திரனும் நிற்பதைக் கண்டாள். ''உள்ளே வாங்க!'' என்றாள். முள் எடுக்கும் நேரம் அவ

பூவை

ளித்து கண்ணின் மணிகள் துடிப்பை மறந்தன.

அந்த ஒரு நாளிலே, அழகியின் கழுத்திலே தாலி கட்டிய அழகேசனிடமிருந்து ஓடோடி வந்தவளுக்கு அடைக்கலம் அளித்தபோது, வெறி கக்கும் கண்களுடன் பேசிய அந்த அழகேசனின் உருவத்தை சுசிலாவின் மனம் நினைவுபடுத்தியிருக்க வேண்டும். காட்டுப் புலி அமைதி நிறைந்த புள்ளிமானை உருமாறி விட்டதா?... இல்லை, சர்க்கஸ் கூண்டிலே புலியை அடைத்துப் போட்டு அதன் பற்களைப் பிடுங்கி எறிந்து விட்டார்களா? பயம் சுழித்தோடும் அழகேசனின் அந்தக் கண்கள் எங்கே....?

கஜேந்திரன் தோளில் சுமந்திருந்த காமிராவுடன் உள்ளே நடந்தார்.

அழகேசன் தயங்கித் தயங்கி, அடிமேல் அடியெடுத்து வைத்து உள்ளே நுழைந்தான்.

சோமநாதன் திரும்பினர்; திடுக்கிட்டார். "யார், நீயா?...அழகியைக் கொன்று போடவா வந்து விட்டாய்?....அடைத்துப் போட்டிருந்த அறையை உடைத்துக் கொண்டா வெளியே ஓடி வந்து விட்டாய்?....அடபாவி! என் தெய்வத்தின் உயிரைக் குடிக்கவா துப்புத் தெரிந்து கொண்டு வந்து விட்டாய்?'' என்று ஓலம் பரப்பியவாறு தன் 'பிண்டத்'தை நெருங்கினர்; இரண்டு கன்னங்களிலும் மாறி மாறி அறைந்தார்.

''மாமா...மாமா!'' என்று ஓடி வந்தாள் அழகி.

மருமகளின் அழைப்புக்கேட்டுத் திரும்பிய கிழவர் ஒன்றும் புரியாமல் விழித்தார்.

முன்னொரு நாள் விபத்துக்காளான தன் மகனை தன் மருமகள் காப்பாற்றி வீட்டில் சேர்த்து விட்டு மறைந்ததை நினைத்தார்.

அழகேசன் ஆடாமல் அசையாமல் நின்றுகொண்டிருந்தான். மறுகணம், அவன் திரும்பி நடந்தான்.

செந்தாமரை விசையாக அழகேசனைத் தொடர்ந்து சென்ருள். ''ஸார்....!'' என்று அலட்டினுள். அவன் திரும்பிப் பார்க்கவில்லை. அவள் திரும்பி வந்து, ''ஐயா, என் திட்டத்தை யெல்லாம் பாழாக்கி விட்டீங்களே?'' என்று வேதனையுடன் குற்றஞ் சாட்டினுள்.

தன் தோழி செந்தாமரை சூடகமாகப் பேசிய பேச்சின் 'குரலை' நிதானிக்க மாட்டாமல் விழித்தாள் அழகி.

''என்னம்மா சொல்றே நீ?....'' என்று கேட்டார் சோமநாதன்.

இவ்வளவு நாழிகை வாய் மூடியிருந்த கஜேந்திரன் பெரியவரிடம் போய், ''ஐயா, இப்போதுதான் உங்கள் பையனுக்குக் கண்கள் திறந்திருக்கின்றன. திறந்த கண்களை நன்ருக விழித்துப் பார்க்கிற நேரத்திலே மறுபடியும் கண்களை மூடிக் கொள்ளச் செய்து விட்டீர்களே, சோமநாதன்!'' என்று உரிமையுடன் வாதாடினர்.

''ஐயோ, அந்தப் பாவியின் கண்கள் திறக்கவே வேண்டாம். மூடியே இருக்கட்டும். ஐயா, இந்த ஒரு உதவியையும் எனக்குச் செய்யுங்கள்; ஒரு வேளை திறந்திருந்தாலும், அவன் கண்களைக் கோந்து போட்டு ஒட்டி விடுங்கள். இல்லையானல், அவன் தன்னுடைய பாவக் கண்களால் என் குலதெய்வத்தைச் சுட்டெரித்துச் சாம்பலாக்கி, அதை நெற்றியில் பூசிக் கொண்டு உலகத்தையே அழித்து விடுவான்!.... அவன் போகட்டும், தொலையட்டும்!....'' என்று விறுகொண்டு கத்தினர் சோமநாதன்.

எல்லோருக்கும் நாற்காலிகள் கொண்டு வந்து போட்டான் கரிகாலன். பெரியவர் நாற்காலியில் குந்தப் போனர்.

''அப்படியென்ருல் எங்கள் அழகியின் தாலிக்கு யார் ஜவாப்சொல்வது?'' என்ற சொற்களைத் தூவிக் கொண்டே அண்டி வந்

த்தாள் தாமரை. அவளது முகத்தில் 'பாத்தி' கட்டி ஓடிக் கொண்டிருந்த ரத்தம் அவளுடைய கண்களுக்குப் பாய்ந்தது.

"என்ன ?...." என்று சொன்ன பெரியவர், வார்த்தைகளுக்குத் தொடர்பிணைத்துப் பேச முடியாமல், நட்ட மரம் போல அப்படியே எழுந்து நின்றார்.

தலையில் கையை வைத்த வண்ணம் நாற்காலியில் உட்கார்ந்து விட்டாள் அழகி. "ஐயோ, அம்மா!" என்று முனகினாள் அவள்.

"செந்தாமரை, எல்லாவற்றையும் அப்பாலே பேசிக் கொள்ளலாம். மறுபடியும் அழகிக்கு மயக்கம் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். போய்க் கவனி அழகியை!" என்று யோசனை கூறினான் முரளி. நல்ல மாற்றம்!

முரளியையும் செந்தாமரையும் மாறி மாறிப் பார்த்தார் சோமநாதன். அழகி விரும்பினால் முரளியின் கைகளில் அவளை ஒப்படைக்கத் தனக்குச் சம்மதம் என்றுதெரிவித்த பழைய கடிதத்தை நினைத்துக் கொண்டார். பைத்தியம் பிடித்தவர் போல மண்டையில் அடித்துக் கொண்டார். வாதம் கெட்டால் பைத்தியம் என்பார்களே!

"மாமா!" என்று கூப்பிட்டுப் பாய்ந்த அழகி, அவரது கைகளை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்; பிறகு அவற்றைத் தடவி விடலானாள்.

"அக்கா, நான் அபாக்யவதி! மகாபாவி!.... பேதை நான்; பேய் நான்!..." என்று முழங்கிய அழகியின் குரல் செம்புதாஸ் தெரு முழுவதையும் திடுக்கிடச் செய்திருக்க வேண்டும். ஒய்வெடுத்துக்கொண்டிருந்தவர்கள் ஓடோடி வந்தார்கள். எல்லோரையும் கண்டதும், அழகிக்குத் தூக்கிவாரிப் போட்டது. நடந்த சம்பவங்கள் இணைத்துக்காட்டிய பழைய உலகத்தில் சற்றுமுன் அவள் சஞ்சரித்ததை உணர்ந்தாள். அம்பாரம் கட்டிக் குவிந்து போன நினைவுகளின் விளைவுதான் தன்னுடைய இந்தத் தடுமாற்றம் என்பதையும் அழகி அறிந்தாள். நெட்டுயிர்த்தாள்!

"அழகி, நீ சற்று நேரமாவது தூங்கம்மா!" என்று அன்பு பாராட்டி வேண்டினான் முரளி.

முரளியின் மேலுடையில் செந்தாமரையின் பட்டாடை உரசிக் கொண்டிருந்தது. அவர்கள் இருவரையும் பார்த்தபடி, "ஆமாம், இனி நான் தூங்கி விடுவேன்... ஆமாம், இனி நான் தூங்கி விடுவேன்!" என்று உரைத்த அழகி, படுக்கையில் தலை சாய்த்தாள். அவளுடைய கூந்தலை அலங்கரித்த ஒற்றை ரோஜாப்பூ நழுவிக் கீழே விழுந்தது.

பதித்த கண் பிரிக்காமல் அந்த 'உயிலை' சுசிலா பார்த்துக்கொண்டிருந்தாள். உடன் இருந்த ராமலிங்கம் அடைந்த திகைப்பு அதிகம். புருஷனும் மனைவியும் சோமநாதன் அவர்களைத் தலை நிமிர்த்திப் பார்த்தார்கள்.

"அம்மா சுசிலா, என்னுடைய மருமகப் பெண்ணுக்கு நான் செய்த பாவத்துக்கு என் உயிர் உடலில் இருக்கையிலேயே ஏதாவது பிராயச் சித்தம் செய்து கொண்டால்தான் இந்தக் கட்டை வேகும். ஆகவேதான் இந்த ஏற்பாடு. ஆனால், இந்த உயிலைக் கண்டு அழகி என்ன சொல்லப் போகுதோ என்றுதான் எனக்குப் பயமாக இருக்குது. சுசிலா, எப்படியாவது நீயும் உன் புருஷனும் சேர்ந்து சொல்லி அழகியின் மனசை மாற்றி, அழகி எப்படியாவது உயிலை வாங்கிக் கொள்ளும்படி செய்திடம்மா! சோலையாக இருக்க வேண்டிய அழகியின் வாழ்க்கையைச் சுடுகாடாக்கி விட்டான் என் மகன். அழகியை மயக்கி கல்யாணம் செய்து கொண்டது எப்படி என்வரைக்கும் மூடு மந்திரமாக்கப் பட்டதோ, அதே போலத்தான் மத்தியானம்

அவன் இங்கே திடுதிப் பென்று வந்து நின்றதும் எனக்குப் புதிராகத் தோணுது.

"அந்தப் பாதகன் அழகேசனை பத்து நாளைக்கு எங்கேயாவது கண் காணாத இடத்திலே அடைச்சுப் போட்டிருந்தாலாவது மனசு தெளியுமா என்று சோதிச்சுப் பார்க்கத்தான் கஜேந்திரனைக் கொண்டு ஒரு திட்டம் போட்டேன். முரளியைத் தன்னக்கட்டி, அவனைக் கொண்டே அழகேசனுக்குத் தபால் எழுதவும் செய்தேன். திரை மறைவிலே நாடகமாடிய கஜேந்திரன் அழகேசனிடம் ரகசியம் பூராவையும் சொல்லி விட்டானே, என்னவோ?....அழகேசனுக்கு ஒரு பாவத்தையும் செய்யாமலிருக்கும் போதே என்னை விஷம் கொடுத்துக் கொல்லச் சதி பண்ணிய துரோகி அவன்; ஆனால் இப்போது, என் ரகசியத் திட்டம் அம்பலமானால், நாளைக்கே அல்ல, இன்று ராத்திரிக்குள்ளேயே என்னைத் தீர்த்துக் கட்டி விடுவான். என் மகன் என்று அவனைச் சொல்லிக் கொள்வதற்குக்கூட வெட்கப் பட வேண்டியவன் நான். அப்பன் அருமை அப்பன் மாண்டால்தான் தெரியும்!....கஜேந்திரன் என்னைக் காட்டிக் கொடுப்பதைப் பற்றிக் கவலையில்லை.

"அழகேசனிடமிருந்து அழகியைக் காப்பாற்ற நான் வேலியாக அமைந்தபோது மாத்திரம் என் உயிர் எனக்கு வெல்லக் கட்டியாகயிருந்திச்சு. ஆனால் இப்போது என் எண்ணமெல்லாம் புழுதி மண்ணாகி விட்டது. சுசிலா, நான் இன்னொரு பெரிய தப்பு செய்திட்டேன். அநேகமாக உங்களுக்கும் தெரிஞ்சிருக்கத்தான் வேணும். முரளி பைத்தியக்காரத்தனமாக அழகியைப் பற்றிச் சொன்னதை வைத்துக் கொண்டு, அழகிக்கு கடுதாசி எழுதி புஸ்தகத்திலே வச்சிட்டேன். இங்கே கீழே குழாயடிக்குப் போனபோது கசங்கிப் போன கடுதாசி கையிலே தட்டுப் பட்டுது. அழகி எனக்கு எழுதின பதில் போலத்தான் தோணுச்சு. முரளியும் நேற்று வந்து தன் குற்றத்தை எடுத்துச் சொல்லி மன்னிக்கும்படி வேண்டினான். அவன் மூலம்தான் எனக்கு அழகியின் இருப்பிடம் தெரிஞ்சுது. அழகியை உயிரோடு காணுகிற வரைக்கும் என் உயிர் என் வசமில்லை; ஏதாவது 'எக்குத்தப்பா' நடந்திடக் கூடாதே யென்றுதான் முன்னாலேயே போலீசுக்கு வேறே 'போன்' மூலம் தகவல் அனுப்பிச்சேன். அதுதான் அவங்களும் எனக்கு முந்திக்கிணு ஓடி வந்திருக்கிருங்க. சரி, விஷயத்துக்கு வருவோம். எனக்கு என்னவோ இனம் புரியாத ஒரு பயம் மனசுக்குள்ளேயே சுத்திக்கிட்டிருக்குது. என்ன கெட்ட காரியம் நடக்கப் போகுதோ, என்னவோ?....அந்தக் கெட்டது என்னை ஒட்டி – அதிலும் என் பிள்ளையைக் கொண்டுதான் முக்கால் வாசி நடக்க வேணும். உயிர் போனதற்குப் பின்னாலே பெற்ற பிள்ளை கையாலே நெய்ப் பந்தமும் பிடி அரிசியும் வாங்கிக்கிறதுக்கு முன்பு, நான் என் உயிரையே அவனுக்கு எழுதிக் கொடுத்திட முடிவு செய்திட்டேன். ஆக, அவன் என்னை மட்டும் எதுவும் செய்யட்டும்; எனக்குப் பயமில்லை. பாவம், அவனுக்கு என் சொத்தைக் கொடுக்காத நான் என்னுடைய உயிரையாவது கொடுக்க வேண்டாமா? அருமை மகனைப் பெற்றவனுக்கு இப்படியாவது ஒரு நிம்மதி கிடைக்கட்டுமே! காசி ராமேஸ்வரம் க்ஷேத்திராடனம் செய்து பெற்ற மாணிக்கக் கட்டியாயிற்றே என் செல்வன்!....சுசிலா, இந்த உயிலை அழகி மறுக்காமல் பெற்றுக் கொள்ள வழிசெய்துவிடு போதும். என்னுடைய சுயார்ஜித சொத்துதான் இதில் குறிக்கப்பட்டிருக்கிற பத்து லட்சரூபாயும், பங்களாவும் அதுக்கேதான். அப்புறம் அழகியைப் பற்றின இன்னொரு விஷயத்தையும் நீயே தீர்மானிக்க வேண்டும். அதுதான் அழகியின் எதிர்கால வாழ்வு. அழகேசனைப் பழி வாங்குவதாகவும் அவன் பேரிலே கேஸ்போடப்போவதாகவும் அடிக்

க்டி அழகி சொல்லுது. இதுக்கும் ஒரு முடிவு கட்டவேணும். என் மருமகளுக்குக் கிடைத்த பரிசுப் பணம் ரூபாய் ஐயாயிரத்தையும் தனியே பாங்கில் போட்டு விடுகிறேன். அது தனிப் பணம். அழகியிடம் பேசி ஒரு தீர்மானத்துக்கு வந்தாகவேணும். இனியும் நாள் கடத்திக் கொண்டு போவது அவ்வளவு உசிதமல்ல. அழகேசனின் நிழலில் அழகி ஒண்டுமென்று எனக்குத் தோன்றவில்லை. அழகி என் உயிலுக்கு சம்மதம் சொல்லி விட்டால், இன்று வேணுமானாலும், அழகேசனுக்கு 'விடுதலைப் பத்திரம்' கொடுத்து விடுகிறேன். அவன் செய்த அக்கிரமங்களே அவனைப் பழிவாங்கிவிடும்; அவன் கம்பி எண்ணாமல் தப்பிக்கவும் முடியாது. அநியாயமாக ஒரு ரோஜாப் பூவைக் கருகிக் காயச் செய்து விட்டானே பாவி!....''

சோமநாதனுக்கு அதற்குமேல் பேசத் தெம்பில்லை. இருமல் துளைத் தெடுத்தது. கண்ணீர் தொண்டைக் குழியில் தேங்கியது.

கோடைக்குப் புதிதாக அமைத்திருந்த மாடிப் பந்தலில் மாலைக் காற்று வெண்சாமரம் வீசியது; கடலை அணைத்துப் பிறந்த தென்றலல்லவா?

சுசீலாவுக்குப் பெரியவரிடம் என்ன ஆறுதல் கூறுவதென்று நிதானப்படவில்லை. ஆகவே, காப்பி கொண்டு வருவதாகச் சொல்லிக் கீழே இறங்கினாள். ராமலிங்கத்திடம் எல்லாவற்றையும் வெளியிட்டாள்.

''இன்று இரவு பெரியவர் இங்கேயே தங்கட்டும். காலையில் அழகியைக் கலந்து பேசி முடிவு சொல்வதாகத் தெரிவித்து விடு,'' என்றார் சுசீலாவின் கணவர்.

காப்பி தயாரிக்கச் சமையல் அறைக்குச் சென்றாள் சுசிலா. அப்போது கஜேந்திரன் வாசற்படியில் நின்றதைக் கவனித்தாள். உடனே திரும்பி வந்தாள்.

''அழகியை எங்கே காணோம்? இன்னுமா தூங்குகிறார்கள்?'' என்றார் கஜேந்திரன்.

''அழைக்கிறேன். தயவு செய்து முதலில் என்னுடைய கேள்விகளுக்குப் பதில் கொடுப்பீர்களா?''—விசாரித்தாள் சுசீலா.

"கேளுங்கள்!"

"அழகேசனை நீங்கள் தான் கூட்டி வந்தீர்களா?"

"ஆமாம்."

"ஏன்?"

"அழகியிடம் மன்னிப்பு கேட்க...!"

"யார்?"

"ஏன், அழகேசனேதான்!"

"அப்படியென்றால், பெரியவர் சோமநாதன் போட்ட திட்டம் பலித்து விட்டதென்று அர்த்தமா?"

"ஆமாம்! ஆனால் அதற்குள் தான் திரண்டுவந்த வெண்ணெய்த் தாழியை இந்தக்கிழவர் உடைத்து நொறுக்கி விட்டாரே?"

"சரி, நடந்ததைப் பற்றிப் பேசி இனி புண்ணியம் இல்லை. நடக்க வேண்டியதைப் பேசுங்கள். இன்னொரு முக்கிய விஷயத்தையும் உங்களிடம் கேட்க வேண்டும்."

"கேளுங்கள், அம்மா!"

"அந்தப் போட்டோ ஆல்பத்திலுள்ள படங்களில் காணப்படுகிறதெல்லாம் உண்மைதானா? இல்லை, உங்கள் காமிராத் திறமையைக் காட்ட கையாண்ட சாகஸமா?" என்று கொஞ்சம் தூக்கலான குரலில் கேட்டாள் சுசிலா.

"எல்லாம் உண்மை. அழகேசன் நேற்றுவரை பயங்கர மிருகமாகத்தான் இருந்தான். ஆனால்

இப்போது மனிதத் தன்மை அவன் ரத்தத்தில் ஊறத் தொடங்கியிருக்கிறது. ஆல்பத்திலுள்ள புகைப் படங்களைப் பற்றி இனிச் சொல்ல வேண்டும். அதில் காணப்பட்ட படங்கள் ஆறும் உண்மைப் போட்டோக்கள்தான். சிறிது நேரம் அவற்றை மனசால் நினைத்துப் பாருங்கள், சுசிலா! முதல் புகைப் படத்தில் அழகியை நெருங்கிய அழகேசன் அவர்களது கழுத்தை நெறித்துக் கொண்டிருக்கிறன். சோமநாதன் உடல் நலமில்லாமல் சுய நினைவு தப்பிக் கிடந்ததைப் பயன் படுத்திக் கொண்டான்! அழகியின் அப்பாவின் கடனை அடைக்க உதவிய அழகேசன் அழகியைப் பிடிக்க வலைவிரித்தான். முகூர்த்தம் குறிக்கப்பட்ட போதுதான் அழகேசனது உண்மை சொரூபம் அழகிக்கு எட்டத் தொடங்கிற்று. அழகியின் அழகிலே வெறி கொண்டு பைத்தியமாகித் திரிந்த அழகேசன் அழகியை வலுக்கட்டாயப்படுத்தி தன் அறைக்கு இட்டுவரச் செய்தான். அவளோ அவனைத் தாறு மாறகத் திட்டினுள். மனம் பொறுக்காத வேங்கை புள்ளி மானைக் கொல்லப் பார்த்தது. எனக்கும் தெரியாமல் நடந்த இச் செயலைத் தூர இருந்து படம் பிடித்து விட்டேன். அடுத்த படம். அழகியின் அப்பாவைப் பணம் கொடுத்து ஏமாற்ற எத்தனம் செய்த அழகேசன் ஆரம்பத்தில் அதற்கு உடன்பட மறுத்த அக் கிழவரைத் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தினன். தெய்வாதீனமாக நான் அங்கே போய்ச் சேர்ந்தேன். அப்போதும் படமெடுத்து விட்டேன். மூன்றுவது போட்டோவில் அழகிக்கு அழகேசன் தாலி பூட்டிய காட்சி உள்ளது. நாலாவது படம் அழகேசன் நவயுக கிருஷ்ண பரமாத்மா என்பதை நிரூபிக்கப் போதுமானதாகும்.

''ஐந்தாவது படத்தில்தான் பெரிய ரகசியம் இருக்கிறது. இவனே ஜவுளிக் கடைப் பணத்தைக் களவாடிவிட்டு, பணம் பத்தாயிரம் ரூபாய் இரவிலே திருட்டு போய் விட்டதென்று பொய் சொல்லி போலீசையும் ஏமாற்றி, தானே எல்லாப் பணத்தையும் பத்திரப்படுத்தி விட்டான்!

''ஆறுவது போட்டோ என் சம்பந்தப் பட்டதாகும். இப்போது உங்களிடம் பழைய விஷயம் ஒன்றையும் தெரிவிக்க வேண்டும். அதாவது, அழகேசன் அழகியைக் குறி வைத்து வலை வீசி முடிந்து வெற்றி கிடைக்குமென்பது ஊர்ஜிதமான போது, அழகியுடன் தான் வாழப் போவதைப் பற்றிச் சொன்னுன் அவன்.

''ஆனல், அவள் ஒப்ப மறுத்ததைச் சொல்ல வில்லை. தன் தம்பி தன் அப்பாவுடன் தகராறு செய்வதாகவும் அவன் மனத்தை மயக்கிச் சில மணி நேரம் கட்டுப்படுத்தி வைத்திருக்க ஏதாவது உபாயம் சொல்லும்படியும் கேட்டான். சரியென்று இணங்கி அவனிடம் ரோஜாப்பூவில் மயக்க மருந்தைத் தடவிக் கொடுத்தேன். அந்த விஷம் சாமான்யமல்ல! — எண்ணங்கள் அப்படி அப்படியே கட்டுப்பட்டு நிற்கும்! கடைசியில் திருமண விழாவிற்குப் போன போதுதான் அழகேசனுடைய மூடு மந்திரத்தை என்னல் புரிந்து கொள்ள முடிந்தது. என்னை ஏமாற்றியதைப் பற்றி அக்கறையில்லை. ஆனல், அபலை ஒருத்தியின் வாழ்க்கையைச் சூறையாடி விட்டானே என்ற ஆத்திரம் தோன்றின போது, அவனைப் பழி வாங்கினல்தான் நல்லதென்று முடிவு கட்டினேன். நான் என்னையும் அறியாமல் செய்த ஒரு செயல்—அதாவது மேற்படி சம்பவங்களைப் புகைப் படங்களில் அடைத்த அச் செயல்—எனக்குப் பேருதவியாக அமைந்தது.

''விஷயத்தை வெளிக் காட்டாமல், உள்ளூர அவனிடம் மனம் வெறுத்து நடந்து கொண்டேன். ஒன்றுகப் படித்தவர்கள் நாங்கள் என்பதை அவன் மறந்து விட்டான். அவனுக்கு முன்னல் நானும் மறந்தேன். பொய்க்

கேஸில் என்னை அகப்பட்டுக் கொள்ளச் செய்தான். உங்கள் தம்பியையும் சந்தேகப்பட்டு மேற்படி திருட்டு வழக்கில் இழுத்து விட்டான். என்னிடம் உள்ள 'நெகடிவ்' ரொம்பவும் உதவியது. 'உன்னை ஜெயிலில் அடைத்து விட்டு மறு ஜோலி பார்க்கிறேன்' என்று நான் சபதம் செய்தேன். அவன் ஆத்திரப்பட்டு என்னைச் சுட முயன்றபோது, 'கிளிக்' சத்தம் கேட்டது. திரும்பினேன். என் ஆள் அக்காட்சியைப் படமெடுத்து விட்டான். கஜேந்திரனின் தந்திரங்களை அவன் இப்போதுதான் அறிந்து கொள்ள முடிந்தது போலும்! நான்கு சுவர்களுக்கு மத்தியில்தான் அழகேசன் தன்னை உணர்ந்து கொண்டிருக்கிறான். அவர் உயிர் என் பிடியில் அகப்பட்டிருப்பதை அவன் புரிந்து கொண்டு விட்டான். என் போட்டோ ஆல்பத்தை அழகியின் கண்களில் காட்டாமல் இருக்கும்படி உங்கள் தம்பி கரிகாலனிடம் வேண்டினேன். ஆனால், அழகி அதைப் பார்த்து விட்டதாகவும் சேதி கிடைத்தது. எந்த ஒரு நடப்பையும் எத்தனை நாளைக்குத்தான் போர்வை போட்டு மூடிவைக்க இயலும்?... அழகேசனைப் பற்றிய இந்த ரகசியங்களைச் சொல்லி, அழகியின் வாழ்வில் புதுமலர்ச்சியையோ அல்லது ஏதாவது ஒரு திருப்பத்தையோ உண்டாக்கச் செய்தால்தான் நான் அவர்களுக்குச் செய்த பாவத்திற்குப் பரிகாரம் கிடைக்கும் என்பது என் நினைப்பு. அதற்கு ஒரு வழி செய்யவே இன்று வருவதாகச் சொல்லியிருந்தேன்!''

பத்து நிமிஷப் பேச்சை முடித்தார் கஜேந்திரன்.

இப்பொழுதும் சுசீலா திக்பிரமை அடைந்தாள். குழம்பினாள்!

உலக மாதா கறுப்புத்திரையை அணிந்தாள். கண் பறிக்கும் நட்சத்திரப் பூக்கள் கண் சிமிட்டின.

''அக்கா,'' என்று விளித்து வந்தவள் நர்ஸ் தாமரை.

''அப்புறம் உன் திட்டம் என்ன?'' என்று வினவினாள் சுசிலா.

''அழகி என்னிடம் ஒரு விண்ணப்பத்தைக் கேட்டிருக்கிறாள். நான் அழகியிடம் ஒரு வேண்டுகோளை யாசிக்கப் போகிறேன். அவள் எனக்கு நல்ல சொல் சொன்னால்தான், அவள் விருப்பப்படி முரளியின் நிழலிலே நான் நிற்பேன்,'' என்று தீர்மானமாகப் பேசினாள் தாமரை.

''அழகியின் வேண்டுகோள், முரளியும் நீயும் காதலர்களாக—கணவன் மனைவியாக ஆக வேண்டுமென்பது. ஆனால் அழகியிடம் நீ என்ன யாசிக்கப் போகிறாய்?''

''அவள் அழகேசனுடன் வாழ்க்கை நடத்த வேண்டும். இது தான் என் கனவு. மிஸ்டர் அழகேசன் 'மனிதராக' ஆகிவிட்டாரென்று அறிந்தேன். ஆகவே, அவரை இனியும் பழிவாங்க வேண்டுமென்பது அழகியின் லட்சியமானால் அது தவறு. எந்த மனிதனும் என்றென்றுமே மிருகமாகயிருக்கமாட்டான்; ஒரு நாள் மனிதனாக மாறித்தான் தீருவான். ஏன், முரளியைத்தான் உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளுங்களேன். அவர் ஆடாத ஆட்டமா? தகாத நடவடிக்கைகளின் காரணமாகச் சிவப்புத் தொப்பிகளுக்கு வேலை வைத்த மனிதர், இன்று நானே அதிசயப்படும்படி மாறி விட்டாரே?... அழகேசன் மட்டும் ஏன் மாறமாட்டார்?....நான் தஞ்சாவூரிலிருந்து திருச்சியில் உறவினர் வீட்டில் இருந்தபோது, அழகேசனுடைய தவறான போக்கைக் கேள்விப்பட்டேன். மைலாப்பூரில் திருமணத்துக்கு வந்து இறங்கியிருந்த அழகிக்கு லெட்டர் எழுதித் தெரிவித்தேன். அப்படிப்பட்ட அழகேசன்தான் புத்தி தெளிந்து விட்டாரென்று அதே நான்தான் இப்பொழுது ஆயிரம் தரம் சொல்கிறேன்...! அப்படித்தான் அவர் மாறா விட்டால், இவள் அவரை மாற்ற முற்பட வேண்டும். அழகி தான் ஒரு பெண் என்

> நல்லொழுக்கமுள்ள பெண்கள் பணிந்தே நடப்பார்கள். (தங்கள் கணவன்) மறைவாக உள்ள சமயத்தில் அல்லாஹ்வின் காவலைக் கொண்டு (யாவற்றையும்) பேணிக் காத்துக் கொள்வார்கள்.
>
> — திருக்குர்ஆன்

புதையே மறந்துவிடுகிருள் பாவம்!...''

மருத்துவப் பணிப் பெண்ணின் இதயம் உரைத்த பேச்சு சுசிலாவிற்கு அதிசயமாக யிருந்தது. பெரியவரை மாடியில் வைத்து விட்டுக் 'கதைத்துக்' கொண்டிருந்தது அவள் நினைவுக்கு வந்ததும், காப்பியுடன் உயரச் சென்ருள்.

மல்லிகேஸ்வரர் கோயிற் கோபுரம் ஒளி ஏந்தி நின்றது. 'ஆண்டவனே, உன்னை நம்ப ஆரம்பித்திருக்கிருள் அழகி; அவளை அவள் கணவர் அழகேசனுடன் வாழ அனுக்கிரகம் செய்!' என்று பிரார்த்தித்தாள்.

கீழே வந்தபோது, ''அக்கா, அழகி எழுந்திருக்கவேயில்லை; பூட்டின கதவும் திறக்கக்காணும். என்ன மாயமோ தெரியலையே!'' என்று பதட்டத்துடன் சொன்னுள் வேலைக்காரி வள்ளி.

உள் அறையின் கதவுகளை உடைத்துத்தான் திறக்க முடிந்தது. அழகி செத்த பிணம் போல பிரக்ஞையின்றித் தரையில் கிடந்தாள். பக்கத்தில் கசங்கிய காகிதக்கிழிசல் காணப்பட்டது. அதில் வெள்ளைத் தூள் ஒட்டியிருந்தது.

''ஐயையோ. விஷமா?'' என்று அலறினுள் சுசிலா. அந்திச் செவ்வானம் அப்பொழுதே தான் மழை பொழியும்!

''பயப்படாதீங்க, அக்கா! உட்கொள்ளத் தயாரித்த விஷத் தூள் பொட்டலத்தை மாற்றி, தூக்க மருந்துப் பொட்டலத்தை அந்த இடத்தில் வைத்துவிட்டேன். அழகியை முழுக்க முழுக்க அறிந்தவள் நான். ஆனதால்தான் அவளையும் காப்பாற்ற முடிந்தது. அழகேசனுக்குச் சொந்தமான உயிரைப் போக்கடித்துக் கொள்ள இவளுக்கு ஏது உரிமை? இவள் கழுத்தை அலங்கரிக்கும் மாங்கல்யத்துக்குத் துரோகம் செய்ய இவளால் முடியாது...! முடியவே முடியாது!'' என்ருள் தாமரை.

12. தெய்வத் திருவிளக்கு ஏற்றி வைத்தாள்!

''ஏன் பெண்ணுய்ப் பிறந்தேன்?''

இந்த ஒரு கேள்வி — ஒரே ஒரு கேள்வி அழகியின் இதயத் தளத்திலிருந்து ஒன்பது கேள்விகளாக, தொண்ணூறு கேள்விகளாக, தொள்ளாயிரம் கேள்விகளாக மாறி எதிரொலிப்பாய்ப்பிக் கொண்டிருந்தது. கைகொட்டித் தவழ்ந்த கடல் அலைகள் மெய் விதிர்த்து நின்றன. குரலெடுத்துப் பாட பண் சேர்த்து இசையமைத்துக் கொண்டிருந்த மாருதம் செயலற்றுப் போனது.

அழகி திக்கெட்டிலும் விழிகளைத் திசை திருப்பினுள். சூன்யம் அட்டகாசமாகச் சிரித்தது. விதியின் குரலா அது? அல்லது, நியதியின் அழைப்பா அது? அல்லது, ஆண்டவனது தீர்ப்பின் ஓசையா? அல்லது, அழகேசன்தான் கூப்பிடுகின்ருரா....?

தான் அழகி என்பதை உணர்ந்தாள். அப்போது வாலைக்குமரியான அழகி தோற்றம் தந்தாள். ஆசை நினைவுகளைக் கண்களிலே தேக்க விட்டு ஒயிலாக நின்ருள் அந்த அழகி. அப்பொழுது எதிர்காலம் அவள் முன் பசுஞ்சோலையாக — காதற் பூங்காவாக — கனவுகள் சிரித்து வரவேற்கும் பூலோக சொர்க்கமாகத் திகழ்ந்திருக்க வேண்டும். ஆனல் இப்போது

அவள் மனக்கண்முன் வேறொரு அழகியின் உருவம் தோன்றியது. ரசமிழந்த கண்ணாடியில் தெரியும் முகம்போல பொலிவு மறைந்து காணப்பட்டாள். கண்ட கனவுகள் களவு போய்விட்டனவென்று மொழிந்தன அவை: வருங்காலம் பேய்க்காடாகி விட்டதே என்று அவை புலம்பின. அந்த அழகி வெறும் அழகியல்ல; திருமதி அழகேசன்!—ஆமாம், மிஸஸ் அழகேசன்....!

'சிவனே' யென்று நிச்சிந்தையுடன் 'ஜலதரங்கம்' வாசித்துக் கொண்டிருந்தது விரிகடல். அதற்குப் பேசத் தெரியவில்லை. தெரிந்திருந்தால், அழகியின் கண்ணீரைத் துடைத்திருக்காதா?.... ஆனாலும் சுழல் கடலின் நோக்கு முழுவதும் அழகியைச் சுற்றியே தான் கட்டுண்டிருந்தது. 'அருகிருந்த தோழி தாமரையைப் பிரிந்து அவள் மெல்ல மெல்ல ஏன் தள்ளி உட்கார வேண்டும்?' என்பதாக அதற்கு ஒரு குருட்டுச் சந்தேகம்.

"ஊஹூம், முடியாது! அழகேசனுடன் நான் வாழவே முடியாது! நான் ஜாதி ரோஜா. தேவலோகத்து ரோஜாத்தி நான். அற்ப மனிதன் ஒருவனுக்கு என் கழுத்தைக் கொடுத்தது போதும்: அத்துடன் அழகேசன் திருப்தியடையாமற்போனால், என்னுடைய உயிரையும் வேண்டுமானால் கொடுத்து விடுகிறேன். ஆனால் என் உள்ளத்தை ஒருபோதும் தாரைவார்த்துக் கொடுக்கமாட்டேன். செந்தாமரை, நீயல்லவா இப்போது என்னைச் சித்திரவதை செய்கிறாய்? நேற்றிரவிலிருந்து உன் கொடுமைதான் என்னை அணு அணுவாகச் சாகடித்துக் கொண்டு வருகிறது. நான் உயிர் துறப்பதைப் பற்றிக் கவலைப் படவில்லை. என்றோ நான் மடிந்து விட்டேன். அழகேசன் அவர்களின் கை ஸ்பரிசம் என் மேனியில் பட்டு, கழுத்தில் மங்கலநாண் ஏறிய அன்றைக்கே நான் நடைப்பிணமானேன்; ஆனால், இப்பொழுது எனக்குச் சாக மனமில்லை. என்னை உயிருடன் வாழவிடு. அதாவது நீ என் அத்தான் மாளியுடன் இதயத்தோடு இதயம் பிணைந்து, உயிருடன் உயிர் இணைந்து மணவறையிலே காட்சியளிப்பதைப் பார்த்து மகிழும்வரை என்னை வாழவிடு!.... சகோதரி, என்னைச் சோதிக்காதே, நான் தெய்வமல்ல!—என்னிடம் வரம் கேட்கிறாயே? நான் என்ன செய்வேன்?... கொல்லும் புலியிடம் கொம்புமான் தலை கொடுக்கும்படி பணிக்கின்றாயே?.... என் வேண்டுகோளுக்கு நீ மனம் இரங்கு. என் அத்தான், ஆமாம், என் அருமை அத்தான் மாளியின் வாழ்வில் வசந்தம் வரச் செய். அதற்காக என் வாழ்வைப் பணயம் கேட்காதே! தருமமல்ல இது; நியாயமல்ல இது; நேர்மையல்ல இது! அழகேசன் மிருகமாயிருந்தவர் மனிதராகி விட்டிருக்கலாம். ஆனாலும் என் உடலை அவருக்கு விற்கத் தயாராக இல்லை—என் மாமனார் ஏந்தி நிற்கும் பத்து லட்சம் ரூபாய்க்கு! அழகேசனுக்குத் தேவையெல்லாம் என் உடல்தான்; உள்ளமல்ல! அவருடைய மிருக வெறிக்கு மாடப்புறாவை—ரோஜாப்பூவை—பைங்கிளியைப் பலிகொடுக்கச் செய்து விடாதே, தாமரை! கெட்டவராகயிருந்த மாளி அத்தான் நல்லவராக மாறிவிட்டாரென்றால், அவரை அப்படிச் செய்த பெருமையில் உன்னைவிட எனக்குத்தான் மிகுதிப் பங்கு உண்டு என்பதை மட்டும் மறந்துவிடாதே!.... அழகேசன் பெயரை உச்சரிக்கவே நா கூசுகிறது; அவர் எனக்கு எழுதிய ஒரு காதல் கடிதத்தைப் பார்த்தபோது, எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. ஒரு வகையில் நான் வாழ்க்கையில் தோற்றாலும், இன்னொரு வகையில் நான் வெற்றிதான் பெற்றேன். அழகேசன் என் எண்ணங்களை மயக்கி என்னைக் கடிமணம் செய்துகொண்டிருக்கலாம்; ஆனால் என் மட்டில் அவர் என்ன பயன் கண்டார்?—பொய்யாய், கனவாய், பழங்கதையாய் நான் எவ்வாறு ஆனேனோ, அப்படித்

தான் அவர் கனவும் ஆசையும் இன்பமும் அழிந்து விட்டன. பெண்ணின் வாழ்வு தன் கணவனின் நிழலிலேதான் பூரணத்வம் அடையுமென்று நான் எழுதியதைச்சுட்டிக் காட்டுகிருய் !—அந்தப் பூரணத்வம் எனக்கு வேண்டவே வேண்டாம்! நான் தமிழ்ப் பெண்—மறக்க மாட்டேன். அதற்குத்தான் அழகேசன் பேரில் வழக்கு தொடுப்பதைக்கூட மறந்து விட்டேன், நேற்று இரவிலிருந்து. விதி செய்த பிழையைத் திருத்துவது முடியாது!—அழகேசனுடைய தாலி எனக்குப் பூவும் மஞ்சளும்தராட்டும்.தஞ்சை என்னை அழைக்கிறது. அங்கு என்னுடைய இலக்கியப் பணி தொடரும். ஓரளவு அமைதி பெறுவேன். என் மாமனர் — அவர் மட்டும் அன்றைக்கு உடல் நலத்தோடு இருந்திருந்தால், இந்த அபாக்கியவதி பாக்யவதியாகத் திகழ்ந்திருப்பேன்!... எல்லாம் பழங் கதை! ஆறின கஞ்சி; பலிக்காத கனு!....''

அழகி இன்னும் என்ன வெல்லாமோ பேசத் துடித்தாள். அதற்குள் செந்தாமரை குறுக்கிட்டாள். ''அழகி, எனக்கு மண்டை வெடித்துவிடும் போலிருக்குது; தயவுசெய்து அத்தோடு நிறுத்து,'' என்று கெஞ்சினுள்.

ஒரு கணம் அழகி சித்தபேதமடைந்தவள் மாதிரி 'கடகட' வென்று சிரித்தாள். மறுவினடி, ''பயப்படாதே, தாமரை!...என் வேண்டுகோளை நீ மறுத்தால் என் நிலை இப்படித்தான் ஆகுமென்பதற்கு இது ஒரு ஒத்திகை,'' என்று எச்சரித்தாள்.

மெரினு கடற்கரையில் அன்று உயிர் தந்தவன் கரிகாலன். இன்று அழகிக்கு உயிர் கொடுக்க செந்தாமரை உறுதி பூண்டாள்.

கண்ணுமூச்சி விளையாட்டிலே கண்களை இறுகக்கட்டிக் கொண்ட குழந்தைக்கு எல்லாம் இருட்டாக இருக்கும்; அது திண்டாடும். ஆனல் அக்குழந்தையின் திண்டாட்டத்தைக் கண்டு, விளையாட்டில் கலந்துகொண்ட மற்றப் பிள்ளைகள் கை கொட்டிச் சிரித்து வேடிக்கை பண்ணுவது உண்டல்லவா?

கண்களைக் கட்டிக்கொண்ட குழந்தையின் நிலையில் இருந்தாள் அழகி. கண்டும் காணுமலும் உலகம் அவளை ஏளனம் செய்வதாகப் புலப்பட்டது. அவள் அழுதாள்; அரற்றினள்; அலறினுள்; துடித்தாள்; துவண்டாள்; தன்னை யாரோ, துண்டு துண்டாக வெட்டிக் கூறு போட்டிருப்பதாக உணர்ந்தாள்.

முதல் இரவை ஆசையுடன் வரவேற்கக் காத்திருக்கும் குலச்சுடரின் குதூகலம்போல, நிறைமதி பிறைத் திலகம் இட்டுக் கோலாகலமாகத் திகழ்ந்தாள்.

கூடத்துக் கண்ணுடியில் தெரிந்த தன் நெற்றிக் குங்குமத்தைக் கவனித்தாள் அழகி. சிறிதளவு கலைந்திருந்தது. சுட்டுவிரல் நகக்கண்ணினுல் குங்குமம் எடுத்து அதை நெற்றியில் வைத்தாள். மறுகணம், அவள் உடம்பு நிலை பெயர்ந்து குலுங்கத் தொடங்கியது. 'உனக்கு மஞ்சள் குங்குமம் தந்தது யார்?' என்ற குரல் எங்கிருந்தோ புறப்பட்டது. 'யார், அழகேசன்!' என்று தன்னை மறந்து — தனக்குள்ளாகப் பேசிக் கொண்டாள் அவள்.

'அந்த அழகேசனை வாழவைக்கா விட்டால், உனக்கு வாழ்வு ஏது? வளம் ஏது? குங்குமம் ஏது? மாங்கல்யம் ஏது?' என்று மறுபடியும் ஒரு குரல் வெடித்தது.

அப்பொழுது, ''அழகி, உன்னை அழகேசன்பார்க்கவேண்டுமாம்,'' என்ற செய்தியை அஞ்சல் செய்தாள் தாமரை.

'என்னைப் பார்க்க அழகேசன் வந்திருக்கிருரா?' என்று தன்னைத் தானே கேள்வி கேட்டுக் கொண்டிருந்தாள். அதற்குள் அழகேசன் உள் அறையில் பாதம் எடுத்து வைத்து விட்டான்.

விண் அரங்கில் நிலவுக் கன்னி 'ஸரிகமபதநிஸ' என்று ஸ்வரங்கள் பயின்று கொண்டிருந்தாள். அடைக்கப்பட்ட கதவுகளுக்குள்ளே இரட்டை உள்ளங்கள் சிறை யிருந்தன. அழகேசனைக் கண்டதும் அவளுக்கு வியர்த்துக் கொட்டியது. அவளையும் அறியாமல் எழுந்து நின்றாள் — தீக்குச் சிரிக்கத் தெரியுமா?

"உட்கார், அழகி!" என்று பவ்யமாகச் சொன்னான் அழகேசன் — தீ சுடாதோ?

அழகேசன் என்றுமில்லாத அழகுடன் விளங்கினான். மணவறைக் கோலத்தில் இருந்த அழகேசனை அவள் பார்த்தது சரியாக நெஞ்சில் தங்கி யிருக்கவில்லை. ஆனாலும், திருமணம் முடிந்து மயங்கிக் கிடந்த அவனை சைக்கிள் ரிக்ஷாவில் வைத்துக் கரிகாலன் இதே இல்லத்தில் சேர்ப்பித்த சில பல நிமிஷங்கள் கழிந்ததும், அழகேசன் அவளைத் தேடி வந்த போது தெரிந்த அழகேசனுக்கும் இவனுக்கும் மலைக்கும் மடுவுக்குமாக வித்தியாசம் காணப்பட்டது போல அவளுக்குத் தோன்றியது. 'எல்லோரும் சாதிப்பதுபோல இவரின் உள்ளம் திருந்தி விட்டிருக்கிறதா? இல்லை, உருவம் மாத்திரம்தான் மாறி விட்டிருக்கிறதா?' என்று அவள் மனச்சாட்சியைக் கலந்து ஆலோசித்தாள்.

அது தருணம், "....அ....ழ....கி!" என்றார் அழகேசன். "உன்னுடன் புதிய உருவம் புனைந்த அழகேசனாக நான் இப்போது பேசவில்லை; புத்தம் புதிய உள்ளம் கொண்டவனாகப் பேசுறேன். நான் செய்த தவறுகள் எனக்குக் குழி பறித்தன. அதில் நான் அழுந்தித் திக்குமுக்காடித் திணறினேன்; பிறகு மனிதத் தன்மையை மீட்டுக் கொண்டிருக்கிறேன். மிருகமாக இருந்த அழகேசன் மனிதனாகி — மனிதப் புழுவில் ஒருவனாக நின்று - மனிதத் தன்மை பெற்ற சில மனிதருள் ஒருவனைத் தனித்து ஒதுங்கி நான் உன்னிடம் பேசுகிறேன். ஆபத்துக்கு எனக்கு உதவியவள் நீ; ஆனாலும் உன்னை ஆட்டிப் படைத்தேன். குற்றம் செய்வது மனித இயல்பு; ஆனால் அதை மன்னிப்பது தெய்வப் பண்பு என்ற பெரியோர் வார்த்தைகளை எனக்கு அரணாக்கிக்கொண்டு, என் தவறுகளுக்கு வக்காலத்து வாங்குவதற்கு இப்போது நான் உன்னிடம் வரவில்லை. நான் உனக்கு இழைத்த தீச்செயல்கள் ஒன்றிரண்டல்ல; உன் பேரில் நான் பற்றியிருந்த காதல், வெறுங் காதலல்ல! — காதல் வெறி!....நான் உணர்ச்சிவசப்பட்டவன்! — உணருகிறேன். தஞ்சையிலே உன் முக தரிசனம் கிடைத்தது. உன்னுடைய தெய்வீக அழகு என்னைக் கிறுக்காக்கியது; நான் புத்தியிழந்தேன். அதன் விளைவினால்தான், உன்னிடம் என் தாலியைச் சமர்ப்பிக்க முடிந்தது. தூரத்து உறவு என்றாலும் எட்டிய முறைமை ஆனாலும், உன்னைத் திருமணம் முடித்துக் கொண்டால், நாம் ஒத்துவாழலாம் என்று ஆசையுடன் எண்ணினேன். திருமண ஏற்பாடுகள் துரிதமாக நடந்தன. படுத்த படுக்கையாகக் கிடந்த என் அப்பா என் பெயருக்கு எழுதிக்கொடுத்த

சிரியுங்கள்— ரசியுங்கள்!

"எங்கள் பள்ளிக்கூடத்தில் 'ஹோம் ஸயின்ஸ் கிளாஸி'லே பூசணிக்காய் அல்வா பண்ணப் போகிறோம்."

"ருசி பார்த்துச் சொல்ல நான் வரட்டுமா, பேபி?"

ஐயாயிரம் ரூபாய் செக் என் கௌரவத்துக்கு வாழ்த்துக் கூறியது. ஆனால், நீ தந்த விலாசங்களுக்கும் சேர்த்து கல்யாணப் பத்திரிகை அனுப்பிய சமயத்தில், திடுதிப்பென்று உன் மனம் என்னை விரும்பவில்லை யென்பதை உன் தகப்பனார் மூலம் அறிந்தேன். திருமண ஏற்பாடுகள் முடிந்து முகூர்த்த தேதி நெருங்கிக் கொண்டிருக்கையில், நீ சொன்ன பதில் என் கௌரவத்தை விழுங்கிச் சாப்பிட்டுவிட எத்தனித்தது; நான் என் கௌரவத்தைக் காப்பாற்ற முயன்றேன். விளைவுகள் பயங்கரமாக விளைந்தன. உன் மீது நான் கொண்டிருந்த ஆசை அவ்வளவு இவ்வளவல்ல. என் ஆசை வெட்கமறியவில்லை. கடைசியில் நடந்த கதை என் அப்பாவுக்குத் தெரிந்தது. எங்கள் வீட்டு ரோஜாவான உனக்கு என் அப்பா முள்ளாக அமைந்தார் – உன்னை என்னிடமிருந்து காப்பாற்ற!.... முள்ளைப் பிடுங்கித் தீயிலிடும் அளவுக்குக் கூட உன் அழகு என்னை மிருகமாக்கியது. நான் விந்தை மனிதன் தான்! ஆனாலும் நேற்று வரை, நான் உன்னுடன் வாழ முடியும் என்றுதான் கனவு கண்டேன்; நீ மனம் திருந்தி–அல்ல, மனம் மாறி என்னை ஏற்றுக் கொள்வாயென்று தான் கோட்டை கட்டியிருந்தேன். நான் திருந்தினால், நான் போலீசில் கொடுத்த பொய்க் கேஸ் என்னைப் பாதிக்காமல் காப்பாற்றுவதாக கஜேந்திரன் உறுதி சொன்னார்; தாமரை ஆறுதல் தந்தாள். ஆனால் இன்றோ என் கனவுக் கோட்டை இடிந்து நொறுங்கித் தரை மட்டமாகி விட்டது!'' என்று விம்மினான் அழகேசன்.

''அப்படி யென்றால், நீங்கள் ஏன் இங்கே மறுதபாலும் வந்தீர்கள்?'' என்று கேட்டாள் அழகி.

''யாருமறியா வேளையிலே உன்னிடம் மன்னிப்புப் பெறுவதற்குத் தான் நான் வந்தேன்.''

''உலகத்தைச் சுடுகாடாக்கி விட்டு ஊழித்தாண்டவம் ஆடும் கடவுளா நீங்கள்?''

''என்னைத் தெய்வமாக்காதே; ஊழித்தாண்டவம் புரிந்தவனைத் தான் நாமெல்லாம் இன்றுகூட வணங்குகிறோமே!.... ஆனால் நான் சாதாரணமான மனிதன்; உன்னிடம் மன்னிப்பு கேட்கவென்றே ஓடோடி வந்திருக்கிறேன். நீ தேவலோகத்துக்கு ரோஜாத்தி. வெறும் மனிதனை நான் அண்டவே முடியாது!.... என்னை மன்னித்துவிடு. 'மன்னித்தேன்' என்று சொல். உன்னுடைய மன்னிப்பு கிடைத்து விட்டால்தான், என் மிருக வெறி அடங்கும்; மனிதனாக அப்போதுதான் உலகம் என்னை ஏற்கும். உன்னுடைய மன்னிப்பு என் காதுகளிலே விழுகின்ற அந்தக் கணத்திலே, நான் உன்னுடன் ஒரு நூறு வருஷம் வாழ்ந்து விட்டது போன்ற ஆறுதல் பெற்று விடுவேன்; ஆனந்தம் எய்தி விடுவேன். ஆகவே, ஒரு கணப் பொழுதுக்கு என்னை வாழவிடு, அழகி! ஒரே ஒரு கணம் என்னை உன்னுடையவனாக வாழவிடு!....'' என்று சொல்லிய அழகேசன் அழகியை நெருங்கி, அவளது கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினான். அழகியின் பூங்கரங்களில் வெம்மை தணியாத கண்ணீர்த் துளிகள் பல விழுந்து தெறித்துக் கொண்டிருந்தன. அழகேசனுடைய கைகள் நடுங்கின; தன் இதயத்தைப் பிடித்து அழுத்தினான்; அவன் கண்கள் தத்தளித்தன.

''நீங்க துரோகி! நீங்க இந்த உலகத்திலே ஒரு கணநேரங்கூட வாழக்கூடாது. என் முன்னாலே நிற்காதீங்க...! ரோஜாப் பூவைக் கருகி மடியச் செய்து விட்டு, கடைசி காலத்திலே மன்னிப்பு கேட்க வந்து விட்டீங்களே? போங்கள்!.... உங்களைப் பெற்றவரிடம் மன்னிப்பு கேளுங்கள்; உங்களைப் படைத்தானே அவனிடம் மன்னிப்பு கோருங்கள்! அழகி உங்களை மன்னிக்க மாட்டாள்! இனியும் உங்க நிழல் என்மீது பட்டால் என் உயிர்ப்பூ கருகி விடும்! ஓடுங்கள்! நான் தீ!.... கெட்டதை நெருங்கவிடாமல் காத்துக் கொள்

வதற்கும், கெட்டதைச் சுட்டுப் பொசுக்கவும் நெருப்பு உபயோகப்பட வேணும் என்று அப்பா சொல்லுவார்கள். ஆகவே, ஓடி விடுங்கள்! நான் தீ!....'' என்று அழகி வெறியுடன் பேசி முடித்துத் திரும்பிய போது, தடாலென்று சுருண்டு விழுந்தான் அழகேசன்.

தன்னையும் மறந்து ''ஆ!.... ஐயோ!'' என்று அலறிவிட்டாள் அழகி.

செந்தாமரை, சுசீலா, வள்ளி மூவரும் முன்னால் ஓடி வந்தார்கள். அதற்குப் பிறகு, ராமலிங்கம், முரளி, கரிகாலன் மூவரும் வேகமாக வந்தார்கள்.

அழகேசனின் நிலையைச் சோதித்தாள் நர்ஸ் தாமரை.

''ஐயோ, அழகேசனைக் கொன்று விட்டாயா, அழகி?...''

''தாமரை, நான் அவரைக் கொல்லவில்லை!'' என்று நடுங்கினுள் அழகி.

''இல்லை, நீதான் கொன்று விட்டாய்! நீ சுயநலக்காரி!.......உன் சுயநலம் அழகேசனைக் கொன்றது; இன்னும் கொஞ்ச நாழிகையில் செந்தாமரையையும் பலி வாங்கப் போகிறது...! உன் நெஞ்சில் பதியாத அழகேசனைப் பழி வாங்கத் துடித்த நீ, அந்த யோசனை கைநழுவிப் போனதை உணர்ந்து உன்னை நீயே சாகடித்துக்கொள்ள முயன்ருய்; அது தோல்வியில் முடியவே, இப்போது திருந்திய அழகேசனைக் கொன்று விட்டாய்!... நீ பெண் அல்ல; பெண் மிருகம்! நீ ரோஜாவா?....ஆம்; ரோஜாவேதான்!....விஷ ரோஜா! தீ ரோஜா! அழகேசனின் மூச்சு உன் உடம்பில் பட்டால்கூட உன் உடல் சாம்பலாகி விடுமென்ருயே?.... அது பொய்; இப்போது உன் விஷக் காற்று அழகேசன் மீது வீசியதும் தான் அவர் சாய்ந்துவிட்டார்! நீ நெருப்பு; அவரைப் பொசுக்கி விட்டாய் நீ! அழகி, சிந்தித்துப் பார்! நீ அந்நாளிலே கண்ட இன்பக் கனவை மாத்திரம் தியாகம் செய்துவிடச் சம்மதித்திருந்தால், அழகேசனிடம் நீ கொண்டிருந்த பழியுணர்ச்சி தணிந்திருக்காதா? நீ உன்னையே தியாகம் செய்ய மனம் ஒப்பியிருந்தால், அழகேசனைத் திருத்தியிருக்கலாமே!.... பெண்ணுக்குப் புதுமைப் பண்பு தேவைதான்; புரட்சிப் பண்பும் தேவைதான்! ஆனாலும், நம் தமிழ்ப் பண்பை நீ மறந்துவிட்டாயே?... விதி உன்னையும் அழகேசனையும் பிணைத்து விட்டது. இது விட்ட குறை தொட்ட குறை!....ஆனால், விதியையும் மீறி உன் போக்குக்கு உன்னை மாற்றப் பகிரதப் பிரயத்தனம் செய்து பார்த்தாய்!.... வென்ருயா? இல்லை! என் சுயநலத்தை உனக்காகத் தியாகம் செய்யும்படி கெஞ்சினுய்; அதே சமயம் நீ எனக்காக உன் சுயநலத்தை தியாகம் செய்ய இன்று வரை ஒப்பவில்லையே?.... கருணை, தியாகம், மன்னிப்பு முதலிய தெய்வப் பண்புகளை மகாத்மா போதித்ததை ஆசிரியையான நீயே மறந்துவிட்டாயே?....நீ உன்னை ரோஜா என்பாய்; அதே சமயம் முள் இருக்குமென்ற நியதியையும் நினைக்கவில்லை; அந்த முள்ளை நீக்கும் பண்பு, சாகஸம் வாழ்க்கையை அமைத்துக் கொள்பவர் கையிலல்லவா இருக்கிறது! – உன் கல்யாணத்தின்போது நம் கரிகாலன் கொடுத்த பரிசுப் புத்தகத்தில் இதே குறிப்பைத் தானே எழுதி எச்சரித்திருந்தார்!.... நீ உன்னை உணரத் தவறிவிட்டாய்! ஆண்டவனை நீ நம்பு; நம்பாமல் இரு; ஆனால், அதே ஆண்டவன் கிழித்த வளையத்திற்குள்தான் வாழ்க்கை ஆட்டத்தை விளையாட வேண்டியவர்கள் நாம். இயற்கையின் நியதிக் கோட்டைத் தாண்ட நமக்கு அதிகாரம் ஏது? இப்போதாவது எண்ணிப் பார்! நீ அழகேசனுக்குச் சொந்தமான அழகி என்பதை அரைக்கணமாவது நினைத்துப் பார்! திருந்திய – திருத்தப்பட்ட புதிய அழகேசன் உன் புருஷன் என்பதை எண்ணிப் பெருமைப்படு. காணும்

கனவுகள் – எண்ணும் ஆசைகள் நிறைவேறினால்தான் வாழ்வு ஆனந்தமாக அமையுமென்றால், அப்புறம் உலகமே சூன்ய வெளியாகித்தான் போகும்! நீ அழகேசனை மாத்திரம் அழிக்கவில்லை; உன்னையும் நீயே அழித்துக் கொண்டு விட்டாய்!''

செந்தாமரை உணர்ச்சிப்பெருக்குடன் பேசி நிறுத்தினாள்.

சுற்றி யிருந்தவர்களைப் பார்த்தாள்; எதிர்த்து ஒலித்த வார்த்தைகளைக் கேட்டாள். ''ஆமாம்; நான் சுயநலக்காரி! நான் சுயநலக்காரிதான்!'' என்று பிதற்றிக் கொண்டே, மயங்கிக் கீழே சாய்ந்தாள் அழகி.

டாக்டர் வந்தார். அழகியையும் அழகேசனையும் 'நாடிக் குழல்' பரிசோதித்தது.

''அழகி!.... அழகி!'' என்ற குரல் எழுந்தது. அழகேசன் எழுந்தான். புதிய உலகத்தில் அடியெடுத்து வைத்திருப்பவன் போல அவன் விழித்து விழித்துப் பார்த்தான். 'யானை அடி கல்' பதித்த தரையிலே அழகு ரோஜா கண் மூடிக் கிடந்தது. அவன் நெருங்கினான்; அழகியைத் தன் மடியில் கிடத்தியவாறு, அவளுடைய ரோஜா முகத்திலிருந்த பனித் துளிகளைத் துடைத்தான். இன்ப ஸ்பரிசம் பட்டதும், அழகி கண் மலர்ந்தாள். "நீங்களா?'' என்றாள். தொடர்ந்து, ''என்னை மன்னித்து விடுங்கள், அத்தான்!'' என்று தேம்பினாள்.

அழகேசன் உணர்ச்சி வசப்பட்டான்; விசும்பினான்!

''அழகி, இப்பொழுதுதான் நீ தெய்வப் பெண்ணாகத் தோன்றுகின்றாய். உன் வாழ்வை வளமாக்க வேண்டுமென்று பாடுபட்ட எங்கள் யெல்லோரையும் வாழ வைத்துவிட்டாய்!.... உன்னையே நீ தியாகம் செய்துகொண்டு, உன் புருஷன் – உன் அத்தான் அழகேசன் அவர்களின் வாழ்க்கையையும் மலரச் செய்து விட்டாயல்லவா? ஆமாம், இனி நீ வெறும் ரோஜா அல்ல – ஜாதி ரோஜா! தேவலோகத்து ரோஜாவும் நீயே தான். நீ பிறவிப் பயன் பெற்றுவிட்டாய்; நீ ஏற்றிவைத்த தெய்வத் திருவிளக்கின் ஒளியிலே உன் கணவர் புதுப் பிறப்பெடுத்து விட்டார். பெண்களிலே தனித்தியங்கினாய் அன்று – உன் சுயநலஉள்ளத்தின் விளைவினால்! ரோஜாப் பூக்களிலே தனித்த ரோஜாப்பூவாக மணம் பரப்புகின்றாய் இன்று–உன்னுடைய தியாகப்பண்பின் காரணமாக!.... தீயிடம் தண்மை உண்டென்பதை நிரூபித்துக் காட்டிவிட்டாய்; நீ இப்போதுதான் புதுமைப் பெண்; புரட்சிப் பெண். சகோதரி அழகி, சிரி, நன்றாகச் சிரி!.... உங்கள் புதுமண வாழ்வு சிறக்க ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்,'' என்றாள் தாமரை. தம்பதிகளுக்கு ஆரத்தி எடுத்தாள்.

உயிர் மறந்து நின்றார் பெரியவர் சோமநாதன். 'ஒரு மிருகம் மனிதனாக மாறிய அதிசயத்தை என் கண்ணால் கண்டேன்; ஒரு பெண் தன்னையே அழித்துக்கொண்டு தெய்வமாக மாறிய அதிசயத்தையும் இப்போதே கண்டேன்!' என்று தன்னுள் சொல்லிக்கொண்டார். கண்ணீர் சொரிந்தார்.

அழகிக்குக் கிடைத்த அயோத்தியிலே அழகேசன் – அழகி ஜோடிக்கு முகமன் கூறிக் கொண்டிருந்தது, அந்த முதல் இரவு– ஆமாம்; அந்த முதல் இரவு!

[வாழிய வாழியவே!] ★

இப்பகுதியில் இதுவரை கலந்துகொண்ட தமிழறிஞர்கள்: ***அ. சீநிவாசராகவன், ஆ. ரா. இந்திரா, கி. வா. ஜகந்நாதன், ம. ரா. போ. குருசாமி.*** இப்பொழுது 'ஈழகேசரி' ஆசிரியர் வீரம் பற்றிச் சொல்லுகிருர். ரத்தினச் சுருக்கமான—சுவை பொதிந்த எழுத்துக்கள்.

தமிழர் வீரம்

இராஜ அரியரத்தினம்

அந்த வீடு சிறிய வீடுதான். ஆனல் அது வீரம் செறிந்த வீடு. அந்த வீட்டுக் கூரைமீது படர்ந்த பூசனிக் கொடி பூவும் பிஞ்சுமாய்க் காட்சியளித்தது. வீட்டின் தலைவி அக்கொடியிலே தொங்கிய காயைப் பார்த்து, இயற்கையின் அற்புதத்தை நினைந்து இன்பம் எய்தி நின்ருளோ, என்னவோ!

பல நாட்களாக அந்தப் பக்கம் தலைகாட்டாத அயல் வீட்டுப்பெண் முற்றத்தில் நிற்பதைக் கண்டவுடன், ''தாயே, உள்ளே வந்து இருக்கலாமே,'' என்று சொல்லிக் கொண்டே வீட்டுத் திண்ணையை நோக்கிச் சென்ருள். வந்த பெண் திண்ணைக்கு அருகே யிருந்த தூணைப் பற்றிக் கொண்டு அவளைப் பார்த்துப் பேசுகின்ருள்: ''அன்னையே, உன்னை விட்டுப் பிரிந்து சென்ற உனது அருமை மகன் இன்னும் வீடு திரும்பவில்லையாம். அவன் எங்கு சென்றுள்ளான்? அவனைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை மிகுதியால் இங்கு வந்தேன். எங்கு சென்ருல் அவனைக் காணலாம்?''—இப்படி அவள் பேசிய போது அவள் முகத்தில் அன்பும் ஆர்வமும் நன்கு ததும்பின....!

இவற்றையெல்லாங் கேட்டுக் கொண்டு நின்ற அந்த மறக்குலப் பெண்ணின் முகத்தில் மாற்றம் எதுவுமே ஏற்படவில்லை. அவள் முகத்தில் வீரத்தின் சாயல் மாத்திரம் படிந்திருந்தது. அவள் கூறினுள்: ''எனது மகன் என்னை இங்கு விட்டுப் பிரிந்து சென்றது உண்மைதான். அதை எண்ணி நீ வருந்துவதை என்னுல் உணர முடிகின்றது. காட்டிலே பிறந்து வளரும் புலிக் குட்டி வயதாகி விட்டதும் 'கன்னி வேட்டை'க்குப் புறப்பட்டு விடுகின்றது. அது காட்டில் உள்ள களிற்றினைக் கொல்வதையே விரும்புகின்றது. அவ்வாறே மக்களைப் பெற்று வளர்ப்பது தாயின் கடன். மகன் வளர்ந்து காளைப் பருவம் எய்தியதும் அவன் போர்க் களம் சென்று வெற்றி வாகை சூடுவது அவனது கடனுகும். என் மகன் புலியொத்த திறன் படைத்தவன். அந்த ஆண்மை காரணமாக அவன் போர்க்களம் சென்று விட்டான். அது அவனது தலையாய கடன். நான் பெற்ற செல்வத்தை நீ காண விரும்பினுல், போர்க்களம் சென்றுதான் ஆகவேண்டும். செங்குருதி பாயும் அக்களத்திலேயே எனது இளங் காளையைக் காண முடியும்!''

இனாம்

எங்கள் கருங் கூந்தல் தைலம் நெ. 501 உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான கேசமும் நன்கு கருத்து, எப்பொழுதுமே கருமையாக வளரும். இது மயிர் உதிர்வதைத் தடுத்து, நீண்டு கருகருவென்று சுருண்டு வளரச் செய்கிறது. ஒரு சீசா விலை ரூ. 1|15. முழு உபயோகத்திற்கும் தேவையான 3 சீசாவின் விலை ரூ. 5|-. இந்த அற்புத தைலத்தை பிரபலப்படுத்துவதற்கென, அழகிறகும் உறுதிக்கும் 15 வருஷ உத்தரவாதம பெறற ஓர் அழகிய பான்ஸி கை கடியாரமும், ஒரு மோதிரமும் (நியூ கோல்ட்), 3 சீசா வாங்குபவர்களுக்கு 6 பான்ஸி கை கடியாரங்களும் மறறும் 6 மோதிரங்களும் (நியூ கோல்ட்) முற்றிலும் இலவசமாக அளிக்கப்படும். திருப்தி இல்லையேல் பணம் வாபஸ்.

AMRIT PHARMACY, (U.M.) Jullundur City.

இவ்வாறு அவள் சொல்லி முடித்த போது, அவள் பேச்சிலும் முகத்திலும பெருமிதம் பிரதிபலித்தது.

அந்த மறக்குலப் பெண்ணின் வீர உணர்ச்சியானது புலவனின் உள்ளத்திற் பாடலாக ஊற்றெடுத்துப் பாய்கின்றது:

"சிற்றில் நற்றூண் பற்றி, நின்மகன்
யாண்டுள னோஎன வினவுதி; என்மகன்
யாண்டுள னாயினும் அறியேன்; ஓரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறும் இதுவே;
தோன்றுவன் மாதோ போர்க்களந்தானே!"

— புறம்: 86

*

பண்டைத் தமிழ் மக்களின் காதல் வாழ்க்கையைக் கவினுற எடுத்துரைப்பன அகப்பொருள் நூல்கள். புறப் பொருள் நூல்களிற் பழம் பெருந் தமிழரது பேராண்மையும், அவர்களது போர் அற ஒழுக்கமும் பொதிந்து கிடக்கின்றன. "ஆண்மை நிறைந்தவன் தமிழன். அந்நாளில் அவன் வாளாண்மையால் பகைவரை வென்றான்; தாளாண்மையால் வன்னிலத்தை நன்னிலமாக்கினான்; வேளாண்மையால் வளம் பெருக்கினான். இது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்த தமிழன் நிலை,'யெனச் சொல்லின் செல்வர் – பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் பெருமிதத்துடன் பேசுகின்றார்கள்

"சிங்களம் புட்பகம் சாவக மாதிய
தீவு பலவினுஞ் சென்றேறி—அங்கு
தங்கள் புலிக்கொடி மீன்கொடி யும்நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு!"

என மகா கவி பாரதியார் செஞ்சொற்களிற் பழந்தமிழர் புகழ் பாடுகின்றார். கடல் கடந்துசென்று நாடுகளை வென்ற வீரத்தமிழர் சீனம், இத்தாலி ஆகிய தேசங்களிலும் வாணிகம் செய்தனர். அத்துடன் படைத் தொழிலையும் நன்று வளர்த்து வந்தனர்.

இத்தகைய பெருமைக் குரியவரான தமிழ் மக்கள் வீரமே பெரிதென மதித்து மாண்புடன் வாழ்ந்து வந்தனர்.

'வீரம் என்பது கொலையல்ல
வெற்றியும் அதனால் நிலையல்ல'

என அரசவைக் கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை அவர்கள் பாடுகின்றார்கள். வீரமாவது, மேலான காரியங்களில் உண்டாகும் மனத்துணிவு என்பதை நாம் அறிவோம். இதனைத் தொல்காப்பியர் 'பெருமிதம்' எனக் கூறுகின்றார்.

இப்பெருமிதம் பழந் தமிழகத்தின, அதாவது, 'வடவேங்கடம் தென்குமரி யாயிடை தமிழ் கூறும் நல்லுலகத்து' வாழ்ந்த பெண்மணிகளின் அணிகலனாக விளங்கியதெனின், திண்திறல் ஆடவர் வீரமே உருவாகத் திகழ்ந்தனர்.

*

போர்க்களம் புகுந்த வீரன் ஒருவன் பல நாட்களாகியும் விடு

திரும்பவில்லை. அவனது ஆண்மையை வியந்து அவ்வூர் மக்கள் உள மகிழ்ந்து அவன் வீடு தேடிச் சென்று, அக்காளையை ஈன்ற தாயிடம் அவனுடைய மகனைப் பற்றி அறியப் பெரிதும் ஆசைப் பட்டார்கள். அந்த ஒப்பற்ற சங்க கால நிகழ்ச்சியுடன் இக்கட்டுரையை ஆரம்பித்தேன். இவ்வீர பரம்பரையில் உதித்த மற்றுமொரு மறக்குடிப் பெண் ஒருத்தியின் வீரத்தைப் புறப் பொருள் வெண்பாவிற் காண்கின்றோம்.

*

பண்டைக் காலத்துப் பாண்டிய மன்னன் மக்களைப் போர்ப் படையிற் சேருமாறு விழித்துக் கூறினான். அப்பொழுது மறக்குடி வந்த மகள் ஒருத்தி உற்றார், பெற்றார், உறவினர் யாவரையும் விழித்துப் போர்க்களம் செல்லுமாறு ஏவினள். அவளுடைய கூற்றை ஏற்ற கணவனும், தமையனும், மைந்தனும் போர்க்களம் புகுந்தனர். அங்கு வீரங் காட்டி மாண்டனர். போர்க்களம் சென்று தனது மைந்தனின் உடலைக் கண்டாள். அவனது மார்பில் அம்புகள் பல தைக்கப் பெற்றிருந்தன. இக் காட்சியைக் கண்ட தாயானவள் வீர மகிழ்வெய்தினாள். மறுகணம் அவள் பாடுகின்றாள். அது ஒரு வெண்பாவாக அமைந்துள்ளது:

"கல்நின்றான் எந்தை; கணவன்
களப்பட்டான்;
முன்னின்று மொய்யவிந்தார் என்ஐயர்;—
பின்னின்று
கைபோய்க் கணைஉதைப்பக் காவலன்
மேலோடி
எய்போற் கிடந்தான்என் ஏறு."

தனது மகன் ஆண் சிங்கமே போற் காட்சியளித்ததைக் கண்டு அத் தாயானவள் அடைந்த வீர மகிழ்ச்சியை இன்று அணுக்குண்டுகளையும் நீர்வளிக் குண்டுகளையும் போட்டு மனித குலத்தை வாட்டும் விஞ்ஞானிகள் தாமும் அடைய முடியாது!

பண்டைத் தமிழகத்திற் பரம்பரை பரம்பரையாக வீர இரத்தம் குடும்பம் முழுவதிலும் செறிந்திருந்த தென்பதைக் 'கல்நின்றான்' என்பதும் விளக்குகின்றது. தமிழர் வீரத்தைப் போற்றி நடுகல் நாட்டினர் என்பது மற்றும் புறப்பொருள் இலக்கியங்கள் மூலமும் அறிகின்றோம்.

*

தமிழ் வீரச் சுவையினை உணர்ந்து அதில் நன்கு திளைத்த முத்தமிழ்ப் பேராசிரியரான வித்தகர் விபுலாநந்த அடிகளார் உலக மகாகவி ஷேக்ஸ்பியர், மேற்றிசை வீரனாகிய யூலியஸ் சீசர் என் போரின் வீர மொழியினை இனிய தமிழில் ஆக்கியிருப்பது பழந் தமிழ் வீரக் கவிகளை நினைப்பூட்டுகின்றது. அதிற் சில அடிகளைப் படித்து மகிழ்வோம்:

''அஞ்சினர்க்குச் சதமரண மஞ்சா நெஞ்சத்
தாடவனுக் கொருமரண மவனிமிசைப்
பிறந்தோர்
துஞ்சுவரென் றறிந்திருந்தும் சாதலுக்கு
நடுங்குந்
துன்மதிமு டரைக்கண்டாற் புன்னகை
செய்பவன் யான்
இன்னலும்யா னும்பிறந்த தொருதினத்தி
லறிவாய்
இளஞ்சிங்கக் குருளைகள்யாம் யான்
முத்தோ னெனது
பின்வருவ தின்னலெனப் பகைமன்ன
ரறிவார்
பேதுறல்பெண் ணணங்கேயான் போய்
வருதல் வேண்டும்!''

*

'சினமிசிரம் யவன ரகம் – இன்னும் தேசம் பலவும் புகழ் வீசிக் கலை' ஞானம் படைத்து வாழ்ந்த பழந்தமிழர் வீரம் பலவகைத்தானும் சிறப்புடையது. அத்தகைய மறத்தமிழர் வழிவந்த நாம் இன்று ஆட்டுப் பட்டியில் வளர்ந்த சிங்கக் குட்டிபோல் வீர உணர்ச்சி குன்றி உத்தியோக உணர்ச்சி மிக்க அடிமைகளாய் வாழுகின்றோம். இதனையே பாரதியார் ''வாய்ச் சொல்லில் வீரரடி!'' என விளம்பினார். இக்காலத்துப் புலவர் ஒருவர் அடிமை வீரத்தைச் சுவை ததும்பக் கூறியுள்ளார். அது வருமாறு:

''தந்தை மதியினுஞ் சாலுநன்மதியோன்
என்மகன் தீரன் எசமான் கோபித்
தெட்டி யுதைத்த காலினைப் பற்றி
முத்த மிட்டு முன்னின்று பணிந்து
'ஐயனின் காலுக் கடிமைதுயர் விளைத்தனன்'
என்னக் கூறி யீரைந்து வெண்பொன்
சம்பள வுயர்ச்சி சாலப் பெற்றனன்.''

இந்த இழி நிலைமை மாறி, இழந்த பெருமையை நாம் மீண்டும் பெற வேண்டும். நாம் அனைவரும் வீரத் தமிழரின் மரபினர் என்பதை மறந்துவிடக் கூடாது. தமிழன் பேரரசு கட்டியாளுந் திறன் படைத்தவன் என்பதைத் தரணியெலாம் எடுத்தோதும் காலம் நெருங்கி வருகின்றது. வீரத் தமிழனே, விழித்தெழு! ★

வளரும் தமிழ் இலக்கியம்

தென்னாட்டுப் போர்க்களங்கள்

கா. அப்பாத்துரை; ஔவை நூலகம், சென்னை-1; ரூ 7-0-0.

பாட்டுக்கொரு புலவன் பாரதி பாடுகிறான், 'வீரம் செறிந்த தமிழ் நாடு' என்று. இதன் விளைவல்ல, தொன்று தொட்டே தென்னாட்டில் போர்க்களங்களுக்குப் பஞ்சம் இருந்தது கிடையாது. தென்னகத்தில் போர்க்களங்களின் காட்சிகளையும், சுற்றுச் சார்புகளையும், அவற்றின் எதிரொலி-பலாபலன்களையும் ஆசிரியர் தேனூறும் தூய தனித் தமிழில் விவரிக்கிறார். 'சங்ககாலப் போர்கள்', 'பேரரசுப் போட்டி', 'தேசிய வாழ்வும் புது மலர்ச்சியும்' போன்ற பகுதிகளில் நுண்ணிய ஆராய்ச்சித் திறம் காணப்படுகிறது. தமிழ் இலக்கியத்தில் இந்நூல் பன்மொழிப் புலவருக்கு நிலைத்த ஓர் இடம் அமைத்துக் கொடுக்க வேண்டும். தமிழ்ப் பேராசிரியர் தம் முகப்புரையில் சொல்வதுபோல இது சிற்றேடு அல்ல; பெருநூல். 1801ல் நடந்த மக்கட் போராட்டத்திலிருந்து இது நாள் வரை நடந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்து, மேற்படி நூலின் இரண்டாம் தொகுதி ஒன்றையும் பதிப்பகத்தார் வெளியிட வேண்டும்.

சலனம்

'மாயாவி'; புதுமைப் பிரசுரம், பெண்ணாடம்; ரூ 2-0-0.

சலனம் இல்லையேல் சாந்தி இல்லை. கதையுலகத்தில் சலசலப்பை எற்படுத்திய கதை சலனம் எண்: 1. இதன் தொட்டகுறையாக 'ஐந்து சலனம்' உருவானது. வெவ்வேறு பகைப் புலனில், பாத்திரத் துணையுடன் உருப்படியாகப் புனைந்திருக்கிறார் 'மாயாவி'. பஞ்சலோகங்களைக் கொண்டு உருக்கிய நல்ல விக்கிரஹம் போன்று விளங்குகிறது இத் தொகுப்பு.

அரியக்குடி

'எல்லார்வி'; அமுத நிலையம், சென்னை-18; ரூ 3-0-0.

'செம்பை' மூலம் சங்கீத வட்டாரத்திலும் பழக்கமான 'எல்லார்வி' இப்போது 'அரியக்குடி'யைப் பற்றிக் கதை சொல்லுகிறார்; கட்டுரைகளாக எண்ணாமல் கதைபோலச் சொல்வதனால் தான் ஒரு பகுதியினருக்கு மாத்திரமே விருப்பம் தரும் இந்நூல், பெரும்பான்மையினருக்கும் ஆறுதல் தருகிறது. 'பேச்சுச் சிறப்பு' என்னும் கடைசிப் பகுதியில் அரியக்குடியை அறிந்து, அவருடன் நாமும் சேர்ந்து சிரித்து மகிழ்கின்றோம்.

மகாத்மா பொன்மொழிகள்

அரு. இராமநாதன்; பிரேமா பிரசுரம், சென்னை-24; ரூ. 0-8-0.

அன்புத் தெய்வம் அங்கங்கே உதிர்த்த பெருண்மைகளைத் தொகுத்து, முழு உருவம் கொடுத்து, குறைந்த விலையில் தந்துள்ளார், 'காதல்' ஆசிரியர். இரு தரப்பிலும் பயனளிக்கும் உயர்ந்த முயற்சி.

சிலம்புச் செல்வம்

யோகி சுத்தானந்தபாரதியார்; காவேரிப் பதிப்பகம், புதுக்கோட்டை; ரூ 3-0-0.

யோகியாரின் தமிழ்த்தொண்டின் சிறப்புக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டு இந்நூல். வெளி அட்டைக்குக் காட்டப்பட்டிருக்கின்ற அக்கறை உட்பகுதிகளில் காட்டப்படவில்லை, அச்சுவகையில்! ★



பிறைசூடி

திரை உலகம்

விமரிசனம்:

வணங்காமுடி

இப்போது படத் தயாரிப்பாளர்களுக்கு ஒரு வகையான துணிச்சல் ஏற்பட்டிருக்கிறதென்றுதான் சொல்ல வேண்டும். இப்படிச் சொல்வதற்கு, தற்சமயம் வெளியாகிக் கொண்டிருக்கும் படங்களே காரணமாகும்!

அற்புத விளக்கு அதல்ல; அவள்!—யாஸ்மின்!

— அலாவுதீனும் அற்புத விளக்கும்

மொழிபெயர்ப்புப் படங்கள் அவ்வப்போது மேடையில் தலை காட்டிய சுவடு தெரியாமலே திரை மறைவில் ஒதுங்கி ஓய்வு பெற்று வருகின்றன. 'அரசிளங்குமரன்', 'மகுடம் காத்த மங்கை' — உதாரணம். இந்நிலையிலே, பழைய கதைகள் மறுபடியும் படமுதலாளிகளை மயக்கவும் தவறவில்லை.

'அலாவுதீனும் அற்புத விளக்கும்' வந்தது. அமர்க்களமாகக் காஷ்மீருக்குச் சென்றார்கள்; படம் பிடித்தார்கள். பெரிய நட்சத்திரங்கள்தாம் நடித்திருக்கின்றனர். 'எதிர்பாருங்கள்' என்ற எச்சரிக்கை செய்யப்பட்டபோது பொதுஜனங்களிடையே ஏற்பட்ட பரபரப்பு 'இப்போது நடைபெறுகிறது' என்ற நினைவூட்டல் ஏற்பாடான பின்னர் மறைந்துவிட்டது. அலாவுதீன் வரைத்தான் அந்த மாயவிளக்கு தன் ஜாலங்களைக் காட்ட முடியும் போலும்! ஆமாம்; நமக்குத் தேவையில்லாத கதை! நம் பண்பாடு இணக்கம் தெரிவிக்க முடியாத நிகழ்ச்சிகள்!

மந்திரத்தைச் சிலர் நம்ப மாட்டார்களல்லவா? ஆனால் இவர்களுக்கெல்லாம் தந்திரமென்றால் புளிக்குமா, என்ன? என்னவோ, வாஹினி முத்திரைக்கு 'மாய மந்திரம்' என்றால் நிரம்பவும் ஈடுபாடு. 'பாதாள பைரவி'யின் புரா

ணக் கிளையாக — 'சந்திரஹார'த்தின் நல்ல திருப்பமாக—ஒரு படத்தைத் தயாரித்திருக்கிறார்கள். பெயர்: 'மாயா பஜார்'.

திரு ஜெமினி ஜோடியின் பங்கில் திருப்தி நிலவுகிறது. அபிமன்யு — வத்ஸலா ஆயிற்றே! மந்திரவாதியாகத் தோன்றிய ரங்காராவ் இங்கே கடோத்கஜனைப் பயங் காட்டுகிறார். தோற்றம், அதாவது, வேஷப் பொருத்தம் போற்றப்பட வேண்டியதுதான். திரு ராமராவ், வத்ஸலா கல்யாணத்தை முடித்து வைத்து விட்டுச் சிரிக்கின்றார்! — அற்புதமான தெய்வப் புன்னகை!

'எதிர்பாராதது' படம் பொது மக்களின் ஏகோபித்த நல்லெண்ணத்தைச் சம்பாதித்துக் கொண்டது. பரிசுகளும் கொடுக்கப்பட்டன. 'சரவணபவா — யூனிட்டி' தயாரிப்பாளர்கள் 'வணங்காமுடி'யை இப்பொழுது அறிமுகப் படுத்தியிருக்கிறார்கள்.

சுட்டும் விழிச்சுடர்:
ஒட்டும் உள்ளங்கள்!
— வணங்காமுடி

சிற்பியைக் கதைகளில் ஆயிரத்தெட்டுத் தடவை சந்தித்து அலுத்து விட்டது. படங்களிலே ஆடிக்கு ஒருமுறை அமாவாசைக்கு ஒருதரம்தான் பார்க்கிறோம்; அதுவரை நமக்குத் திருப்திதான். 'மல்லிகேஸ்வரி'க்குப் பிறகு, சிலைகளை இப்படத்தில் அடிக்கடி பார்க்கிறோம். திரு சிவாஜியை சிற்பியாக மாத்திரமல்ல, காட்டு ராஜாவாக, பாடும் கவிஞனாக, புரட்சிக்காரனாக, சொல் வீரனாக, வாள் வீரனாக வெல்லாம் காட்டியிருக்கின்றனர். சில கட்டங்கள் 'மனோகரா'வை நினைவூட்டுகின்றன. 'சிவாஜி', 'பசுபலேட்டி' சந்திப்பு இதற்குக் காரணமல்ல — கதைதான்!

கதை—வசனம் என்ற தலைப்பில் திரு ஏ. கே. வேலன் என்ற பெயர் ஒளி காட்டுகிறது.

கதை சுமாரானதுதான்:

ஒரு சிற்பி; அரண்மனை ரோஜாவின் காதல் கிட்டுகின்றது. இடையே அரசாங்கச் சுற்றுமதில்கள் குறுக்கிடுகின்றன; சிறைச்சாலை காதலுக்கு ஆறுதல் சொல்கிறது. காதல் அந்தஸ்தை அறியாது என்பார்கள். இங்கே மன்னன் மகளை ஒரு கலைஞன் காதலித்த குற்றத்திற்கு 'நாடு கடத்தல்' என்ற பரிசுதான் கிடைக்கிறது. நாடு கடத்தப்பட்டவன் மலைவாழ் மக்களுக்குத் தலைவனாகிறான். மறுபடியும் குற்றச்சாட்டு தூது செல்கிறது. இது 'முக்கோணக் காத'லின் பலாபலன்; சேனாபதியின் காதலுக்கு வரவேற்பு அளிக்க அரசிளங்குமரி மறுத்ததன் விளைவு. இடையிலே கதையில் ஒரு புதுக் குழப்பம் ஏற்பட்டு விடுகிறது. அதுதான் நரிக்குறத்தி! கடைசியில், எல்லாப் படங்களிலும் நாம் பார்ப்பது போலவே இங்கேயும் வில்லனைக் குத்தி வீழ்த்தும் பெருமை கதாநாயகனுக்கே கிடைக்கிறது; கடவுள் மாதிரி காதலும் எல்லாம் கடந்தது என்பதை நிரூபித்துக் காட்டிய பெருமையைக் கதாநாயகிக்குக் கொடுக்கிறார்கள். சிவாஜியும் சாவித்திரியும் மாலைகளைப்

பரிமாறிக் கொண்டு வணக்கம் சொல்கிறர்கள்—படத்திலே!

திரு கணேசனைப் பொறுத்தவரை எந்தப் படத்திலும் தன் பங்கை முழு மனத்துடன் நிறைவேற்றி விடும் பொறுப்புணர்ச்சியைப் பார்க்கிறோம். 'வணங்காமுடி'யும் இதற்கு விலக்கல்ல. திருமதி சாவித்திரிக்கு இரட்டை வேஷம். ஒன்று: இளவரசி; இரண்டு: நரிக்குறத்தி. ஒன்றுக்கொன்று மாறுபட்ட பாத்திரம்; நன்ருகவே செய்திருக்கிறர். திருமதி கண்ணும்பாவை இதிலும் கடைசி வரை நாம் பார்க்க முடியவில்லை; அவரை பீரங்கி கொன்று விடுகிறது. 'பெண்ணரசி'யில் பார்த்த ஆடலழகியை — அதிசய விளக்கில் சுடர் காட்டிய சித்தாராவை — ராஜசுலோசனவை இப்போதும் காண்கிறோம். திரு நம்பியார் வில்லன். திரு நாகையாவுக்கு 'எதிர்பாராதது' திரைச் சித்திரத்தில்தான் அதிக வேலை. தங்கவேலுவை 'மாயா பஜார்' போல இதிலும் ரசிக்க முடிகிறது.

திரு ஏ. கே. வேலனின் பெயர் வசனங்கள் மூலம் நிலை பெற உதவுவது 'வணங்காமுடி' ஒன்று தான்!

பார்க்க வேண்டிய அருமையான படங்களில் 'வணங்காமுடி'யும் ஒன்று. திரு பாலுவும் சுந்தரமும் சேர்ந்த நிர்வாகத் திறமையைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம்.

—'பைரவி' ★

தந்தி: "ORCAS" (ஸ்தாபிதம் 1946) போன் 55357.
சீனு அண்ட் கோ., 28, R. தாண்டவராய கிராமணி தெரு, மதராஸ்-21.
சிலோன் ஏஜண்டுகள்: N. C. M. ஸ்டோர்ஸ் 82 மெயின் தெரு, கொழும்பு-11. (ADVT. PERMITTED UNDER G.O. MS. NO 1121, HEALTH)

உங்கள் அதிருஷ்டம் 1957க்கு

உங்கள் பெயரும், முழு விலாசமும் கொண்ட ஒரு தபால் கார்டில் ஏதாவது ஒரு புஷ்பத்தின் பெயரை எழுதி எங்களுக்கு அனுப்புங்கள். ரூ. 1–4–0-க்கு (தபால் செலவு தனி) வரப்போகும் 12-மாதங்களுக்கு நாங்கள் உங்களுக்கு எதிர்கால பலன் எழுதி அனுப்புகிறோம். வியாபாரத்தில் லாப நஷ்டம், உத்தியோக உயர்வு, உத்தியோக மாற்றல், விவாகம், குழந்தை பிறப்பு, சுக துக்கங்கள் ஆகியவை பற்றிய விவரங்களையும், இன்னல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் மார்க்கத்தையும் தெரிவிக்கிறோம்.



Shree Swami SATNARAIN JYOTISH ASHRAM
(U.M.) HOSHIARPUR (Pb.)

197222



நான்கு
நன்மணிகள்
ZAMA
INHALER
ஜாமா இன்ஹேலர்
ஜலதோஷத்திற்கு
ZAMA RUB
ஜாமா றப்
ஜலதோஷம்
தலைவலி முதலியவைகளுக்கு
ஜாமா ஆயில்
ஜலதோஷம்
தலைவலி முதலியவைகளுக்கு
AMARCOSE
அமர்கோஸ்
அசல் குளுகோஸ் பவுடர்
அமர்சந்த் சோபாசந்த்
தபால் பெட்டி 518 - - - சென்னை-3
போன் 2182 தந்தி "ஜாமா"

மாய மோதிரம்! ரொக்கப் பரிசு ரூ. 1,000!
(அபூர்வ சக்தியுடையது)

இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும், மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப்பட்டது. யாராவதொருவர் இம்மோதிரத்தை அணிந்து கொள்ளுங்கள்; உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது, உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்தேவதைகள் உங்களிடம் அணுகாது. இந்த மாய மோதிரத்தை அணிந்து கொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள். இவர் பெயரைக் கேட்டாலே நடுங்குவர். காணமற் போனவர்களைக் கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழக்குகளிலும், உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றி யடைவீர்கள். சுருங்கச் சொன்னால் இம் மோதிரம் ஒரு பாதுகாப்பாளனைப் போன்றது. ஒரு முறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை ரூ. 1-15-0. ஸ்பெஷல் ரூ. 3-0-0. ஸ்பெஷல் அதிக சக்தி வாய்ந்தது ரூ. 3-15-0. தபால் செலவு தனி. பலன் இல்லையென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Principal: THE BENGAL MESMERISM HOUSE
(U. M.) NAKODAR, (P. B)

அச்சிட்டு வெளியிடுபவர், ஆசிரியர்: ஜி. உமாபதி, உமா பிரிண்டர்ஸ்,
4/32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1 (தமிழ் நாடு) போன்: 2200.

அன்னையின் உற்ற தோழி
'ஐயோ பாவம்! குழந்தைக்கு மறுபடி சளிப்பு.
அச்...ச் அச் அச் அச் ச்
நல்ல முடக்கு வாதம்! வலி தாங்கமுடியவில்லை இன்றைக்கு ஆபீஸுக்குப் போனற்போல் தான்.
அம்மா! என் கால் சுளுக்கிண்டுடுத்தே. இன்னிக்கி எப்படி மாட்ச் ஆடுவேன்.
டாக்டரின் அறையில்
...ஆமாம், அம்மா! தலைவலிக்கு மட்டுமல்ல. லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம், சுளுக்கு, பிடிப்பு, வாதம் மற்றும் எல்லா வலிகளுக்கும் மிகச்சிறந்தது. சளிக்கும், இருமலுக்கும், இணையற்ற நிவாரணி. நீங்கள் எப்பொழுதும் கைவசம் வைத்திருக்க வேண்டும்.
சில நாழிகைகளுக்குப்பின்
ஓரியண்டல் பாம் தான் உங்களை இவ்வளவு சீக்கிரம் குணப்படுத்தியது.
ஆமாம்: நான் ஆபீஸுக்குக் கிளம்பியாச்சு! இலையைப்போடு
நானும் கூட இன்றைக்கு மாட்சிலே சக்கை போடு போடப் போகிறேன் அப்பா!
ஒவ்வொரு வீட்டிலும் லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் அவசியம் இருக்க வேண்டும்
லிட்டில்ஸ்
ஓரியண்டல் பாம்
எல்லா சளி, வலி, நோவுகளுக்கும்

Regd. No. M 6309 UMA May 1957
Registered as a Newspaper in Ceylon.

இலங்கையில் கிடைக்கும் இடம்: AVRA Ltd., Colombo.

Edited, Printed and Published by G. Umapathy, at Uma Printers, "Uma House" 4/32, Thathamuthiappan Street, Madras-1. (Tamil Nadu)